
சுவடி : 43
ஏடு : 7
சனவரி 2019
*
ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**தமிழேந்தி**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி.துரைசித்தார்த்தன்**
**ஆ. முத்தமிழ்ச்செல்வன்**
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
**'சிந்தனையாளன்'**
மனை எண்.277/2
சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை,
அம்பத்தூர், சென்னை - 600 050.
தொடர்புக்கு :
**94448 04980**
**95975 26990**
மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly
@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*



# நம் குறிக்கோள் : உண்மையான இந்தியக் கூட்டாட்சி! மேலும் ஒரு விளக்கம்!



நாம், மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியினர் - நம் குறிக்கோள் பற்றித் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

அருள்கூர்ந்து, 2018 திசம்பர் "சிந்தனையாளன்" இதழில் "நம் குறிக்கோள்" பற்றி வெளியிடப்பட்டுள்ள தலையங்கக் கட்டுரையை, நம் தோழர்கள் எல்லோரும் மீண்டும் ஒருமுறை படியுங்கள் என வேண்டுகிறேன்.

அக்கட்டுரையின் முடிவில், "நாம் விரும்பும் கூட்டாட்சி என்பதன் வடிவம் என்ன?" என்ற பகுதியில் சொல்லப்பட்டிருப்பது பற்றி - இப்படிப்பட்ட அரசை, இந்திய அரசு 1955இல் ஜம்மு-காஷ்மீர் அரசுக்கு வழங்கியிருந்தது என்பதை நாம் அறிதல் வேண்டும்.

1. இந்தியாவுக்கு ஓர் அரசமைப்புச் சட்டம் உண்டு.
   ஜம்மு-காஷ்மீருக்குத் தனியாக ஓர் அரசமைப்புச் சட்டம் உண்டு;
   இந்திய அரசமைப்புச் சட்டத்தை அது ஒத்துக் கொண்டது.
2. இந்தியாவுக்கு ஒரு குடிஅரசுத் தலைவர் உண்டு.
   ஜம்மு-காஷ்மீருக்கு ஒரு குடிஅரசுத் தலைவர் உண்டு.
3. இந்தியாவுக்கு ஒரு பிரதமர் உண்டு.
   ஜம்மு-காஷ்மீருக்கு ஒரு பிரதமர் உண்டு.
4. இந்தியாவுக்கு ஓர் உச்சநீதிமன்றம் உண்டு.
   ஜம்மு-காஷ்மீருக்கு ஓர் உச்சநீதிமன்றம் உண்டு.
5. ஒவ்வொரு இந்தியனுக்கும் இந்தியக் குடிஉரிமை உண்டு.
   ஒவ்வொரு காஷ்மீரிக்கும் முதலில் காஷ்மீர் குடி உரிமையும், அடுத்து, அத்துடன் இந்தியக் குடி உரிமையும் உண்டு.
6. இந்தியாவுக்கு ஒரு தேசியக் கொடி உண்டு.
   ஜம்மு-காஷ்மீருக்குத் தனித் தேசியக் கொடி உண்டு.
7. ஜம்மு-காஷ்மீரின் "நிரந்தரக் குடிமக்கள் யார்?" என்பதை ஜம்மு-காஷ்மீர் சட்டமன்றம் தீர்மானிக்கும் என்ற, 35-A விதி 1954இல், இந்தியக் குடிஅரசுத் தலைவரின் ஆணைப்படி - இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இடம்பெற்றது.

இவ்வளவு துல்லியமான தன்னுரிமை கொண்ட அரசமைப்புச் சட்டத்தை, ஜம்மு-காஷ்மீர் அரசமைப்பு அவை, 1955இல் இயற்றியது.

ஆனால், இவ்வளவு தன்னுரிமை அதிகாரங்களையும் கொண்ட ஜம்மு-காஷ்மீர் அரசிடமிருந்து, 1 முதல் 5 வரை சொல்லப்பட்ட அனைத்துத் தன்னுரிமை அதிகாரங்களையும், இந்தியப் பிரதமராக இருந்த பண்டித நேரு பறித்துக் கொண்டார்.

அதனால், ஜம்மு-காஷ்மீருக்குக் குடிஅரசுத் தலைவர் இல்லை; ஆளுநர் தான் உண்டு.

ஜம்மு-காஷ்மீருக்குப் பிரதமர் இல்லை; முதலமைச்சர் தான் உண்டு.

ஜம்மு-காஷ்மீருக்குத் தனி உச்சநீதிமன்றம் இல்லை; உயர்நீதிமன்றம் தான் உண்டு.

ஜம்மு-காஷ்மீர் பெற்றிருந்த ஓர் அதிகாரம் தவிர, மற்றெல்லா அதிகாரங்களையும் காங்கிரசு ஆட்சியினர் பறித்துக் கொண்டனர்.

எஞ்சியிருக்கிற உரிமை என்ன?

"காஷ்மீர் நிரந்தரக் குடிமக்களும், அவர்களின் வாரிசுகளும் தவிர்த்த - மற்ற இந்தியர் எவரும், ஜம்மு-காஷ்மீரில் அசையாச் சொத்து வாங்கிட முடியாது" என்பதுதான்.

இந்த ஓர் அதிகாரத்தையும் பறித்துக் கொள்ள இன்றைய பாரதிய சனதா அரசு முயற்சிக்கிறது. இது உண்மை.

அண்மைக்காலம் வரையில், ஜம்மு-காஷ்மீர் முதலமைச்சராக இருந்த மக்கள் சனநாயகக் கட்சியைச் சார்ந்த மெஹ்பூபா முப்தி, அவுட்லுக் (Outlook 10.12.18) ஆங்கில வார இதழுக்கு அண்மையில் அளித்த நேர் காணலில்,

"மக்கள் சனநாயகக் கட்சிக்கும், பாரதிய சனதாக் கட்சிக்கும் இடையே இருந்த கூட்டு முறிந்த பின்னர், ஜம்மு-காஷ்மீர் மக்களின் நலனுக்கு எதிராக - பாரதிய சனதா அரசு 1) ஜம்மு-காஷ்மீர் வங்கியின் அதிகார வரம்பைக் குறைத்தது; 2) 35-அ (35-A) இந்திய அரசமைப்பில் உள்ள விதியின்படி 'காஷ்மீர் நிரந்தரக் குடிமக்களுக்கு' உள்ள தனி உரிமையைப் பறிக்க எல்லாம் செய்கிறது; இதுபற்றி நான் பிரதமர் மோடி அவர்களிடம் நேரில் கேட்டேன், அவர், அப்படியெல்லாம் நடக்காது என்று சொன்னார், ஆனால், இதுபற்றி உச்சநீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கில், இந்திய அரசு, எங்களுக்கு உள்ள இந்தத் தனி உரிமையைக் காத்திட ஏற்ற வகையில், வழக்கை எதிர்கொள்ள வில்லை" என்று கூறியுள்ளார்.

இது, இன்று நாம் சிந்திக்க வேண்டிய முதன்மையான செய்தி.

இவை மட்டும் அல்ல.

இன்று நான் பயன்படுத்தும், "இந்திய அரசமைப்புச் சட்ட நூல்" (ஆங்கிலம் - இந்தி இணைந்தது) இந்திய அரசினால் 25-3-2014இல் வெளியிடப்பட்டது. இதில் 1 முதல் 395 விதிகள் உள்ளன.

ஆனால், மேலே நான் குறிப்பிட்டுள்ள - ஜம்மு-காஷ்மீர் பற்றிய 35-Aஆம் விதியும், இந்திய அரசமைப்பின் 370ஆம் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள 238ஆம் விதியும் இந்திய அரசு வெளியிட்ட இந்த நூலில் அச்சிடப்படவில்லை. ஏன்? ஏன்?

**இதுதான் அரசியல் மோசடி என்பது.**

**இப்படிப்பட்ட இந்திய வல்லாதிக்க அரசுடன் நாம் போராட வேண்டும்.**

**இதை நம் மா.பெ.பொ.க. தோழர் ஒவ்வொருவரும், தமிழர் தன்னுரிமை கோரும் ஒவ்வொருவரும், தனி நாடு கோரும் ஒவ்வொருவரும் துல்லியமாக உணர வேண்டும் என்பது என் பணிவான வேண்டுகோள்,**

**01.01.2019** **- வே. ஆனைமுத்து**

## காற்று மண்டலத்தையும் சுற்றுச்சூழலையும் 50 ஆண்டுகளில் 60% கெடுத்துவிட்டோம்! மானிடத்துக்கு மனிதர்களே பகை!

மண்ணில், வனத்தில், விலங்குகள், பறவைகள், பூச்சிகள், மரங்கள், செடி கொடிகள் என 80 விழுக்காட்டு உயிர்கள் வாழ்கின்றன. அந்த மண்ணை நாம் கெடுத்துவிட்டோம்.

எப்படி?

30 விழுக்காடு மண்ணை மட்டுமே காடுகளுக்கு என்று ஒதுக்கினோம்.

2000 முதல் 2010க்குள் வெப்ப நாடுகளிலும், மித வெப்ப நாடுகளிலும் 40 விழுக்காடு காடுகளின் பரப்பை வேளாண் பெரும் பண்ணைகளுக்காக அழித்துவிட்டோம்.

1971 முதல் கோதுமை, அரிசி உற்பத்தியை முறையே 116% அளவுக்கும், 133% அளவுக்கும் பெருக்கிவிட்டோம். வளர்ந்துவிட்ட மக்கள் தொகையை வாழ வைக்க, இவற்றைச் செய்தோம்.

பலரும் எதிர்பார்க்கிறபடி, கி.பி.2050இல் இம்மண்ணில் 980 கோடி மக்கள் வாழ்வார்கள்; அந்த அளவுக்கு விரைவாக மக்கள் பெருக்கம் வளர்கிறது.

**கடந்த 50 ஆண்டுகளில் மனிதனின் சராசரி வயது வளர்ந்துள்ளது. அதற்காக நாம் பெருமை அடையலாம்; ஆனால், நாம் காற்று மண்டலத்தையும், சுற்றுச்சூழலையும் பாழ்படுத்தி இருக்கிறோம்.**

செய்தி : "Times of India", 2-12-2018

# 06-01-2019 ஞாயிறு அன்று சென்னையில் திரளுங்கள்!

நாம் மட்டுமே, 1997 முதல் "சிந்தனையாளன்" இதழின் சார்பில்,
ஆண்டுதோறும் - வருந்தி முயன்று
பொங்கல் மலரைச் சிறப்பாக வெளியிடுகிறோம்!

## நான் பங்கேற்கும் கடைசி மலர் வெளியீடாக இது இருக்கலாம்!

தந்தை பெரியாரின் 60ஆம் ஆண்டு பிறந்த நாளை 1939இல் நம் இயக்க முன்னோடிகள் கொண்டாடினார்கள்.

1956 முதல் "விடுதலை" ஏட்டின் சார்பில், "பெரியார் பிறந்த நாள் மலர்" வெளியிடப்பட்டது.

தந்தை பெரியாரின் "95ஆம் பிறந்த நாள் விழா மலர்", "விடுதலை" சார்பில் சென்னையில் பெரியார் திடலில் 17-9-1973இல் சிறப்புற வெளியிடப்பட்டது.

அவருடைய பிறந்த நாள் மலரில் அவரே முதலாவது கட்டுரையைத் தவறாமல் எழுதினார்.

தம் 95ஆம் பிறந்த நாள் மலரில், எடுத்த எடுப்பில் "அடுத்த பிறந்த நாள் மலருக்கு, நான் கட்டுரை எழுதும் வாய்ப்பு இருக்குமா என அய்யுறுகிறேன்" என வெளிப்படையாகக் குறிப்பிட்டார். அவருடைய உடல்நிலை அன்று அப்படி எண்ணச் செய்தது.

**தம் 95ஆம் அகவையில் 98 நாள்கள் வாழ்ந்தார்; அந்த 98 நாள்களில் 35 நாள்கள் பயணம் செய்தார்; கூட்டங்களில் பேசினார்.**

**இன்று நாம் அவருடைய கணிப்புப் பற்றி எண்ணி, எண்ணி வருந்துகிறோம்.**

நான் 21-6-2017இல் 93ஆம் ஆண்டில் நுழைந்தேன். 2017இல் கடைசிப் பயணமாகத் தொல்லியல் துறையைப் பற்றி முடிந்ததைச் செய்திடத் தில்லிக்குச் சென்றேன்.

மேதை டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாள் விழா - பாவேந்தர் விழாவில் 2017 ஏப்பிரலில் சில ஊர்களில் பங்கேற்றேன்.

2017 மே திங்களில் மருதூர், பொன்பரப்பி போன்ற ஊர்களில் 2 திருமணங்களில் பங்கேற்றேன். அப்போது நான் நோய்வாய்ப்பட்டேன்.

7-1-2018 ஞாயிறு அன்று சிந்தனையாளன் பொங்கல் மலர் வெளியீட்டில் பங்கேற்றேன். 2018இல் சில துக்க நிகழ்ச்சிகளில் நேரில் பங்கேற்றேன்.

**2018, பொங்கல் மலர் வருவாய் எப்போதையும் விட, மிக அதிகமானது. அதனால் 2018 ஆண்டு முழுவதிலும் தவக்கமின்றிச் சிந்தனையாளன் இதழ் வெளிவந்தது.**

இந்த 2019 பொங்கல் மலர் நல்ல கட்டுரைகளையும், கவிதைகளையும் கொண்டிலங்கும்.

**அருள்கூர்ந்து, இந்த 2019 சனவரி இதழைப் பெற்ற பின்னரும், நீங்கள் மனம் வைத்து நன்கொடை திரட்ட முடியும்; திரட்டுங்கள்,**

**மா.பெ.பொ.க. தோழர்களும், மேதை அம்பேத்கர் இயக்கத்தினரும், மார்க்சியத் தோழர்களும் ஒருங்கிணைந்து, தனிப் பேருந்திலும், தனி மகிழுந்திலும், தொடர்வண்டியிலும் குறைந்தது 700, 800 பேர் சென்னைக்குத் திரண்டு வாருங்கள்.**

6-1-2019 அன்றைய, சிந்தனையாளன் பொங்கல் மலர் வெளியீட்டு விழாவிலும், இரண்டு மாநாடுகளிலும் நான் பங்கேற்பேன் எனத் திடமாக நம்புகிறேன்.

ஆனால், 5-1-2020 ஞாயிறு அன்றைய "சிந்தனையாளன்" பொங்கல் மலர் வெளியீட்டு விழாவுக்கு நான் இருப்பேனா-இருந்தாலும் அன்றைய சிந்தனையாளன் பொங்கல் மலர் வெளியீட்டு விழாவில் பங்கேற்று, உரையாற்றுவேனா என்பது ஒரு கேள்விக்குறி.

நீங்கள் எல்லோரும் நலமாக வாழ்ந்து, மா.பெ.பொ.க.வின் குறிக்கோளை அடைய முயலுங்கள்.

அதற்கு ஏற்ற வலிமையான கருவியாக, "சிந்தனையாளன்" இதழை வளர்த்தெடுங்கள் என அனைவரையும் அன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.

**01-01-2019** — **- வே. ஆனைமுத்து**

**2019 ஆம் ஆண்டில், புதிதாக,**
**"சிந்தனையாளன்"**
**உறுப்பினர் கட்டணம்**
**3,000 பேர்களிடம்**
**பெறுங்கள்!**

# சிந்தனையாளன் பொங்கல் மலர் - 2019
# வெளியீட்டு விழா
# மத ஆதிக்க எதிர்ப்பு மாநாடு-தமிழ்வழிக்கல்வி மாநாடு
# புலவர் கி.த.ப. அரங்கம்

நாள் : **06-01-2019, ஞாயிறு**

இடம் : **சந்திரசேகர் திருமண மண்டபம் (தில்லை நாயகி மேடை)**

மேற்கு மாம்பலம், சென்னை-33.

முதல் அமர்வு : முற்பகல் 10.00 மணிமுதல் 11.30 மணிவரை

## சிந்தனையாளன் பொங்கல் மலர் – 2019 வெளியீட்டு விழா

தலைமை : **தி. துரை சித்தார்த்தன்,** துணைப் பொதுச் செயலாளர், மா.பெ.பொ.க.

வரவேற்புரை :

தாம்பரம் **மா. சுப்பிரமணி,** காஞ்சி மாவட்டத் துணைச் செயலாளர், மா.பெ.பொ.க.

மலரை வெளியிட்டுச் சிறப்புரை : புலவர் **ந. செந்தலை கவுதமன்,** பாவேந்தர் பேரவை, சூலூர்

முதல்படி பெறுபவர் : மாம்பலம் **ஆ. சந்திரசேகர்**

***மலர் பெறுவோர் :***

வரகூர் **மா. நாராயணசாமி**
பெரம்பலூர் மாவட்டச் செயலாளர்

**ஆ.கு. ஆறுமுகம்**
விழுப்புரம் மாவட்டச் செயலாளர்

**இரா. கலியபெருமாள்**
திருச்சி மாவட்டச் செயலாளர்

**செ. ஆனையப்பன்**
சேலம் மாவட்டச் செயலாளர்

**முத்து அன்பழகன்**
நாகை மாவட்டச் செயலாளர்

**பா.வை. அருண்மொழி**
சென்னை மாவட்டத் துணைச் செயலாளர்

**மு. செயப்பிரகாசு**
காஞ்சி நகரச் செயலாளர்

**கு. தொல்காப்பியன்**
மா.பெ.பொ.க. ஓசூர்

***கருத்துரை :***

**சி. நடராசன்**
காஞ்சி மாவட்டச் செயலாளர்

**பொ. சுப்பிரமணியன்**
திருவண்ணாமலை மாவட்டச் செயலாளர்

**இரா. கலியமூர்த்தி**
அரியலூர் மாவட்டச் செயலாளர்

**நா. மதனகவி**
வாணியம்பாடி நகரச் செயலாளர்

இரண்டாம் அமர்வு : முற்பகல் 11.30 மணிமுதல் 1.30 மணிவரை

## மத ஆதிக்க எதிர்ப்பு மாநாடு

தலைமை : **க. முகிலன்,** தலைமைக்குழு உறுப்பினர், மா.பெ.பொ.க.

வரவேற்புரை : **மோ.சி. சங்கர்,** வேலூர் மாவட்டச் செயலாளர்

மாநாட்டுத் தொடக்க உரை :

தோழர் விடுதலை **க. இராசேந்திரன்,** பொதுச் செயலாளர், திராவிடர் விடுதலைக் கழகம்

**கருத்துரை :**

கவிஞர் **தமிழேந்தி**
மாநிலச் செயலாளர்
புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றம்

**துரை. கலையரசு**
செயலாளர், பெரியார் ஈ.வெ.ரா.-
நாகம்மை அறக்கட்டளை

**இரா. பகுத்தறிவாளன்**
மா.பெ.பொ.க. மாணவர்-இளைஞரணி

**ந. கருணாகரன்**
புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றம், திருச்சி

**இரா. திருநாவுக்கரசு**
புதுவை மாநிலச் செயலாளர், மா.பெ.பொ.க.

**சா. குப்பன்**
தொழிலாளரணிச் செயலாளர், மா.பெ.பொ.க.

**மு. சாமிநாதன்**
வேலூர் மாவட்டச் செயலாளர், பு.க.க.இ.ம.

**குறளமிழ்தன்**
புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றம், காஞ்சி

**தி.ச. குணசேகரன்**
பு.க.க.இ.ம. திருக்கழுக்குன்றம்

**சிறப்புரை :** முனைவர் **ந.மணிமேகலை**
தலைவர், மகளிர் இயல்துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி

**நன்றியுரை : மீ. தில்லிபாபு,** வேலூர் நகரச் செயலாளர், மா.பெ.பொ.க.
(நண்பகல் உணவு : பிற்பகல் 1.30 முதல் 2.30)

மூன்றாம் அமர்வு : பிற்பகல் 3.00 மணிமுதல் இரவு 7.00 மணிவரை

## தமிழ்வழிக்கல்வி மாநாடு

தலைமை : **சி. பெரியசாமி,** துணைப் பொதுச் செயலாளர், மா.பெ.பொ.க.

வரவேற்புரை : **கோ. கோதண்டராமன்,** மா.பெ.பொ.க. வேளாண் அணிச் செயலாளர்

மாநாட்டுத் தொடக்க உரை :
பேராசிரியர் **சோம. இராசேந்திரன்,** நேரு நினைவுக் கல்லூரி, புத்தனாம்பட்டி, திருச்சி

**கருத்துரை :**

**இரா. பச்சமலை**
மா.பெ.பொ.க. சென்னை

**மு. சிவலிங்கம்**
கணித் தமிழ்ச்சங்கம், அய்தராபாத்

**கோ. அறிவழகன்**
மா.பெ.பொ.க. நெய்வேலி

**பா.மோகன்,** கடலூர் மாவட்டச் செயலாளர்

முனைவர் **சி.ரா. இளங்கோவன்** சிதம்பரம்

**கோவி இராமலிங்கம்**
மகளிரணிச் செயலாளர், மா.பெ.பொ.க.

**சிறப்புரை :**

தோழர் **இனாமுல் அசன்,** சமூக நல்லிணக்க ஒருங்கிணைப்பாளர், புதுதில்லி

தோழர் **ஆழி. செந்தில்நாதன்,** ஒருங்கிணைப்பாளர், தன்னாட்சித் தமிழகம்

தோழர் **பொழிலன்,** ஒருங்கிணைப்பாளர், தமிழக மக்கள் முன்னணி

முனைவர் **சந்தீப் பாண்டே,** மேனாள் பேராசிரியர், ஐ.ஐ.டி. வாரணாசி

(**Dr. SANDEEP PANDEY,** Ex. Prof. I.I.T.Varanasi)

**மாநாட்டு நிறைவுரை :** தோழர் **வே. ஆனைமுத்து,** பொதுச் செயலாளர், மா.பெ.பொ.க.

**நன்றியுரை : ப. வடிவேலு,** மா.பெ.பொ.க.

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி**

## திருச்சியில்

# திசம்பர் 23 அன்று கருஞ்சட்டைப் பேரணி தமிழின உரிமை மீட்பு மாநாடு



திருச்சியில் தந்தை பெரியார் நினைவு நாளை முன்னிட்டு, பெரியாரிய உணர்வாகள் கூட்டமைப்பின் சார்பில் திசம்பர் 23 அன்று மாலை 4.00 மணிக்கு உறையூர் அண்ணாமலை நகர், சாஸ்திரி சாலை வழி பத்தாயிரம் கணக்கில் பெரியாா தொண்டர்கள் பங்கேற்ற நீண்ட நெடிய "கருஞ்சட்டைப் பேரணியும்" அதனைத் தொடர்ந்து உழவர் சந்தைத் திடலில் பெரும் திரளான மக்கள் கலந்து கொண்ட தமிழின உரிமை மீட்பு மாநாடும் மாலை 5 மணிக்கு நடைபெற்றது. அனைத்து பெரியாரிய இயக்கங்களின் தலைவர்களும், படைப்பாளிகளும், செயல் பாட்டாளர்களும், தமிழறிஞர்களும், ஆய்வாளர் களும் பங்கேற்று மாநாட்டில் உரையாற்றினர். இந்த மாநாட்டில் பெரியாரியத்தின் முக்கியத்துவம் குறித்தும், காவிப் பாசிசத்தை வீழ்த்த வேண்டியதன் அவசியம் குறித்தும், தமிழினத்தின் அரசியல், பொருளாதார, பண்பாட்டு உரிமைகளை மீட்க வேண்டியதன் அவசியம் குறித்தும் உரையாற்றினர். மாநாட்டு மேடையில் மூன்று இணையர்களுக்கு சுயமரியாதை திருமணம் செய்து வைக்கப்பட்டது. மாநாட்டில் விடுதலை தமிழ்ப்புலிகள் கட்சியின் தலைவர் குடந்தை அரசன் வரவேற்புரை யாற்றினார். மாநாட்டிற்கு தமிழக மக்கள் முன்னணியின் ஒருங்கிணைப் பாளர் பொழிலன் தலைமையேற்றார். மாநாட்டின் நோக்கம் குறித்தான நோக்கவுரையை மே பதினேழு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி பேசினார். தமிழ்ப்புலிகள் கட்சியின் தலைவர் நாகை திருவள்ளுவன் அவர்கள் தொடக்க உரையாற்றினார். தமிழக மக்கள் புரட்சிக் கழகத்தின் தலைவர் அரங்க குணசேகரன் மாநாட்டின் தீர்மானங்களை முன்மொழிந்தார். திராவிடர் கழகத்தின் தலைவர் கி.வீரமணி, மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலாளர் வே.ஆனைமுத்து, திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர் கொளத்தூர் மணி, தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் பொதுச்செயலாளர் கோவை ராமகிருஷ்ணன், திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை யின் தலைவர் சுப.வீரபாண்டியன், ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி அரிபரந்தாமன், ஆதித் தமிழர் பேரவையின் தலைவர் அதியமான், தியாகி இம்மானு வேல் பேரவையின் தலைவர் பூ.சந்திரபோசு, தமிழக மக்கள் சனநாயகக் கட்சியின் தலைவர் கே.எம்.செரீப், ஆய்வறிஞர் பேரா. க.நெடுஞ்செழியன், சொல்லாய்வு அறிஞர் அருளியார், பண்பாட்டு ஆய்வாளர் பேரா. தொ.பரமசிவன், பொருளியல் அறிஞர் பேரா.ஜெயரஞ்சன், தாளாண்மை உழவர் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் கோ.திருநாவுக்கரசு, தமிழர் விடியல் கட்சியின் ஒருங்கிணைப் பாளர் டைசன், திராவிடர் தமிழர் கட்சியின் தலைவர் வெண்மணி, மக்கள் விடுதலைக் கட்சியின் தலைவர் முருகவேல்ராசன், புதிய குரல் அமைப்பின் தோழர் ஓவியா, தமிழ்த்தேச மக்கள் முன்னணியின் தலைவர் மீ.த.பாண்டியன், சமூக செயல்பாட்டாளர் பேராசிரியர் சரஸ்வதி, கரும்பனை கலை இலக்கிய ஊடகத் தளத்தின் தோழர் ஓவியர் ட்ராட்ஸ்கி மருது, மக்கள் அரசு கட்சியின் தலைவர் வழக்கறிஞர் ரஜினிகாந்த், வழக்கறிஞர் பாலமுருகன், தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கத்தின் தோழர் நிலவழகன், காஞ்சி மக்கள் மன்றத்தின் தோழர் மகேசு, திரைப்பட இயக்குநர் கரு.பழனியப்பன், திரைப்பட இயக்குநர் கோபி நயினார், சின்னத்திரைத் தமிழ்ப் பண்பாட்டுப் பேரவையின் தோழர் கவிதா பாரதி, டிசம்பர் 3 இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் தீபக், தமிழ்த்தேச நடுவத்தின் தோழர் கண.குறிஞ்சி, தமிழ்நாடு திராவிடர் கழகத்தின் ஒருங்கிணைப்பாளர் கா.சு.நாகராஜன், நீரோடை அமைப்பின் தோழர் நிலவன், காவிரி ஆறு பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தோழர் முகிலன், பூவுலகின் நண்பர்கள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் சுந்தர்ராஜன், தற்சார்பு விவசாயிகள் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் கி.வே.பொன்னை யன், இனங்களின் இறையாண்மைக்கான இளைஞர் மாணவர் இயக்கத்தின் தோழர் பாவெல், தமிழர் விடுதலைக் கழகத்தின் ஒருங்கிணைப்பாளர் சௌ.சுந்தர மூர்த்தி, ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தின் தோழர் பார்த்திபன், ஆதித்தமிழர் விடுதலை இயக்கத்தின் தோழர் வினோத், கீற்று இணைய ஊடக ஆசிரியர் நந்தன், தமிழ்தமிழர் இயக்கத்தின் தோழர் பரிதி, தமிழர் உரிமை இயக்கத்தின் தோழர் சுப்பு மகேசு, ஐந்திணை கலை பண்பாட்டு இயக்கத்தின் தோழர் காஞ்சி அமுதன், எழுத்தாளர் தோழர் பாமரன் ஆகியோர் மாநாட்டில் சிறப்புரையாளர்களாக பங்கேற்றனர்.

கருஞ்சட்டைப் பேரணியில் பல பல்லாயிரக்கணக்கில் இருபால் இளைஞர்களும் கலந்துக் கொண்டு பெரியாரின் கொள்கை கோட்பாடு சார்ந்த முழக்கங்களை வானதிர முழங்கி திருச்சியையும் தமிழகத்தையும் உலுக்கிவிட்ட னர். இது பெரியாரின் தத்துவங்கள் உயிர்ப்புடன் துடிப்புடன் தமிழ் மண்ணுடன் பின்னிப் பிணைந்துள்ள தின் வெளிப்பாடாகும். இப்பெரியாரின் "கருஞ்சட்டைப் பேரணியும் மாநாடும்" தமிழக, தமிழர்களின் எதிரிகளை நிலைகுழைந்து நடுநடுங்க வைத்து விட்டது. தமிழர் உரிமை மீட்பு தொடர்பான தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

# பெரியாரின் கருஞ்சட்டைத் தோழர்களின் எழுச்சி

தமிழ் மொழியும் தமிழர் வாழ்வும் செழிக்க வேண்டு மெனில், தமிழர்களிடையே ஒற்றுமை வேண்டும் என வலியுறுத்தி,

**வெள்ளம்போல் தமிழர் கூட்டம்**
**வீரம்கொள் கூட்டம் அன்னார்**
**உள்ளத்தால் ஒருவரே மற்று**
**உடலினால் பலராய்க் காண்பார்**

என்று பாடினார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

பெரியாரின் கைத்தடிகொண்டு மட்டுமே தமிழ் மண்ணி லிருந்து காவி பயங்கரவாதத்தையும், இந்திய - பன்னாட்டு ஏகாதிபத்தியத்தையும், வடமொழி - வடவர் ஆதிக்கத்தையும் விரட்டமுடியும் என்று எண்ணிய பெரியாரியர்களும் - தமிழ்மண்ணின் அகப்புறச் சூழலை நன்குணர்ந்த உண்மை யான தமிழ்த்தேசியர்களும் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பாக அய்யாவின் நினைவுநாளில் ஒன்றுகூட வேண்டும் என முடிவெடுத்து தமிழ்நாடு முழுவதும் தேனீயாய்ச் சுற்றினர்.

தமிழின உரிமை மீட்பு என்கிற ஒற்றைப் புள்ளியில் இணையும் எந்த ஒரு சிறு அமைப்பும் விடுபட்டுவிடக் கூடாது என்பதில் சிரத்தையோடு இருந்து ஏறக்குறைய 150 அமைப்புகளை ஒன்றிணைத்து 2018 திசம்பர் 23 அன்று திருச்சியில் கருஞ்சட்டைப் பேரணி-யும் தமிழின உரிமை மீட்பு மாநாடு-ம் நடைபெற்றது.

அச்சமுற்ற காவி பயங்கரவாத பாசிச அரசுகள் அடக்குமுறையை ஏவின. முதலில் பேரணிக்குத் தடை; 20.12.2018 நள்ளிரவு 2.00 மணிக்கு திருச்சி மாவட்ட மாநாட்டுப் பொறுப்பாளர் தோழர் அக்பர் அலியை அழைத்து மாநாட்டுக்கும் தடை எனத் தடைமேல் தடை போட்டனர். செந்தமிழர் இருக்கின்றார்; சிங்கங்கள் போல் திறலழித்துவிட எவரும் பிறந்தாரில்லை என வெகுண் டெழுந்த தோழர்கள் அறமன்றத்தை நாடுவோம்; அங்கும் தடை எனில் தடையை





மீறுவோம் என முடிவெடுத்து மதுரை நீதிமன்றத்தின் கதவைத் தட்டினர். கருத்துரிமையின் குரல்வளைகள் நெறிக்கப்படும் போதெல்லாம் எப்போதாவது சற்றே தன் நீதிக்கோலை உயர்த்தும் அறமன்றம் தன் கோலை உயர்த்தி அனுமதி வழங்கி உத்தரவிட்டது. பல்வேறு கட்ட ஊடகச் சந்திப்புகள் நிகழ்த்தியும் எந்த ஊடக வெளிச்சமும் கிடைக்கவில்லை எனினும் செந்தமிழ் ஒன்றே நல்லொற்றுமை சேர்க்கும்; நன்னெறி சேர்க்கும் என 23.12.2018 காலை முதலே தமிழ்நாட்டின் எட்டுத் திக்கிலிருந்து திரண்டது கருஞ்சட்டைப்படை. திருச்சி சத்திரம் பேருந்து நிலையம் தொடங்கி தில்லைநகர் சாலை ரோடு வரை கருமேகம் தரையில் விரிந்ததுபோல் கரும்படைக்கூட்டம். பிற்பகல் 3.30 மணிக்கு அனைத்துத் தலைவர்களும் ஒருங்கே நின்று கொடியசைத்து அய்யாவுக்கு வீரவணக்கம் முழங்கிப் பேரணி தொடங்கியது. அன்று இந்தியை எதிர்க்கத் திரண்ட பெரியாரின் கருஞ்சட்டைப் படை இன்று வடவரின் ஒட்டுமொத்த ஆதிக்கத்தைக் குலைக்கப் புறப்பட்டதோ எனக் காவிகளும் காக்கிகளும் அஞ்சுகிற வகையில்

எங்கள் நாடு தமிழ்நாடு
இங்கு ஏதடா இந்து நாடு?
எங்கள் நிறம் கறுப்பும் சிவப்பும்
காவிக்கு மறுப்பு பெரியாரின் கறுப்பு

என பல்வேறு முழக்கங்களை எழுப்பி பல்லாயிரக் கணக்கில் பங்கேற்ற இப் பேரணி மாலை 6.30 மணி யளவில்தான் மாநாட்டுத் திடலில் நிறைவுற்றது. முன்ன மேயே 5.30 மணிக்குத் தொடங்கிய தமிழின உரிமை மீட்பு மாநாடு புரட்சிக் கவிஞரின் கனவை நனவாக்குகிற வகையில் எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்; இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே என அனை வரும் ஒன்றிணைந்து வடவரின், வடமொழியின், இந்தி - இந்திய ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்தை தமிழ்நாட்டி லிருந்து அய்யாவின் கைத்தடிகொண்டு விரட்டுவோம் என முழங்கினர்.

**- ஆ. முத்தமிழ்ச்செல்வன்**

# தாய்மொழிவழி அரசுப் பள்ளிகள் மூடல்
# தேசிய இனங்களுக்கு ஓர் அச்சுறுத்தல்

**க. முகிலன்**

மாணவர் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பதைக் காரணமாகக் காட்டி, இந்திய அளவில் 2.8 இலட்சம் அரசுப் பள்ளிகள் மூடப்பட உள்ளன. இந்த வகையில் தமிழ்நாட்டில் 3400 பள்ளிகள் மூடப்பட உள்ளன. பள்ளிகளை மூடுவதற்கு-அப்பள்ளிகள் அருகில் உள்ள பள்ளிகளுடன் இணைக்கப்படும் என்று நாகரிக மான நயவஞ்சக முறையில் அரசு விளக்கம் அளிக்கிறது. இவ்வாறு மூடப்படவுள்ள பள்ளிகளில் பெரும்பாலானவை ஊரகப் பகுதியில் அமைந்துள்ளவையாகும்.

2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி ஏழு அகவைக்கு மேற்பட்டவர்களில் 74 விழுக்காட்டினர் மட்டுமே எழுத்தறிவு பெற்றவர்கள். இவர்களில் ஆண்கள் 82 விழுக்காட்டினர்; பெண்கள் 65 விழுக்காட்டினர். அனைவருக்கும் எழுத்தறிவு அளிப்பதுடன், 14 அகவைக் குட்பட்ட அனைவருக்கும் இலவயக் கட்டாயக் கல்வி அளிப்பது என்று அரசமைப்புச் சட்டத்தில் உறுதி செய் யப்பட்டுள்ள இலக்கை எட்டாத நிலையில் அரசுப் பள்ளிகளை ஏன் மூடவேண்டும்? இது, காலங்காலமாகக் கல்வி உரிமை மறுக்கப்பட்ட கீழ்ச்சாதி ஏழை, எளிய மக்களின் கல்வி உரிமையை மறுப்பதல்லவா? எட்டாம் வகுப்பு வரையில் படிப்பதற்கு வழிவகை செய்வதற்குக் கடமைப்பட்டுள்ள அரசு, முதல் வகுப்பில் நுழைவதற்கே வழியடைக்கும் வகையில் பள்ளிகளை மூடுவது என்று முடிவெடுத்திருப்பது மனுதர்மத்தின் நீட்சியே ஆகும்.

அரசுப் பள்ளிகளை மூடுவதற்கான மூலகாரணம் 1991 முதல் தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்கிற கொள்கையை அரசுகள் செயல்படுத்தி வருவதே ஆகும். இக்கொள்கையின்படி, மக்களுக்குக் கல்வியும், மருத்துவமும் அளிக்க வேண்டிய பொறுப்பிலிருந்து அரசு விலகி, இவற்றைத் தனியாரிடம் ஒப்படைத்து வருகிறது. இதன் விளைவாக இந்திய அளவில் பள்ளி களில் கிட்டத்தட்ட பாதி மாணவர்கள் பணம் பறிக்கும் தனியார் பள்ளிகளில் படிக்கின்றனர். தமிழ்நாட்டில் உள்ள நிலை என்ன?

| | எண் ணிக்கை | இவற்றில் பயிலும் மாணவர்கள் |
|---|---|---|
| அரசுப் பள்ளிகள் | 37,211 | 55 இலட்சம் |
| அரசு உதவிபெறும் பள்ளிகள் | 8,403 | 27 இலட்சம் |
| தனியார் பள்ளிகள் | 12,419 | 49 இலட்சம் |
| | 48,033 | 131 இலட்சம் |



தனியார் பள்ளிகள் அனைத்திலும் ஆங்கில வழியிலேயே கற்பிக்கப்படுகிறது. அரசு உதவிபெறும் பள்ளிகளில் பெருமளவில் ஆங்கிலவழிக்கல்வி முறை உள்ளது. அரசுப் பள்ளிகளிலும் ஆங்கில வழியில் பயிலும் மாணவர் எண்ணிக்கை வேகமாகப் பெருகி வருகிறது. குறிப்பாக சென்னை போன்ற பெருநகரங்களில் உள்ள அரசுப் பள்ளிகள் முற்றிலுமாக ஆங்கில வழிப் பள்ளிகளாக மாறிவிட்டன. இவற்றின் அடிப்படையில் தற்போது தமிழ்நாட்டில் 60 விழுக்காடு மாணவர்கள் ஆங்கில வழியில் படிக்கின்றனர். இந்தி மொழி பேசும் வடஇந்திய மாநிலங்களிலும் சற்றொப்ப இதே நிலைதான் உள்ளது.

இராசிவ் காந்தி பிரதமரானதும் 1985 முதல் தகவல் தொழில்நுட்பத்தை வளர்த்தெடுப்பது என்பதன் அடிப் படையில் ஆங்கிலவழிக் கல்வி முன்னெடுக்கப்பட்டது. பி.வி.நரசிம்மராவ் பிரதமரானதும் தாராளமயம், தனியார் மயம், உலகமயம் என்கிற அரசின் கொள்கை அடிப் படையில், பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் உயர் தொழில்நுட்பம் கொண்ட தொழில்களைத் தொடங்கின. தங்குதடையின்றி இந்தியச் சந்தை, உலகச் சந்தையுடன் இணைக்கப்பட்டது. இந்தியாவின் இயற்கை வளங்களும் மக்களின் உழைப்பும் அரசுகளின் துணையுடன் மலிவு விலையில் சுரண்டப்பட்டு வருகின்றன.

இந்தப் பின்னணியில் ஆங்கில வழியில் படித்தால் தான் இந்தியப் பெருமுதலாளிய நிறுவனங்களிலும், பன்னாட்டு நிறுவனங்களிலும் அதிக சம்பளம் கொண்ட வேலைகளில் சேரமுடியும்; அமெரிக்கா போன்ற நாடு களுக்குச் சென்று கொழுத்த சம்பளம் வாங்க முடியும் என்கிற கருத்து முதலாளிய ஊடகங்கள் வாயிலாக ஊதிப் பெருக்கப்பட்டது. ஆங்கிலவழிக் கல்வித் தேவையை நிறைவு செய்யும் வகையில் ஆங்கிலவழிக் கல்வியி லான மழலையர் பள்ளிகள் முதல் கல்லூரிகள் வரை யில் புற்றீசல் போல் பெருகின. இந்நிறுவனங்கள் வரம்

பற்ற வணிகக் கொள்கையில் ஈடுபட்டு, நடுத்தர- ஏழைக் குடும்பங்களைச் சுரண்டிக் கொழுத்து வருகின்றன. இந்தக் கல்விக் கொள்கையில் ஆட்சியாளர்களும், அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் கூட்டுக்கள வாணி களாக இருக்கின்றனர்.

ஆங்கில வழியில் கல்வி கற்றால்தான் உயர்ந்த வாழ்வு கிடைக்கும் என்கிற மயக்கம்-போதை ஏகாதி பத்திய ஊடகங்களால் ஊட்டப்படுகிறது. உண்மை நிலை என்ன? இந்தியாவில் அரசு மற்றும் தனியார் துறையில் அமைப்பு சார்ந்த பிரிவுகளில் (Organised Sector) நிலையான வேலையில் உறுதிசெய்யப்பட்ட ஊதியத் துடன் பணிசெய்வோர் எட்டு விழுக்காட்டினர் மட்டுமே. அமைப்புசாராப் பிரிவில் மீதி 92 விழுக்காட்டினர் வேலை செய்கின்றனர். இந்தியாவில் உழைக்கும் அகவையில் (18-60) இருப்பவர்களில் 50 விழுக்காட்டினர் வேளாண் மையில் ஈடுபட்டுள்ளனர். வேளாண்மைக்கு அடுத்து நெசவு, கட்டுமானம் ஆகியவற்றில் வேலை செய்கின்ற னர். மற்றவர்கள் சுயதொழில்களிலும் கூலியாட்களா கவும் வேலை செய்கின்றனர்.

அமைப்புசாரா பிரிவிலும் ஒரு பகுதியினர் மட்டுமே அதிக ஊதியம் பெறும் வேலைகளில் இருக்கின்றனர். இவர்களுக்கு மட்டும்-குறிப்பாகத் தனியார் துறையில் இருப்பவர்களுக்கு மட்டுமே ஆங்கிலக் கல்வி தேவைப் படுகிறது. இந்த ஆங்கிலக் கல்வியை, தாய்மொழி வழிக் கல்வியுடன் ஆங்கிலத்தை ஒரு பாடமாக நல்ல முறை யில் பயிற்றுவிப்பதன் மூலமே பெறமுடியும். இதற்கு மாறாக, தற்போது பள்ளிகளில் ஆங்கிலம் தெரியாத ஆசிரியர்கள் ஆங்கிலம் அறியாத மாணவர்களுக்கு ஆங்கில வழியில் கற்பிக்கும் கொடுமை நிகழ்ந்து கொண்டி ருக்கிறது. தாய்மொழிவழிக் கல்வியை அடியோடு புறக் கணித்து ஆங்கிலவழிக் கல்வியை மட்டுமே நிலை நாட்டுவது என்பது தாய்மொழியையும், அம்மொழி பேசும் இனத்தையும், அவர்களின் கலை, இலக்கியம், பண்பாடு முதலானவற்றையும் அழிப்பதாகும்.

இந்திய அளவில் முதலாம் வகுப்பில் சேரும் மாண வர்களில் அய்ம்பது விழுக்காட்டினர் பத்தாம் வகுப்பை முடிப்பதற்கு முன்பே பள்ளியிலிருந்து நின்றுவிடுகின்றனர். 18 அகவை முதல் 25 அகவையில் இருப்பவர்களில் இருபது விழுக்காட்டினர் மட்டுமே உயர்கல்வி படிக் கின்றனர். இந்தப் பின்னணியில் நோக்கும்போது முதலாம் வகுப்பிலிருந்தே ஆங்கிலவழிக் கல்வி தேவை என்கிற மாயை எவ்வளவு ஏமாற்று - புரட்டு என்பது புலப்படும். மேலும் ஆங்கிலவழிக் கல்வி என்பது ஏழை, எளிய குடும்பங்களின் பிள்ளைகளை மிரட்டிப் பள்ளி யிலிருந்து விரட்டும்.

தமிழ்நாட்டில் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர் களுக்குப் பாட நூல்கள், உடை, பை, பகல் உணவு முதலானவை இலவயமாக வழங்கப்படுகின்றன. உயர் நிலைப் பள்ளி மாணவர்களுக்கு மிதிவண்டி வழங்கப் படுகிறது. ஆனால் கட்டணம் செலுத்திப் படிக்கும் தனியார் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை கூடிக்கொண்டே செல் கிறது; அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கை குறைந்து கொண்டே வருகிறது. 2018 ஆகத்து மாதத்தில் அரசின் புள்ளிவிவரப்படி 20 மாணவர்களுக்கும் குறைவாக 3,400 பள்ளிகள் உள்ளன. இவற்றுள், 1,324 பள்ளி களில் பத்துக்கும் குறைவாக மாணவர்கள் உள்ளனர். இப்பள்ளிகளை மூடாவிட்டால், கல்விக்கான நிதியைத் தரமாட்டோம் என்று நடுவண் அரசு மிரட்டிக் கொண்டி ருக்கிறது.

அரசுப் பள்ளிகள் தரமற்றவை என்பதால் மாண வர்கள் சேருவதில்லை என்பது தவறான வாதம். தனியார் பள்ளிகள் தரமானவை போல விளம்பரம் செய்துகொள்கின்றன. அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கைக் குறைவதற்குக் காரணம் ஆங்கில வழிக் கல்வி எனும் மாயைதான். தமிழ்வழியில் இயங்கும் அரசுப் பள்ளிகள் அனைத்தையும் ஆங்கிலவழிப் பள்ளி களாக மாற்றும் நடவடிக்கையாக 2019 சனவரியில் அரசுப் பள்ளிகளில் மழலையர் வகுப்புகளைத் தமிழக அரசு தொடங்க உள்ளது. முதலாளித்துவ மேலை நாடு களில் பள்ளிக்கல்வி முற்றிலுமாக அரசுப் பள்ளியாகவும் தாய்மொழியிலும் இருக்கும் நிலையில், இந்தியாவில் கல்வியைத் தனியார் கொள்ளைக்குத் தாரைவார்த்தது மக்களுக்கு இழைத்த மாபெரும் துரோகமாகும். எனவே பள்ளிக்கல்வியை 1980க்குமுன்பு இருந்ததுபோல் அரசுப் பள்ளிகளாக்கிட வேண்டும். அவற்றில் தாய்மொழி வழி யிலேயே கல்வி கற்கும் நிலையை ஏற்படுத்த வேண்டும்.

இதன் முதல்கட்டமாக கல்வியை 1977க்குமுன்பு இருந்ததுபோல் மாநில அதிகாரப் பட்டியலில் சேர்க்க வேண்டும். தமிழ்நாட்டில் தமிழ்வழியில் படித்தவர் களுக்கே அரசு வேலை என்று சட்டம் இயற்ற வேண்டும். அதேபோல் தமிழ்நாட்டில் இயங்கும் நடுவண் அரசின் அலுவலகங்களில் தமிழ் ஆட்சிமொழி என்ற நிலையை உண்டாக்க வேண்டும். தமிழ்நாட்டின் தனியார் நிறு வனங்களிலும் தமிழ்வழியில் படித்தவர்க்கு வேலை யில் குறிப்பிட்ட விழுக்காடு ஒதுக்க வேண்டும் என்பதை நிபந்தனையாக விதித்த வேண்டும். அந்நிலையில் ஆங்கில மோகம் ஒழிந்து, தமிழ் வழியில் ஆர்வ முடன் முன்வந்து பயிலும் நிலை ஏற்படும்.

இத்திசை நோக்கி நாம் செயல்படாவிட்டால், கடந்த கால் நூற்றாண்டில் 50 விழுக்காடாக உயர்ந்த ஆங்கில வழிக்கல்வி அடுத்த கால் நூற்றாண்டில் 90 விழுக்காடு என்ற நிலையை எட்டி விடும் பேராபத்து உள்ளது. தமிழ்த் தேசிய இனத்துக்கும் பிற தேசிய இனங்களுக் கும் முன் உள்ள மாபெரும் அச்சுறுத்தல் இது!

# இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை வடிவமைப்பு எது?
## (Which is the Basic Structure of Indian Constitution?)


- குட்டுவன்

**1950**இல் இந்திய அரசமைப்புச் சட்டம் நடை முறைக்கு வந்த போது, இந்தியா சனநாயக மக்கள் குடியரசாக அறிவிக்கப்பட்டது. 1976இல் இந்திய அரச மைப்புச் சட்டத்தில் மதச்சார்பின்மை என்ற பிரிவும் அடிப்படைக் கடமைகளும் இணைக்கப்பட்டன.

இதுவரை இந்திய அரசமைப்புச் சட்டம் 102 முறை திருத்தப்பட்டுள்ளது. கூட்டாட்சி இயலை அரசமைப்புச் சட்டமாக ஏற்றுக்கொண்ட போதிலும் மக்களாட்சி நெறி களைப் போற்றுகிற உண்மையான கூட்டரசு ஆட்சியை இதுவரை இந்தியா கண்டதில்லை. குறிப்பாக அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கனடா, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில் கூட்டாட்சி முறைதான் அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை வடிவமமைப்பாகப் (Basic Structure) போற்றப்படுகிறது. இந்த வடிவமைப்பை மேற்கூறிய கூட்டாட்சி இயலைப் பின்பற்றுகிற நாடுகள் இதுவரை திருத்தியதே இல்லை. எனவேதான் மேற்கூறிய நாடு களில் மக்களாட்சி முறையும் கூட்டாட்சி இயலும் கை கோர்த்து நடைபோடுகின்றன. மக்கள் உரிமைகளும் பாதுகாக்கப்படுகின்றன.

ஆனால் இந்திய அரசமைப்புச் சட்டம் ஆதிக்க சமூகத் தினரால் மிக சிறுபான்மையான ஆதிக்கச் சாதிகளுக் காகவே உருவாக்கப்பட்டது என்பதைத் தெளிவாக உணர்ந்து குறிப்பிட்டவர் தந்தை பெரியார் ஒருவரே.

இதன் காரணமாகவே 1957 நவம்பர் 26இல் இந்திய அரசமைப்புச் சட்டத்தை எரிக்கவும் செய்தார். பெரியார் அரசமைப்புச் சட்டத்தைப் பற்றி எழுப்பிய வினாவிற்கு இன்று வரை யாரும் விடை காணவில்லை. அதாவது இந்திய அரசமைப்புச் சட்டக்குழு உறுப்பினர்கள் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர், டி.டி. கிருஷ்ணமாச்சாரி என்.கோபாலசாமி அய்யங்கார், கே.எம்.முன்ஷி, டாக்டர் அம்பேத்கர், முகமது சாதுல்லா ஆகியோர் இணைந்து உருவாக்கினார்கள். டாக்டர் அம்பேத்கர் இந்திய அரச மைப்புச் சட்ட வரைவுக் குழுவின் (Drafting Committee) தலைவராக இருந்தார். மேற்குறிப்பிட்ட 6 உறுப்பினர் களில் நான்கு பேர் பார்ப்பனர்களாக இருந்தார்கள். அம்பேத்கரும் முகமது சாதுல்லாவும் பெரிய அளவில் அடிப்படையான மாற்றங்களை உருவாக்க முடிய வில்லை. சான்றாக 1949இல் இந்துச்சட்டத்தை (HIndu Law) அம்பேத்கர் கொண்டு வர முயற்சித்த போது தில்லியில் பூரி சங்கராச்சாரியார் மற்றும் இந்து மத அமைப்புகள் அம்பேத்கரின் படத்தை எரித்தனர். அவர் சூத்திரனுக்குக் கீழ் உள்ள பஞ்சமர் என்று வாய்க் கொழுப்போடு குறிப்பிட்டு-இந்துச் சட்டத்தைக் கொண்டு வருவதற்குத் தகுதி இல்லை என்று வெளிப்படையாகவே அறிவித்தனர். ‘‘சாதியை ஒழிப்பதற்காகப் போராடினேன்!



மறியல் செய்தேன். சிறை சென்றேன். சர்க்கார் கண் விழிக்கவில்லை. ஆகவே சாதிக்கு ஆதாரமான சட்டத் தைக் கிழித்துத் தீயிலிட்டாவது இந்திய சர்க்காரின் மனதை மாற்றலாமா என்று கருதி அதைச் செய்தேன்... இதில் எந்த உயிருக்கேனும் சேதமுண்டா? எந்தப் பொருளுக்கேனும் நாசமுண்டா? இதற்காக எனக்கு மூன்றாண்டு சிறைத் தண்டனை என்றால் இதை நான் மகிழ்வோடு வரவேற்க வேண்டாமா? சாதியை ஒழிப்ப தற்காக மூன்றாண்டு சிறைவாசம் செய்தான் என்பதை விடப் பெரும் பேறு முக்கியக் கடமை என்ன வொன்று இருக்கிறது-இந்த விதமாக நீங்கள் ஒவ்வொரு வரும் உங்களைக் கேட்டுக் கொள்ளுங்கள்’’ என்று 9.11.1957 இல் என்று பெரியார் ஒரு அறிக்கையையும் வெளியிட்டார்.

தந்தை பெரியார் எழுப்பிய இப்பிரச்சினை தற்போது மேலும் சிக்கலடைந்துள்ளது. ஆதிக்கச் சாதிகளின்-உயர் வர்க்கத்தினரின் நலன்களுக்காகவே அரசமைப்புச் சட்டத்தின் உதவியோடு ஒன்றிய அரசு ஆட்சியை நடத்தி வருகிறது. 1951இல் கல்வியில் இடஒதுக்கீட்டுக் கொள் கையை உறுதி செய்வதற்காகச் செய்யப்பட்ட திருத்தத் தைத் தவிர, பெரும்பான்மையான சட்டத் திருத்தங்கள் மாநிலங்களின் உரிமைகளைப் பறிப்பதற்காகவும் ஆதிக்க சமூகத்தின் நலன்களைப் போற்றுவதற்காகவுமே கொண்டு வரப்பட்டுள்ளன.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 368ஆவது பிரிவு தான் ஒன்றிய அரசிற்கு நாடாளுமன்றம் வழியாகத் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அதிகாரம் அளிக்கிறது. சில வழக்குகளில் உச்சநீதி மன்றம், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை வடிவமைப்பை மாற்றக்கூடாது என்று கூறிய போதும், தொடர்ந்து அரசமைப்புச் சட்டம் மாநிலங்களுக்கும் மக்களுக்கும் எதிராகச் சிதைக்கப்பட்டு வருகிறது. ஆனால் இதைக் கருத்தில் கொள்ளாமல், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை வடிவ

மைப்பை நீதிமன்றங்கள் காப்பாற்றி வருகின்றன என்பதை அடிக்கடி சில ஆதிக்கச்சாதி மேதாவிகள் ஊடகத்தில் கட்டுரைகள் வாயிலாகவும் விவாதங்களின் வழியாகவும் தொடர்ந்து கூறி வருகின்றனர். பொய்யைத் திரும்பத் திரும்பக் கூறினால் மக்களின் மனதில் ஒரு தடுமாற்றத்தை ஏற்படுத்தலாம் என்ற கண்ணோட் டத்திலும் இவர்கள் வெற்றி பெற்றே வருகின்றனர்.

சாதிவாரியான இடஒதுக்கீடும் மானுட மேம்பாடும் (Caste based reservation and human development in India, K.S.Chalam, p.26) என்ற நூலில் ஆய்வாளர் சலம் தந்தை பெரியார் 1957இல் எந்தக் காரணத்திற்காகச் சட்டத்தை எரித்தாரோ அதே காரணம் மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளது என்பதைத் தனது நூலில் உயர்ந்த சாதியினர் அல்லது திவிஜா கூட்டணிதான் அமைச்சர வையில் பெருமளவில் இடம் பெற்றுள்ளனர். அவர்கள் தான் கோடிக்கணக்கான தொகை உடைய ஒப்பந்தங் களைப் பெற்று வருகின்றனர். சிலர் ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக்கும், தேசிய சனநாயகக் கூட்டணிக்கும் பொருளாதாரக் கொள்கைகளில் வேறுபாடு இல்லை என்று கூறுகிறார்கள். ஆகவே இந்த உயர் சாதியினர்தான் தாராளமயமாக்கல் கொள்கை என்ற பெயரில் பலன் களைப் பெற்று வருகிறார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

தற்போது இந்திய மக்கள் தொகையில் 3 விழுக்காடே உள்ள இச்சமுதாயத்தினர்தான், உச்சநீதி-உயர்நீதி மன்றங்களில் 80 விழுக்காட்டுக்கு மேல் நீதிபதிகளாகப் பணியாற்றுகின்றனர். தில்லியின் அதிகார மையத்திலும் இவர்கள்தான் கோலோச்சுகின்றனர். ஏழை பணக்காரர் களுக்கிடையே உள்ள சமூக, பொருளாதார, ஏற்றத் தாழ்வுகள் குறைவதற்குப் பதிலாக அச்சம் கொள்ளும் வகையில் பெருகி வருகின்றன. எனவே இந்த அரச மைப்புச் சட்டம் மிகமிகக் குறைந்த எண்ணிக்கையில் உள்ள உயர் சாதியினரின் நலன்களுக்காகவே இன்றும் இயங்கி வருகிறது என்பதைத் தந்தை பெரியாரின் தொலைநோக்குப் பார்வை அன்றே உறுதி செய்துள்ளது.

அரசமைப்புச் சட்ட விதிகளை மீறி, நிர்வாக முடிவுகள் என்ற பெயரில் ஒன்றிய அரசு தொடர்ந்து மாநிலங்களின் அதிகாரங்களைப் பறித்துக் கொண்டே வருகிறது. இந்தியாவில் கூட்டாட்சித் தத்துவத்தை உறுதி செய்ய வேண்டும் என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தலை மையில் மூன்று உயர்நிலை ஆணையங்களை ஒன்றிய அரசு அமைத்தது. 1988இல் நீதிபதி சர்க்காரியா குழுவின் அறிக்கையும், 2003இல் நீதிபதி வெங்கடச்செல்லையா அறிக்கையும் 2007இல் நீதிபதி, புஞ்சி ஆணையத்தின் அறிக்கையும் அளிக்கப்பட்டன. இந்த மூன்று குழுக்களின் அறிக்கைகளிலும் மாநிலங்களின் உரிமைகள் மிக மோசமான முறையில் பறிக்கப்படுவதும், ஒன்றிய அரசில் அதிகாரங்கள் அளவிற்கு அதிகமாகக் குவிக்கப்படுவ தையும் சுட்டிக்காட்டி அரசமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று கூறப்பட்டுள்ளன.

மேலும் ஒன்றிய அரசின் ஏதேச்சதிகார நிர்வாக முடிவு களால் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பல பிரிவுகள் செயலிழந்து வருகின்றன. சான்றாக ஒன்றிய அரசின் பட்டியலில்-

| | |
|---|---|
| பிரிவு 27இல் | பெரிய துறைமுகங்கள் அமைப்பது |
| பிரிவு 28இல் | வான்வழி போக்குவரத்தை மேலாண்மை செய்வது |
| பிரிவு 31இல் | அஞ்சல் தந்தி, தொலைபேசி, கம்பியில்லா ஒளிபரப்பு இதர ஒளி, ஒலிபரப்புகள் |
| பிரிவு 45இல் | வங்கி |
| பிரிவு 47இல் | காப்பீடு |
| பிரிவு 48இல் | பங்குச் சந்தை, எதிர்காலச் சந்தைகள் |
| பிரிவு 49இல் | காப்புரிமை தொடர்பான இனங்கள் இடம் பெற்றுள்ளன. |

இந்த அதிகாரங்கள் தற்போது தனியார் துறைகளுக் குத் தாரளமாகத் தாரை வார்க்கப்பட்டுள்ளன. எந்த அரசமைப்புச் சட்டத் திருத்தங்களின் வழியாக இவைகள் எல்லாம் செய்யப்பட்டன என்பதை ஏன் இதுவரை யாரும் கேள்வி கேட்கவில்லை? பெரிய துறைமுகங்களை அம்பானிக்கும், அதானிக்கும் மோடி அரசு தாரை வார்த்துக் கொண்டிருக்கிறது. வான் வழிப் போக்குவரத்தில் பன்னாட்டு நிறுவனங்களின் முற்றுரிமைக்கு வாய்ப்பளிக் கப்பட்டுள்ளது. அலைக்கற்றை வழங்குவதில் முன்னுரிமை அம்பானிக்கும், டாடாவிற்கும்தான் வழங்கப்பட்டுள்ளது. அம்பானி நிறுவனத்தின் விளம்பரத்தில் பிரதமர் மோடியின் புகைப்படம் இடம் பெற்றதற்கான முழுவிளக்கம் இது வரை ஒன்றிய அரசிடமிருந்து பெற முடியவில்லை. **பொருளாதாரத்தையும் வேலை வாய்ப்பையும் பெருக்கும் பொதுத் துறை நிறுவனங்கள் சீரழிக்கப் படுகின்றன. அவற்றின் பங்குகள் ஆண்டு தோறும் தனியார்க்கு விற்பனை செய்யப்படுகின்றன.**

குறிப்பாக அரசமைப்புச் சட்டப் பிரிவு 45இல் வங்கிகளை மேலாண்மை செய்யும் அதிகாரம் இன்று என்னவாயிற்று? 8 இலட்சம் கோடி பணத்தைப் பெரு முதலாளிகள் கடனாகப் பெற்று, திரும்பச் செலுத்தாமல் பொதுத் துறை வங்கிகளைச் சூறையாடிவிட்டு, வெளி நாடுகளில் மகிழ் வோடு வலம் வருகிறார்கள். மேலும் ஒன்றிய அரசு இந்திய மைய வங்கியையும் இவ்வகையில் விட்டுவைக்க வில்லை. தகுதி மிக்க மைய வங்கியின் ஆளுநர்கள் விரட்டப்படுகின்றனர். தகுதியில்லாத ஒன்றிய அரசிற்குத் தாளம் போட்டவர் இப்பதவியில் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் நாடாளுமன்றத்தில் சிறப்புச் சட்டத்தின் வழியாக மைய வங்கியின் வைப்பு நிதியில் கை வைக்க ஒன்றிய அரசு முயல்கிறது. அமெரிக்க வங்கிகள் வீழ்ந்தது போன்று இந்திய வங்கிகள் வீழ்ச்சியடையாமல் இருப்பதற்கு இந்த வைப்பு நிதிதான் உதவியாக உள்ளது. மேற்கூறிய

நடவடிக்கைகள் தாராளமயமாக்கல் என்ற போர்வையில் மக்களின் வரிப்பணத்தைக் கொள்ளையடிக்கும் போக்கைத் தடுப்பதற்காகவும் பாதுகாப்பு அரணாகவும் இந்திய அரசமைப்புச் சட்டம் இன்றளவும் உள்ளது.

ஆனால் இவற்றையெல்லாம் புறந்தள்ளி உயர் வர்க்கத்தினர் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை வடிவமைப்பைப் பாதுகாக்க வேண்டும் என்று வெற்றுக் கூச்சலிட்டு வருகின்றனர். மேலும் நிர்வாக நடவடிக்கைகள் என்ற பெயரில் ஒன்றிய அரசு இரவோடு இரவாக யாருக்கும் தெரியாமல் பணமதிப்பிழப்பு நடவடிக்கையை மேற்கொண்டது. இதன் விளைவால் இந்திய மாநிலங்களின் ஒட்டு மொத்தப் பொருளாதாரமே நொறுக்கப்பட்டது. அடுத்ததாக சரக்கு-சேவை வரியை அறிமுகம் செய்தது, இந்தியக் கூட்டாட்சி இயலின் மீது தொடுக்கப்பட்ட இரண்டாவது துல்லியத் தாக்குதல் ஆகும்.

கூட்டாட்சி இயலைப் பின்பற்றும் பல நாடுகளில் கூட்டரசு நிதி (Federal Finance) பற்றிய அதிகாரங்கள் அரசமைப்புச் சட்டங்களில் தெளிவாக வகுக்கப்பட்டுள்ளன. இத்தகைய பிரிவுகள்தான் கூட்டாட்சியைப் பின்பற்றும் நாடுகளின் அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை வடிவமைப்பாகக் (Basic Structure) கருதப்படுகின்றன. ஆனால் மதிப்புக் கூட்டு வரியின் வழியாகவும் சரக்கு-சேவை வரியின் வழியாகவும் ஏற்கெனவே மாநிலப் பட்டியலில் இருந்து வரி இனங்கள் ஒன்றிய அரசால் முழுமையாகப் பறிக்கப் பட்டுள்ளன. இதன் விளைவு குழப்பமும் பொருளாதார சரிவும் தான் என்பது தற்போது மெய்ப்பிக்கப்பட்டு வருகிறது.

இந்தியா உட்பட எல்லா நாடுகளிலும் அரசமைப்புச் சட்ட விதிகளுக்கு உட்பட்டு நாடாளுமன்றம் சட்டமன்றங் களில் ஆண்டுக்கு ஒரு முறை நிதிநிலை அறிக்கைகள் அளிக்கப்படுகின்றன. வரவும்-செலவும் நிதிநிலை அறிக்கையின் இரண்டு கண்களாகும். மாநிலங்களுக்கு அளிக்கப்பட்ட வரிவருவாய் இனங்களின் வழியாகத்தான் மாநில அரசுகள் தங்களது நிதிநிலைமையைக் கணக்கிட முடியும். இதனடிப்படையில் தான் பொதுச் செலவின் வழியாக மக்கள் நலத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன; நிறைவேற்றப்படுகின்றன. தற்போது இந்தியாவில் மாநிலங்களின் நிதிவருவாய் என்ற கண் ஒன்றிய அரசால் பறிக்கப்பட்டுள்ளது. மேலும் அரசமைப்புச் சட்டப்படி மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள-குறிப்பாக மாநிலச் சட்டமன்றங்களின் அதிகாரங்களை எடுத்துக் கொண்டு சரக்கு-சேவை வரிக் குழு (GST - Council) என்ற பெயரால் ஒன்றிய அரசு தனது அதிகாரத்தை மேலும் குவித்து வருகிறது. இதன் விளைவாகத் தென் மாநிலங்கள் மக்கள் நலத் திட்டங்களுக்காகப் பேரிடர் துயர் துடைப்பு நடவடிக்கைகளுக்காக ஒன்றிய அரசிடம் பிச்சைப் பாத்திரம் ஏந்த வேண்டிய இழிநிலை தொடர்கிறது. **மேலும் தென் மாநிலங்களின் வரிவருவாயை வட மாநிலங் களுக்கு எடுத்துச் செல்லும் போக்கும் பெருகி வருகிறது. வடக்கு தெற்கை வஞ்சிக்கிறது.**

அண்மையில் நடைபெற்ற வட மாநிலத் தேர்தல் களை ஒட்டியும் ஆளும் பாசகவிற்கான வாக்கு வாங்கி யைப் பெருக்குவதற்காகவும் இந்தச் சரக்கு-சேவை வரிக்குழுவைக் கூட்டி வரி அடுக்கு முறையை மாற்றி, வட இந்திய மாநில நலன்கள் போற்றப்பட்டன. இதனால் அதிக வரி வருவாயை இந்தியாவிற்கு அளிக்கின்ற தென் மாநிலங்கள் மேலும் இன்னலுக்கு உள்ளாக்கப்பட் டுள்ளன. இவையெல்லாம் அரசமைப்புச் சட்டப்படிதான் நடைபெறுகின்றனவா? என்பதைப் பற்றி எவ்விதக் கேள்விகளையும் எந்த நீதிமன்றமும் இதுவரை எழுப்ப வில்லை.

மேலும் இந்தியாவினுடைய பன்முகத்தன்மை முழுமையாகச் சிதைக்கப்பட்டு மக்களின் அடிப்படை உரிமையான உணவு உண்ணும் உரிமையை சனாதன இந்துத்துவ சங்க பரிவாரங்கள் நாள்தோறும் பறிக்கின்றன. பசுக்காவலர்கள் என்ற பெயரில் சிறுபான்மையினர் தலித் மக்களை வெட்டுவதையும் கொலை செய்வதையும் இந்த பாசக ஒன்றிய அரசு வேடிக்கை பார்ப்பதுதான் இந்திய அரசமைப்புச் சட்டத்தை மதிக்கும் அழகா? இந்திய அரசமைப்புச் சட்டத்தில் சுட்டப்பட்டுள்ள அடிப்படைக் கடமைகள்-உரிமைகள் ஆகியன தொடர் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ள நிலையில், உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியே தொலையியக்கி (Remote control) வழியாக மேலாண்மை செய்யப்பட்டார் என்று உச்ச நீதிமன்ற சக நீதிபதிகளே குற்றம் சாட்டியது, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் விதிகள் சாய்ந்தும் சரிந்தும் வருவதையே சுட்டுகின்றன.

ஒரே நாடு, ஒரே வரி, ஒரே மொழி, ஒரே மதம் என்ற முழக்கங்கள் வானொலியிலேயே ஒலிபரப்பப்படுவது சரியா? ஏற்கெனவே அரசமைப்புச் சட்டம் சிதைக்கப்பட்டு வருகின்ற நிலையில், மேலும் இது போன்ற அராஜகச் செயல்களை ஒன்றிய அரசின் ஆளும் கட்சியே ஊக்குவிப்பதுதான் மக்களாட்சி கூட்டாட்சி முறையா? நெறியா?

**ஒன்றிய அரசின் அனைத்துப் புலனாய்வுத் துறைகள், வருமானவரித் துறை அமலாக்கப் பிரிவு போன்ற துறைகள், தனி மனிதர் பயன்படுத்தும் கணினிகளை அவர்களுக்குத் தெரியாமல் உளவு பார்ப்பதும் தகவல்களை எடுப்பதும்தான் இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமையா? மாநில உரிமைகளை இந்திய அரமைப்புச் சட்டத்தின் அடிப்படை வடிவ மைப்புப் பிரிவாக இணைத்து, உரிய சட்டத்திருத் தங்களை மேற்கொண்டால்தான் இந்தியா தனது பன்முகத் தன்மைகளையும் மக்களின் மொழி, இன, பண்பாட்டு, உரிமைகளையும் பாதுகாக்க முடியும். இல்லையென்றால் இந்தியாவின் ஒற்றுமை மிகப் பெரிய கேள்விக் குறியாகும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.**

# தாய்மொழி தமிழ்வழிக் கல்வி

இரா. பச்சமலை

"கற்க கசடறக் கற்க கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என இயம்புகிறது வள்ளுவம். கல்வி பெற்றிடுவது முதன்மையானது; இன்றியமையாதது என்பதை நிறுவுகிறார் 'கற்க' என்ற சொற்றொடர் போன்ற ஒரே சொல்லில். பெறும் கல்வி அய்யம் திரிபுர அமைந்திட வேண்டும் எனக் கட்டளை இடும் வகையில் 'கசடறக் கற்க' என்ற சொற்றொடரை வைக்கிறார், வள்ளுவர்.

'கசடறக் கற்க' எப்பொழுது முடியும்? அறிந்தவை யைக் கொண்டு அறியாதவற்றை அறிந்துகொள்ள முற்படுவது இயல்பு. பின் அறிவுத் தள வளத்தைப் பெருக்கிக் கொண்டால்தான் அய்யத்திற்கு இடமின்றி கற்றுக்கொண்டதாகக் கொள்ள முடியும். எப்படி அறிந்த வையிலிருந்து அறியாதவற்றிற்குக் கல்வியை நகர்த்த முடியும்? அது தாய்மொழி வழிக்கல்வி பெற்றால் மட்டுமே இயலும்.

அதாவது குழந்தை தாய், தந்தை மடிகளில் தவழ்ந்து ஒத்த அகவைக் குழந்தைகள், குடும்பம், உறவுகள், தன் சமூக வெளியில் தன் தாய்மொழியில் தவழ்ந்து அந்தத் தாய்மொழியில் கல்வி பயின்றால்தான் அறிந்த வற்றிலிருந்து அறியாதவற்றை அறிந்துகொள்ளலாம். அதன்பின் அறிவுத் தளம் விரிவடையும்; பெருகும். அதன் அடிப்படையின் அய்யத்திற்கிடமின்றி செறிவான, தெளிவான கசடற்ற கல்வியைப் பெற்றிட்டதாகக் கொள்ள முடியும். அத்துடன் நிற்கவில்லை வள்ளுவர். கல்வியின் தன்மை, உள்பொதிவு எவ்வாறு இருக்க வேண்டு மென்பதை வலியுறுத்தி வரையறுத்துக் கூறுவதாக 'நிற்க அதற்குத் தக' என்ற கட்டளைச் சொற்றொடரை வைக்கிறார். கல்வியின் உள்பொதிவு, அறநெறிகளை, மாண்புமிகு பண்புகளை அடிப்படைக் கூறுகளாகவும் மேவுவதாகவும் இருத்தல் வேண்டுமென்று வரை யறையிட்டு அதன்படி வாழ்வதுதான் சிறப்பான வாழ் வாக அமையும் என பறைசாற்று முகமாகத்தான் 'நிற்க அதற்குத் தக' என்ற சொற்றொடரை குறளின் முற்று ரையாக வைத்துள்ளார் வள்ளுவர்.

இவ்விளக்கவுரையெல்லாம் கசடறக் கற்றால் தான் பொருள் பொதிந்ததாகக் கொள்ள முடியும். எவ்வாறு? இது தாய்மொழியில் கல்வி வழங்கினால் மட்டுமே முழுமையாக அய்யம் திரிபுரக் கற்றதாகக் கொள்ள முடியும்.

இத்தன்மைத்தே உலகளாவிய அறிஞர்களின் கல்வி குறித்த கருத்துகளானவை. அதாவது கல்வியின் நோக்கம் மாண்புடைய அறப்பண்புகளைப் பெறுவது என்றும் அறம்சார் வாழ்முறையைக் கடைப்பிடிக்க வழிகாட்டும் கருவிதான் கல்வி எனவும் பலவாறான கருத்துகள் காலம் நெடுகிலும் சொல்லப்பட்டு வருபவை யாகும். இதேபோன்று தாய்மொழிவழிக் கல்வியின் மேன்மையையும், இன்றியமையாமையையும் காரல் மார்க்சு, காந்தி, நேரு போன்ற மலரும் வலியுறுத்தி யுள்ளனர்.

தாய்மொழிக்கல்வியின்றி மாற்று மொழியில் படிப்பு குறிப்பாக, மழலையர்க்கு வழங்கப்படின் அது அறியாதவற்றைப் பற்றிப் படிக்க வைப்பதாகும். எனவே அது எவ்வித புரிதல் அடித்தளமின்றி இருக்கும். அவர் கள் மனதிற்குள் திணிப்பதற்கு ஒப்பாகும். இது இளம் தளிர் ஒத்த மழலையர்களின் மனதை கருக்கி விடுவது போலாகும். அவ்வகையில் அது மனனம் செய்து கொள்வதற்கு மட்டுமே அடிகோலும். எனவே அப்படிப்பு கசடறக் கற்க இயலாதவை, அப்படியான படிப்பு மென் மேலும் அளிக்கப்படுவது அவர்களின் தேடல் அறிவு உணர்வை அறவே அழித்தொழித்துவிடும்.

மொத்தத்தில் தாய்மொழிவழிக் கல்வி அன்றி மாற்று மொழிவழிக் கல்வி அளிப்பது, இளம் மழலையர், குழந்தைகளின் இயல்பான எண்ண அலைகளைச் சிதறடிக்கும்; சிந்தனை ஊற்றை தூற்று கேடு விளை விக்கும்.

தாய்மொழிக்கல்வி மறுக்கப்பட்டு, வேற்றுமொழிப் படிப்பு அளிக்கப்பட்டு வருவது சமூக நலன்களை மேம்பாட்டை புறந்தள்ளவது போலாகி ஒட்டுமொத்த சமூகத்தைக் கடும் கொடிய நோயுற்ற சமூகமாக மாற்றி விடும். காட்டாக, நீரிழிவு குறைபாடுடைய ஒருவர் முறையான மருத்துவம் செய்துகொண்டு அதனைக் கட்டுக்குள் வைத்திடாவிடின் பல் வழிகளில் உடல்நலன் கெடும்; இறுதியில் மீளாத் துயரத்திற்கு இட்டுச் செல்லும். நீரிழிவைக் குறைபாடு என்றுதான் குறிக்கின்றனர். அது நோய் என்ற இலக்கணத்துக்குள் வராது என நீரிழிவு மருத்து வல்லுனர்கள் தெளிவாக விளக்கு கின்றனர்.

அதாவது, கணையத்தின் பீட்டா செல்கள், முன்னோர் வழியாக, முறையற்ற வாழ்முறைகள், உணவு முறைகள், நெறியற்ற செயல்பாடுகளால் உடம்புக்குத் தேவையான போதியளவு இன்சுலின் சுரக்க இயலாத வாறு செயலிழந்துவிடுகின்றன. எனவே இக்குறை பாட்டை நோய் என்று குறிப்பதில்லை.

அவ்வகையில் முறையான வாழ்வுமுறை, உணவு முறை, நல் செயல்பாடுகளுடன் மருத்துவம் செய்து

கொண்டு இக்குறைபாடு கட்டுக்குள் வைக்கப்பட்டு விட்டால் இயல்பு வாழ்க்கையைப் பாதிக்காது. வெறும் காய்சல், சளித் தொல்லை போன்றதுதான். அன்றேல் கட்டுப்பாடு இழக்க நேரிடின் இந்த நீரிழிவுக் குறைபாடு பலவாறான நோய்கள்-கண் பாதிப்பு, காது கேளாமை, சிறுநீரகக் குறைபாடு, கல்லீரல் செயல்பாட்டுக் குறைவு, ஈரக்குலை பகுதி செயலிழப்பு, மிகைக் குருதி அழுத்தம், குருதியோட்டக் குறைபாட்டால் நரம்பு மண்டல நலிவு, மூளைக்குப் போதுமான உயர் வளி கிடைக்காமை யால் தற்காலிக இயக்கமின்மை போன்ற பல்வேறு வகையான இன்னல்கள், சிக்கல்கள் அனைத்தையும் சிலவற்றாலும் ஒரே ஒரு குறைபாட்டாலும் அதனை யடுத்து பற்பல உடல்நலிவுகள் என ஏற்படக்கூடும்.

முழுமையும் இத்தன்மைத்தே தமிழ்வழிக் கல்வி யன்று வேற்று மொழி படிப்பு அளிப்பதினால் தனி மனித வாழ்சிதைவு, தனிமனித பொதுவெளி எண்ண மின்மை, ஒப்புரவின்மை, கூடிவாழும் ஒருங்கிணைந்த (inclusiveness) மனபான்மையற்ற தனித்துவ மனப் பான்மை (exclusiveness) போன்றவையால் சமூக நலன் கெடல், சமூகச் சீரழிவு என தனிமனித மேம் பாடும் சமூக மேம்பாடும் முற்றிலுமாகச் சிதைய நேரிடும்.

மேலும் இன்னொரு வகையில் முற்றும் தாய் மொழியே தெரியாமல், கற்பிக்கப்படாமல் முற்றும் மாற்று மொழிப் படிப்புடன் படிப்பை முடிக்கும் ஒருவன் புற்றால் பற்றப்பட்டு அது பாதித்த உறுப்பை முற்றிலு மாக அழித்து அடுத்தடுத்து பரவி முற்றிலுமாக அவனைச் சிதைத்து சிதைக்கு இட்டுச் செல்வது போன்ற நிலைக் குத்தான் ஆளாக நேரிடும். இதுபோன்று ஒப்பீடு செய் துள்ளது சற்று கடுமையாக இருப்பினும் தற்போதைய நிலையில் இவ்வாறான படிப்புப் படித்துள்ள அனை வரும் அந்த இழிநிலையை அடைந்து வருவது போன்று வருங்காலங்களில் இந்த மாற்று மொழிப் படிப்பு மாயை மறையாது தொடருமெனில் தனிமனித சமூக நலன் கடிதே கெட்டொழிந்து மனிதமற்ற மனத்தோராய் விலங் கினும் கீழான இழிநிலையைத் தான் அடைய நேரிடும்.

இது ஏதோ தாய்மொழிவழிக் கல்வி பெற வழிவகை ஏற்படுத்தப்படாத சூழலில் மாற்று மொழிவழிக் கல்வி பெற்றோர், பெறவிரும்புவோர் மீதான வெறுப்பின் வெளிப்பாடல்ல. உண்மையில் மனச்சான்றுடன் இவ் வாறான படிப்புப் பெற்றுள்ள இந்தத் தலைமுறை யினர், இளந்தலைமுறையினரின் சமூகத்தின் மீதான உள்ளார்ந்த அக்கறை, பொதுவெளி, சமூக நலன் சார்ந்த உணர்வுகள் ஏதுமின்றி பிழைத்து வருவதை மனமாற உணர முடிகிறது. இதிலிருந்தே தாய்மொழி வழிக் கல்வி அளித்திட பாடம் பெற வேண்டியுள்ளது என்பதுதான் உண்மை.

இங்கு கல்வி என்ற சொல் மாற்றுமொழிக் கல்வி படிப்பைக் குறிப்பிடுவதல்ல என்பதுடன் அது தாய் மொழிக் கல்வியை மட்டும் குறிப்பதாகும். சென்ற நூற் றாண்டின் பின்பகுதியிலிருந்து நாடுகளின் பொருளாதார வளர்ச்சி என்பது உண்மையான வளர்ச்சியைக் குறிக்க ஏற்றதல்ல எனவும் அதற்கு நாட்டின் மேம்பாடுதான் அளவுகோலாகக் கொள்ளப்பட வேண்டுமென்று தீர்மானிக் கப்பட்டது. கல்வி, மக்கள் மருத்துவம், வேலை வாய்ப்பு, பெண்களின் சமூக நிலை போன்ற பல்வேறு துறைகளின் துறைவாரி வளர்ச்சியைக் கணக்கிட்டு மக்கள் மேம் பாட்டுக் குறியீடு (Human Development Index - HDI) அளவிடப்படுகிறது. இதில் நாட்டின் கல்வி நிலை முதன்மை இடம்பிடிக்கிறது. அடுத்து மருத்துவம் இடம் பெறுகிறது. அவ்வகையில் இந்தியா 137ஆம் இடத்தில்தான் உள்ளது. இதற்கான முக்கிய காரணம் இங்கு கல்விநிலை தாழ்நிலையிலுள்ளது என்பதுதான்.

எனவே, கல்வியளித்து மேம்பாடு பெற்ற சமூகமாக உயர்த்திட உண்மையாக முயலாமல் வெறும் வெற்றுப் பிதற்றலாக நாட்டை வல்லரசாக்குவோம் என்ற கழிசடைத் தனம் ஏன்?

இந்த நிலையை இன்னும் சற்று தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். தாய்மொழித் தமிழ்வழிக் கல்விதான் பன்முகத் தன்மைகொண்ட சமூகத்தை ஒன்றிணைப்பதற்கான கருவியாக அமையும். ஆனால் மாற்றுமொழியான ஆங்கில வழிப் படிப்பு அதைப் பெற்றுள்ளோர், பெற்று வருவோரின் மனநிலை பிறரை வெறுத்தொதுக்கும் குறுகிய மனப்பான்மை கொண் டோராக மாற்றி சமூகத்தின் நல்லிணக்கச் சிந்தனை யைக் குலைத்துவிடும்.

காட்டாக, அறிவியல், ஏன் கலைப்பட்டம், முதுநிலை பட்டம் பயின்றோர் தாய்மொழியிலின்றி மாற்று மொழிவழி படித்திருப்பின் அவர்கள் படித்த பாடம் தவிர வேறு பாடம் படித்தோரை ஏதும் அறியாதாராக எண்ணத் துணிபர். அந்தத் தன்மையில்தான் அவர்கள் நடந்து கொள்வர். இது இவர் தனித்துவமானவர் என்றும் பிறர் வெறுக்கத்தக்கவர் என நினைக்கக்கூடும். இன்னும் அழுத்தமான எடுத்துக்காட்டாக ஆங்கில வழியில் சட்டம் பயின்றோர் ஆங்கில வழியிலேயே வேறு பாடம் படித்தோர் அனைவரும் சட்டத்தைப் பொறுத்தவரை ஏதும் அறியாதோர் என்று எண்ணித்தான் நடத்துவர். பொது மக்கள் எவ்வாறு நடத்தப்படுவர், நடத்தப்படு கின்றனர் என்பதை கட்டுரையைப் படிப்போரின்

கருத்துக்கே விடுகிறேன். இதில் நம் நாட்டின் சட்டக் கூற்று. சட்டத்திற்கெதிராகத் தவறு, தப்பு சட்டம் தெரியாது இழைத்துவிட்டேன் எனச் சொல்லி சட்டத்தின் பிடியி லிருந்து தப்பமுடியாது (Ignorance of Law is not an excuse). கொடுமை என்னவெனில் நம் நாட்டின் அரசமைப்புச் சட்டத்தையும் ஏனைய சட்டங்களையும் ஒன்றிய அரசுடன் மாநில அரசுகளும் ஆங்கில மொழி யிலின்றி அவ்வப்பகுதி மொழிகளில் பெயர்த்து பரவ லாகக் கொண்டு செல்லவில்லை என்பதுதான் நகை முரணானது.

ஆனால் தாய்மொழிவழியில் அனைத்துக் கல்வியும் அளிக்கப்பட்டிருப்பின் எவராலும் சட்டங்கள் உள்ளிட்டு எதையும் எளிதில் புரிந்துகொள்ளும் இயல்பான திறன் உண்டு என்றெண்ணி இணக்கமான ஒன்றிணைந்த உணர்வுகளுடன் வெறுத்தொதுக்கும் குறுகிய மனப் பான்மையின்றி அனைவரும் சமூக மேம்பாடு பெற்று வாழ முடியும்.

தமிழகத்தில் தமிழ்வழிக் கல்விக்காகச் சென்ற அரை நூற்றாண்டுக்கும் மேலாக அண்ணா தி.மு.க. தவிர்த்த அனைத்துக் கட்சிகளும் அமைப்புகளும் இயக்கங்களும் குரல் கொடுத்து வந்துள்ள நிலையில் கழுதை கெட்டால் குட்டிச்சுவரான கதையாக இங்கு தன்மானமற்ற தமிழக அரசு 2500 மழலையர் பள்ளி களை அங்கன் வாடிகளில் 2019-2020ஆம் கல்வி யாண்டிலிருந்து தொடங்க உள்ளது என அறிவித்து விட்டது.

ஏற்கெனவே முதல் வகுப்பிலிருந்தே கணிசமான அரசுத் தொடக்கப் பள்ளிகளின் தமிழ்வழிக் கல்வி யின்றி ஆங்கில வழிக் கல்வியைப் புகுத்தி 70 இலக்கம் இளம் தளிர்மனங்களை படிப்பு என்ற பெயரில் துடிக்கத் துடிக்கக் கருகடித்துக் கொண்டிருப்பதோடு இன்னும் மழலையர் மனங்களையும் கருகடிக்க முற்பட்டுள்ளனர்.

இது நாட்டிற்கும் மக்களுக்கும் இழைக்கப்படும் வன்கொடுமை. இது ஓர் அரச பயங்கரவாதம். எனவே தமிழ்வழிக் கல்வி மட்டுமே தமிழகத்தில் அளித்திடப் பட வேண்டுமென்று அரசுக்கு நெருக்குதல் கொடுத்து மேற்சொன்ன அரசின் திட்டத்தை கைவிடச் செய்ய வேண்டுவது நாட்டிலுள்ள மக்கள் பற்றுள்ளோர் அனை வரின் கடமை.

இதற்கு, அரசுக்கெதிரான போராட்டம்தான் ஒரே வழி. போராட்டப் பாதையில் மக்களை அணிதிரட்டி அனைத்து முற்போக்கு அமைப்புகளும் ஒன்றிணைந்து ஓரணியாய் போர்க்களம் கண்டு வென்றெடுப்போம், தமிழ்வழிக் கல்வியை.

# தமிழ்ப்பண்பாட்டு ஆய்வாளர் அறிஞர் க.ப. அறவாணன் மறைந்தார்!



தமிழறிஞரும், தமிழ்ப் பண்பாட்டு ஆய்வாளரும், மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தருமான பேராசிரியர் க.ப. அறவாணன் அவர்கள், தம் இல்லத்தில் 23.12.2018 அன்று, தம் 77ஆம் அகவையில், மாரடைப் புக்கு ஆளாகி மறைந்தார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அவர் திருநெல்வேலி மாவட்டம் கடலங் குடியில் 1941இல் பிறந்தவர்.

அவர் தம் 27ஆம் அகவையில், நெல்லை பாளையங்கோட்டை செயின்ட் சேவியர் கல்லூரி யின் முதல்வராக ஆனார். படிப்படியாக உயர்ந்து நெல்லை மனோன்மணீயம் சுந்தரனார் பல் கலைக்கழகத்தின் துணைவேந்தர் ஆனார்.

அவர் எழுதிய நூல்களுள் ‘‘தமிழக மக்கள் வரலாறு’’, ‘‘தமிழரின் தாயகம்’’, ‘‘கிழக்கும் மேற்கும்’’ ஆகியவை குறிப்பிடத்தக்கது. அவரும், நானும் ‘‘பாட்டாளி மக்கள் கட்சியின் தொண்டர் அணி’’ தொடக்க விழாவில் உரையாற்றினோம். அவர்தம் இல்லம் அடைந்தவுடன், கைப்பேசியில் என்னு டன் தொடர்பு கொண்டு, எனக்குப் பாராட்டுத் தெரிவித்தார்.

பல தமிழகத் தலைவர்களின் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவராக க.ப. அறவாணன் விளங்கினார்.

அவரை ஒத்தவர்களைத் தமிழக அரசினர் தக்க வகையில் பயன்படுத்தி இருக்க வேண்டும். தமிழக அரசினர் இவ்வகையில் இனியேனும் செயல்பட வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்.

வளர்க க.ப. அறவாணன் புகழ்!

**- வே. ஆனைமுத்து**

# பசுமைத் தீர்ப்பாயத்தின் தீர்ப்பு திட்டமிட்ட கபட நாடகம்

- செங்கதிர்

**சு**ற்றுச்சூழலுக்கும் மக்கள் நலத்துக்கும் பல வகையிலும் கேடுகளை உண்டாக்கும் தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையை மூடக்கோரி நடத்திய நூறாவது நாள் போராட்டத்தின்போது காவல்துறை காட்டு மிராண்டித்தனமாகச் சுட்டதில் கடந்த மே 22இல் 13 பேர் மாண்டனர். அதுவரை ஸ்டெர்லைட் ஆலைக்கு ஆதரவாகச் செயல்பட்டுவந்த தமிழ்நாட்டு அரசு, துப்பாக்கிச் சூட்டால் எழுந்த கொந்தளிப்பான சூழலைத் தணிப்பதற்காக 28.5.2018 அன்று ஸ்டெர்லைட் ஆலையை மூடுவதற்கான அரசாணையைப் பிறப்பித்தது. ஆலையைப் பூட்டியது.

கடந்த காலத்தில் ஸ்டெர்லைட் ஆலை அய்ந்து தடவைகள் மூடப்பட்டது. ஆனால் பன்னாட்டு நிறுவன மான வேதாந்தா குழுமத்திற்குச் சொந்தமான ஸ்டெர் லைட் ஆலை இந்திய அரசியல்வாதிகளிடமும், அதிகார வர்க்கத்திடமும் தனக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி மீண்டும் திறக்க வழிசெய்து கொண்டது. எனவே ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூடுவதற்குத் தமிழ்நாட்டு அரசின் அரசாணை மட்டும் போதாது; தமிழக அமைச்சரவை கூடி இதை அரசின் கொள்கை முடிவாக அறிவிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகளின் தலைவர்களும், ஸ்டெர்லைட் எதிர்ப்புப் போராட்டக் குழுவினரும். சட்டவல்லுநர்களும் வலியுறுத்தினர். பின்னர் உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையின் நீதிபதி சி.டி. செல்வம் தலைமையிலான இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்வு, “28.5.18 நாளிட்ட தமிழக அரசின் ஆணை வலுவற்றதாக உள்ளது” என்று சுட்டிக்காட்டினர். அதன்பிறகும், தமிழ்நாட்டு அரசு, அமைச்சரவையின் கொள்கை முடிவாக அறிவிக்க வில்லை. ஸ்டெர்லைட் ஆலை மீண்டும் திறக்கப்படு வதற்குத் தமிழ்நாட்டு அரசு மறைமுகமாக ஆதரவளித்து வருகிறதோ என்றே அய்யப்பட வேண்டியுள்ளது.

தொழிற்சாலைகளின் நச்சுக்கழிவுகள் சுற்றுச்சூழ லுக்கும் மக்களுக்கும் ஊறு விளைவிக்காமல் இருப்ப தற்கான நிபந்தனைகள், விதிகள் அரசால் வகுக்கப்பட் டுள்ளன. இந்த விதிகள் முறையாகப் பின்பற்றப்படு கின்றனவா என்பதைக் கண்காணிக்க அதிகாரிகளும் அமர்த்தப்பட்டுள்ளனர். இந்தக் காப்பு விதிகளைத் தொழிற்சாலைகள் பின்பற்றுவதில்லை; அதிகாரிகளும் ஆய்வு செய்து முறையாக நடவடிக்கை எடுப்பதில்லை. ஏனெனில் ஆட்சியாளர்கள் எந்தக் கட்சியினராக இருந்த போதிலும் முதலாளிகள் அள்ளித்தரும் பணத்தைப் பெற்றுக் கொண்டு தொழிற்சாலைகளின் விதிமீறல் களுக்கு ஆதரவாகச் செயல்படுகின்றனர். இத்தன்மை யில் தான் மகாராட்டிரத்திலிருந்தும் குசராத்தலிருந்தும்



*மே 28 அன்று தமிழக அரசாணையின்பேரில் பூட்டப்பட்ட ஸ்டெர்லைட் ஆலை*

விரட்டியடிக்கப்பட்ட ஸ்டெர்லைட் ஆலையை அமைப் பதற்கு 1996இல் முதலமைச்சர் செயலலிதா அனுமதி அளித்தார். அதன்பின் கலைஞர் கருணாநிதி முதல மைச்சராக இருந்த போதுதான் ஆலையின் விரிவாக் கத்துக்கு அனுமதி வழங்கப்பட்டது.

சுற்றுச்சூழல் விதிகளால் பெருமுதலாளிய நிறுவனங் களுக்குள்ள தடைகளைத் தளர்த்தும் வகையில் 2010 ஆம் ஆண்டு மன்மோகன் சிங் ஆட்சியில் நடுவண் அரசு ஒரு புதிய சட்டத்தைக் கொண்டு வந்தது. இச் சட்டத்தின்படி, சுற்றுச்சூழல் தொடர்பான வழக்குகள் இனி உயர்நீதிமன்றங்களிலோ, உச்சநீதிமன்றத்திலோ விசாரிப்பதற்கு மாறாக, பசுமைத் தீர்ப்பாயங்களில் விசாரிக்கப்படும். இத்தீர்ப்பாயத்தின் நீதிபதிகளாக நீதித் துறை உறுப்பினர்களும் தொழில்நுட்ப உறுப்பினர் களும் இருப்பார்கள். சென்னையில் அமைக்கப்பட்ட பசுமைத் தீர்ப்பாயத்தின் உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிந்து, புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படாததால், அது செயலிழந்து கிடக்கிறது. எனவே ஸ்டெர்லைட் ஆலை நிர்வாகம், ஆலையை மூடுவதற்கான தமிழக அரசின் ஆணையை எதிர்த்து தில்லியில் உள்ள பசுமைத் தீர்ப்பாயத்தின் தலைமையகத்தில் மேல் முறையீடு செய்தது.

தில்லியில் உள்ள பசுமைத் தீர்ப்பாயம் ஸ்டெர்லைட் ஆலையின் முறையீட்டை விசாரிக்க ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் மூவர் கொண்ட குழுவை அமைப்பதாக அறிவித்தது. தமிழ் நாட்டில் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதிகள் கே. சந்துரு, கே.பி. சிவசுப்பிரமணியன் ஆகியோர்களின்

பெயர்களைப் பரிந்துரைத்தது. ஆனால் ஸ்டெர்லைட் நிர்வாகம் தமிழ்நாட்டைச் சேர்ந்த நீதிபதிகள் தனக்கு எதிராகத் தீர்ப் பளிப்பார்கள் என்று கூறி எதிர்த்தது. அப் போது, தமிழ்நாட்டின் நீதிபதிகள் சிறுமை படுத்தப்படுவதைத் தமிழ்நாட்டு அரசு கண்டிக்கவில்லை. தமிழ் நாட்டைச் சேர்ந்த நீதிபதியையே நியமிக்க வேண்டும் என்று பசுமைத் தீர்ப்பாயத்தில் விண்ணப்பிக்க வில்லை.

மேகாலயா உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி தருண் அகர்வால் தலைமையில் மூவர் கொண்ட விசார ணைக் குழுவைப் பசுமைத் தீர்ப்பாயம் அமைத்தது. ஸ்டெர்லைட் ஆலை பசுமைத் தீர்ப்பாயத்தில் மேல் முறையீடு செய்தபோது, ஸ்டெர்லைட் எதிர்ப்புப் போராட்டக் குழுவின் தலைவர் பேராசிரியர் பாத்திமா, வணிகர் சங்க நிர்வாகி இராசா, மார்க்சிஸ்ட் கட்சி நிர்வாகி அர்ச்சுன், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ ஆகியோர் இந்த வழக்கில் தங்களை இணைத்துக் கொள்ள வேண்டும் என்று கோரினர். இவர்களைத் தலையீட்டாளர்கள் என்று பசுமைத் தீர்ப்பாயம் சேர்த்துக் கொண்டது. இவர்கள், தமிழக அரசின் ஆணை என்பது அரசின் கொள்கை முடிவு ஆகும்; அதனால் இதைப்பற்றி விசாரிக்க பசுமைத் தீர்ப்பாயத்துக்கு அதிகாரம் இல்லை; உயர்நீதி மன்றம் அல்லது உச்சநீதிமன்றம் தான் விசாரிக்க வேண்டும் என்று வாதிட்டனர். முதலில் இச்சிக்கல் குறித்து முடிவு செய்த பிறகுதான் ஸ்டெர்லைட் ஆலையின் மேல்முறையீட்டை ஆய்வுக்கு எடுக்க வேண்டும் என்று கூறினர். ஆனால் பசுமைத் தீர்ப்பாயம் இக்கருத்தைப் பொருட்படுத்தவில்லை.

நீதிபதி தருண் அகர்வால் பணியில் இருந்த போது காசியாபாத் சேமநலநிதி முறைகேடு தொடர்பான சிக்கலில் ஆதாயம் அடைந்தார் என்று குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்; எனவே அவர் விசாரணைக்குழுவின் தலைவராக இருக்கக்கூடாது என்று ஸ்டெர்லைட் எதிர்ப்புப் போராட்டக் குழுவின் தலைவர் பேராசிரியர் பாத்திமா பசுமைத் தீர்ப்பாயத்தில் தடை எழுப்பினார். அந்நிலையில்கூட, தருண் அகர்வாலை மாற்ற வேண்டும் என்று தமிழ்நாட்டு அரசு கோரிக்கை வைக்கவில்லை.

நீதிபதி தருண் அகர்வால் தலைமையிலான குழு கடந்த நவம்பர் மாதம் தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையை ஆய்வு செய்தது; மக்களிடம் கருத்து கேட்டது. 26.11.18 அன்று தன் அறிக்கையைத் தேசியப் பசுமைத் தீர்ப் பாயத்திடம் அளித்தது. அந்த அறிக்கையில், தமிழ்நாட்டு அரசின் ஆணை நியாயமற்றது என்றும், 27 நிபந்த னைகளின் பேரில் ஸ்டெர்லைட் ஆலையை மீண்டும் செயற்பட அனுமதிக்கலாம் என்றும் கூறப்பட்டிருந்தது. ஸ்டெர்லைட் ஆலையால் சுற்றுச்சூழலுக்கும், மக்களுக் கும் ஏற்பட்டுள்ள மாசுகள், கேடுகள் பற்றி மட்டுமே ஆராய வேண்டிய இக்குழு, தமிழக அரசின் ஆணை நியாயமற்றது என்று கூறியிருப்பது ஸ்டெர்லைட் ஆலைக்கு ஆதரவாக தன் அதிகார வரம்பை மீறிய செயலாகும்.




*மேற்கு வங்கத்தில் சிங்கூர், நந்திகிராம் மக்கள் நடத்திய போராட்டம் போல் தூத்துக்குடியிலும் போராட்டம் நடத்தியேனும் ஸ்டெர்லைட் ஆலையை விரட்டியடிக்க வேண்டும்.*

பசுமைத் தீர்ப்பாயத்தின் தலைவர் நீதிபதி ஆதர்ஷ் குமார் கோயல், உறுப்பினர் நீதிபதிகள் இரகுவேந்திர ரத்தோர், எஸ்.பி. வாஸ்டி, கே. இராமகிருட்டிணன், நகின் நந்தா ஆகியோர் அடங்கிய அமர்வு முன் நவம்பர் 28 முதல் திசம்பர் 10 வரை விசாரணை நடந்தது. இதன்மீதான தீர்ப்பு 15.12.18 அன்று வழங்கப்பட்டது.

உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி பதவியிலிருந்து ஓய்வுபெற்ற அதே நாளில் ஆதர்ஷ்குமார் கோயல் தேசியப் பசுமைத் தீர்ப்பாயத்தின் நீதிபதியாக மோடி அரசால் நியமிக்கப்பட்டார். இந்த கோயல்தான் பணியில் இருந்த போது பட்டியல் இனத்தவர், பழங்குடியினர் மீதான வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை நீர்த்துப் போகும் வகையில் தீர்ப்பு அளித்தவராவார். இத்தீர்ப்பை ஆதிக்கச் சாதியினர் கொண்டாடினர். ஆளும் வர்க்கத் திற்கு ஆதரவாகச் செயல்படுபவர் என்பதால் முதலாளி களின் நலன்களைக் காப்பதற்காக மோடி அரசு இவரை நியமித்தது. இந்த அடிப்படையில்தான் பசுமைத் தீர்ப் பாயத்தின் தீர்ப்பும் அமைந்துள்ளது.

நீதிபதி தருண் அகர்வால் பரிந்துரையைத் தேசியப் பசுமைத் தீர்ப்பாயம் அப்படியே ஏற்றுக்கொண்டுள்ளது. தேசியப் பசுமைத் தீர்ப்பாயத்தின் தீர்ப்பில் ஸ்டெர்லைட் ஆலையால் மக்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் ஏற்படும் கேடுகள் பற்றிய குற்றச்சாட்டு குறித்து எதுவும் கூறாமல் பூசி மெழுகப்பட்டுள்ளது.

இத்தீர்ப்பில், ஆலையை மூடுவதற்கான தமிழக அரசின் ஆணை வலுவற்றது; நியாயமற்றது என்பதால்




*ஸ்டெர்லைட் ஆலை இரண்டு மாதத்தில் திறக்கப்படும் என்று அதன் தலைமைச் செயல் அதிகாரி பி.ராம்நாத் 20-12-2018 அன்று சென்னையில் செய்தியாளர்களிடம் கூறினார்.*

இரத்து செய்யப்படுகிறது; ஆலையின் உரிமத்தைப் புதுப்பிக்க தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் புதிதாக ஆணை பிறப்பிக்க வேண்டும்; சுற்றுச்சூழலைப் பாது காக்க மூவர் குழு தெரிவித்துள்ள பரிந்துரைகளை ஸ்டெர்லைட் ஆலை நிர்வாகம் கண்டிப்புடன் பின்பற்ற வேண்டும்; விதிகளை மீறி 3-5 இலட்சம் டன் தாமிரக் கழிவுகளைப் பட்டா நிலத்தில் கொட்டியதற்காக ரூ.2.5 கோடி அபராதம் விதிக்கப்படுகிறது. தூத்துக்குடி மக்களுக் கான நலத் திட்டங்களை ரூ.100 கோடி செலவில் மூன்று ஆண்டுகளுக்குள் நிறைவேற்ற வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டில் கூட உச்சநீதிமன்றம் ஸ்டெர்லைட் ஆலைக்கு ரூ.100 கோடி அபராதம் விதித்தது. அதன் பிறகும் தொடர்ந்து நச்சுக்கழிவுகளை வெளியேற்றியது. பசுமைத் தீர்ப்பாயத்தின் தீர்ப்பை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்யப் போவதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.

28.5.2018 அன்று ஸ்டெர்லைட் ஆலையைத் தமிழக அரசு பூட்டியது முதல் நடைபெற்ற நிகழ்வுகள் ஆலையை விரைவில் திறப்பதற்கான சூழ்ச்சித் திட் டங்கள் என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. இதைத் தான் பசுமைத் தீர்ப்பாயத்தின் தீர்ப்பு உறுதி செய்கிறது.

மே 22 அன்று காவல்துறையினர் துப்பாக்கியால் சுட்டதில் கொல்லப்பட்ட 13 பேரில் 12 பேர் தலையிலும் மார்பிலும் குண்டு பாய்ந்திருக்கிறது என்கிற தடய வியல் அறிக்கையின் விவரம் 22.12.2018 அன்று வெளிவந்துள்ளது. எடப்பாடி பழனிச்சாமி அரசு எந்த அளவுக்கு ஸ்டெர்லைட் ஆலைக்கு ஆதரவாகக் கொலை வெறித் தாக்குதல் நடத்தியுள்ளது என்பது படிப்போர் மனங்களைப் பதற வைக்கிறது.

எனவே, தமிழக அரசு ஸ்டெர்லைட் ஆலையை நிரந்தரமாக மூடுவதற்கான கொள்கை அறிவிப்பை வெளியிட வேண்டும். மேலும் இந்த ஆட்சியாளர் களை நம்பாமல் மக்கள் திரள் போராட்டங்கள் மூலம் ஸ்டெர்லைட் ஆலையை விரட்டியடிப்போம்.

## மடல்

மதிப்புமிகு ஐயா,

சிந்தனையாளன் பொங்கல் மலர் 2019 வெளியீட்டு விழாவில் மத ஆதிக்க எதிர்ப்பு மாநாடும் தமிழ்வழிக் கல்வி மாநாடும் நடைபெறுவது காலத்தின் கட்டாயத் தேவையாகும்.

கடந்த 25 ஆண்டுகளாக தமிழுக்காக நடைபெற்ற போராட்டங்கள் அனைத்தும் பயனற்றுவிட்டன. உடனடியாக 1324 தொடக்கப் பள்ளிகள் 15 மாணவர்களுக்கும் குறை வாக இருப்பதால் மூடப்படுகின்றன. மேலும் அங்கன்வாடி குழந்தைகளையும் ஆங்கில வழிக்கு மாற்றி அரசுப் பள்ளி களை பாதுகாகக் கல்வித் துறை முடிவு எடுத்துவிட்டது. உச்ச நீதிமன்றம் தாய் மொழி கல்வியைக் கட்டாயப்படுத்தவில்லை. அடுத்த தலைமுறைக்கு தமிழைக் கொண்டு செல்ல அரசு விரும்பவில்லை. அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 25க்கும் மேலான சலுகைகள் வழங்கப்பட்டும் வெகு மக்கள் கூட்டம் அரசுப்பள்ளிகளை தமிழ்க் கல்வியைப் புறக்கணிக்கிறது.

இத்தகைய சூழ்நிலையில் நடைபெறும் தமிழ் வழிக் கல்வி மாநாடு கல்வியாளர்களின் கவனத்தை மேம்படுத்த வேண்டும்.

ஆகவே, தமிழுக்கான மாநாடு தமிழகத்துக்கும் தேவை யான கொள்கை முடிவுகளை அறிவிக்க வேண்டும்.

தமிழ்வழிக்கல்வி மாணவர்களுக்கு உயர்கல்வி-வேலை வாய்ப்புகளில் 50 சதம் இடஒதுக்கீடு செய்ய வேண்டும்.

தமிழ் மாநிலத்தில் வேலை வேண்டுமென்றால் தமிழ்வழிப்படி! வேறு வழிகளில் படித்தால் வேறிடங் களில் வேலை தேடு! என்ற முழக்கம் கொள்கை முடிவாக இருந் தால் நல்லது.

**இர.அரங்கநாடன்,** அரியலூர்

## மணியார் க.இளங்கோவன் மறைவு

சிதம்பரம் வட்டம், நார்த்தங்குடி, மறைந்த பேராசிரியர் க.மணியரன், மருத்துவர் க.சம்பந்தம் ஆகியோரின் இளைய சகோதரர் ஓய்வுபெற்ற ஆசிரியர், மணியார் க.இளங்கோவன் தன் 70-ஆம் அகவையில் நார்த்தங்குடி தன் இல்லத்தில் காலமானார்கள்.

அவருக்கு மணிமொழி, தேன்மொழி என இரு மகள்கள் உள்ளனர்.

அன்னாரின் இறுதி நிகழ்ச்சி 22-12-2018 அன்று நடைபெற்றது. உயர்நீதிமன்ற நீதிபதி என்.கிருபாகரன், சிதம்பரம் நகர்மன்ற முன்னாள் தலைவர் வி.எம்.எஸ். சந்திரபாண்டியன், புவனகிரி சட்டமன்ற உறுப்பினர் துரை.கி.சரவணன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பு.தா.இளங்கோவன், தி.க.மாவட்டத் தலைவர் பேராசிரியர் பூ.சி.இளங்கோவன் ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.

செய்தி : **இரா.காந்தி,** வடக்குமாங்குடி

# காந்தியின் மறைவும் - பெரியார் இயக்கமும்

எஸ்.வி. ராஜதுரை

நவீன இந்திய வரலாற்றில் மறக்க முடியாத மாபெரும் துக்க நாள், 30.01.1948. காந்தி கொலை செய்யப்பட்ட செய்தியை அறிந்தவுடனேயே இந்தியா முழுவதும் பதறியது - ஆர்.எஸ்.எஸ். அமைப்பினரும் வேறு சில தீவிரவாத இந்து அமைப்புகளும் இனிப்புகள் வழங்கிக் கொண்டாடிய போதிலும், அவர் இறந்த ஒரு மணிநேரத்திற்குள் கொலையாளியின் அடையாளமும் பின்னணியும் சந்தேகத்துக்கிடமின்றி முழுமையாகக் கண்டுபிடிக்கப்பட்டு உலகத்திற்கு அறிவிக்கப்படும் என்று மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த போது, அனைத் திந்திய வானொலி நிலையமோ அன்றிரவு ஏழரை மணிக்கு ஒலிபரப்பிய செய்தியில், ''காந்தியைச்சுட்டவன், அநேகமாக ஓர் இந்துவாக இருக்குமென்று நம்பப்படுகிறது'' என்று கூறியது. இப்படிப்பட்ட செய்தி அறிவிப்பு, 'ஒரு முஸ்லிம் தான் இந்து வாக வேடம் போட்டிருக்க வேண்டும்' என்று பலராலும் புரிந்து கொள்ளப்பட வழி செய்ததால், அன்றைய சென்னை மாகா ணத்தில் சில இடங்களில் முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல் சம்பவங்கள் நடக்கத் தொடங்கின. பெரியாரின் சொந்த ஊரான ஈரோட்டிலும்கூட ஏராளமான முஸ்லிம்கள் தாக்கப் பட்டு, அவர்களது உடைமைகள் அழிக்கப்பட்டன. உள்ளூர்ப் பிரமுகர்களும் நேர்மையும் கடமையும் தவறாத காவல்துறை அதிகாரிகளும் மேற்கொண்ட முயற்சிகளின் காரணமாக அங்கு வகுப்புக் கலவரம் மூள்வது தடுக்கப்பட்டது.

காந்தியைக் கொன்ற கோட்சே, 'சித்பவன் பார்ப்பனர்' என்பது தெரிந்தவுடனேயே, மகாராஷ்ட்ராவின் கொங்கன் பகுதி யில் பார்ப்பனர்கள் மீது தாக்குதல் தொடங்கியது, இத்தகைய வன்முறை நிகழ்ச்சிகள் தமிழ்நாட்டில் நடக்காமல் செய்யப் பட்டதற்கு பெரியார் 31.1.1948-இல் திருச்சி வானொலி நிலை யத்தில் ஆற்றிய உரை முக்கியக் காரணம்.

காந்தி கொலையுண்ட செய்தியைக் கேட்டதும், பெரியார் விடுத்த முதல் அறிக்கை கூறியது : ''காந்தியார் சுட்டுக் கொல்லப் பட்டார் என்கின்ற செய்தியானது, எனக்குக் கேட்டதும் சிறிதுகூட நம்ப முடியாததாகவே இருந்தது. இது உண்மை தான் என்ற நிலை ஏற்பட்டதும் மனம் பதறிவிட்டது. இந்தியா வும் பதறி இருக்கும். மதமும் வைதீகமும் இக்கொலை பாதகத் துக்குத் தூண்டு கோலாக இருக்கலாம் என்பது என் கருத்து. இக்கொலைக்குத் திரைமறைவில் சதி முயற்சி இருந்தே இருக்க வேண்டும். அது காந்தியார் எந்த மக்களுக்காகப் பாடுபட்டாரோ- உயிர் வாழ்ந்து வந்தாரோ அவர்களாலேயே தான் இச்சதிச் செயல் ஏற்பட்டிருக்க வேண்டும். இது மிக மிக வெறுக்கத்தக்க காரியமாகும். இவரது காலிஸ்தானம் எப்படிப் பூர்த்தி செய்யப் படும்என்பது ஒரு மாபெரும் பிரச்சினையே ஆகும். இப்பெரியாரின் இப் பரிதாபகரமான முடிவின் காரணமாகவாவது நாட்டில் இனி அரசியல் மத இயல் கருத்து வேற்றுமையும் கலவரங்களும் இல்லாமல் மக்கள் நடந்து கொள்வதே அவரை நாம் மரியாதை செய்வதாகும்'' (குடிஅரசு, 31-1-1948).

பெரியார் விடுத்த இரண்டாவது அறிக்கை கூறியது: ''பெரியார் காந்தியவர்களின் விசனிக்கத்தக்க திடீர் மறைவு என்னைத் திடுக்கிட வைத்தது. இந்திய மக்களனைவரையுமே இந்நிகழ்ச்சி திடுக்கிட வைத்திருக்குமென உறுதியாக நம்புகிறேன். கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாகவே, தோழர் காந்தியார் இப்பரந்த உபகண்ட மக்களின் எதிர்கால வாழ்வுக்கு வழி காட்டியாயிருந்து வந்தார். மக்களுக்கு அவரது தொண்டு மகத்தானது. அவரது இலட்சியக் கோட்பாடுகள் உலக மரியாதையினையேற்றுவிட்டன. காந்தியார் மீது நடத்தியிருக்கும் மோசமான தாக்குதல் கண்டனத்துக்குரியதாகும். பல திறப்பட்ட எல்லா வகுப்பு மக்களுக்கும் நியாயமாகவும் பாரபட்சமற்ற முறையிலும் நடந்துகொண்ட காந்தியார், இக்கொடுந் தாக்குதலுக்கு உள்ளாயிருக்கிறாரென்றால், இது மிகவும் வெறுக்கத்தக்கதாகும். இக்கொலை யாளியை ஆட்டிப் படைக்கும் சதிக்கூட்டமொன்று திரைமறைவில் வேலை செய்து வர வேண்டும். வட இந்தியாவில் நடைபெற்றுவரும் காரியங்களுக்கெல்லாம் அடிப்படைக் காரணமாயிருப்பது மதவெறியாகும். காந்தியாரின் இடத்தை நிறைவு செய்பவர் இந்நாட்டில் எவருமே இல்லை. மக்கள் தங்கள் அரசியல், மத வேறுபாடுகளை மறந்து, சகோதர பாவத்துடன் நடந்து கொள்வதே நாம் காந்தியாருக்குச் செய்யும் மரியாதையாகும். தென்னாட்டுத் திராவிடர்கள் இயல்பாகவே நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலைக்க வைப்பர்'' (குடிஅரசு,7-2-1948).

காந்தியாரின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் கூட்டம் 'குடிஅரசு' அலுவலகத்தில் 2.2.1948 அன்று நடத்தப்பட்ட துடன், அந்த அலுவலகத்துக்கு விடுமுறையும் விடப்பட்டது (குடிஅரசு 7.2.1948).

திராவிடர் கழகத்தின் சார்பில் எல்லா ஊர்களிலும் 29.2.1948 அன்று காந்தியாரின் மறைவுக்கு இரங்கல் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும் என்று பெரியார் விடுத்த அறிக்கை (குடிஅரசு, 21.2.1948), அவற்றுக்கான விதிமுறைகளையும் வகுத்தது :

'காந்தியார் அவர்கள் இயற்கைக்கு விரோதமாக மரண மாக்கப்பட்டதைக் குறித்து அநுதாபப்படவும் கொலைச் சம்பவத்தைக் கண்டிக்கவும் திராவிடர் கழகத்தின் சார்பாக ஒவ்வொரு ஊரிலும் திராவிடர் கழகத்தார் அநுதாபம் - கண்டனக் கூட்டம் 29.2.1948 ஞாயிற்றுக்கிழமையன்று ஏற்பாடு செய்ய வேண்டியது. கூட்டத்திற்கு ஆடம்பரம் கூடாது, செலவு கூடாது, ஒலிபெருக்கி கூடாது, சொற்பொழிவு கூடாது, தலைவர் அல்லது அவரால் அழைக்கப்பட்டவர் பின்வரும் தீர்மானத்தைப் படித்ததும், பொதுமக்கள் எழுந்து நின்று ஒரு நிமிஷம் மவுனமாக இருந்ததும் மிக அமைதியாகப் பிரிந்து விட வேண்டியது :-

காந்தியார் மறைவுக்கு அநுதாபத் தீர்மானம் : 'சென்னை மாகாணத்தில் உள்ள திராவிடர் கழகத்தின் கிளை ஸ்தாபன மாகிய ........ ஜில்லா ........ ஊர் ....... திராவிடர் கழகத்தார் சார்பில் கூட்டப்பட்டதும் திராவிடர் கழகத்தவர்கள் பெரிதும் கூடி உள்ளதுமான இக்கூட்டமானது, உலக மக்களால் போற்றப்

பட்டவரும் இந்திய தேசியக் காங்கிரஸ் நடப்புக்கு மூலகாரண மாயிருந்து அதை நடத்திவந்த முக்கியத் தலைவரும், சத்தியம், அன்பு, ஒற்றுமை முதலிய உயர் குணங்களைச் சதாசர்வகாலம் மக்களுக்குப் போதித்து வந்த உத்தமரும் ஆன ஒப்பற்ற பெரியார் காந்தியார் அவர்கள் இயற்கைக்கு மாறான தன்மையில் மரணமடைந்தது குறித்துத்தனது ஆழ்ந்த துக்கத்தையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறது. இம்மரணத்துக்குக் காரணமாக இருந்த கொலை பாதகனையும் அவனுக்குப் பின்னால் ஆதரவாகவும், நடத்துபவர்களாகவும் இருந்த ஸ்தாபனங்களையும், மக்களையும் வெறுப்புக்காட்டிக் கண்டிக்கிறது. இந்தப் பரிதாபகரமான நிகழ்ச்சியின் விளைவைப் படிப்பினையாகக் கொண்டு இந்நாட்டு மக்கள் யாவரும் சாதி, மத, இன வேறுபாடு காரணமாய் வேற்றுமை உணர்ச்சி இல்லாமல் ஒன்று பட்டு வாழ்வோமாக!

அன்பும், அறிவும், சத்தியமும் என்றும் எங்கும் நிகழ்வ தாகுக. அவையே யாவற்றிலும் வெற்றி பெறுவதாகுக.' இத்தீர் மானத்தை மத்திய நிலையத்துக்கும், காந்தியார் மகன் தோழர் தேவதாஸ் காந்திக்கும், பண்டித ஜவஹர்லால் நேரு அவர் களுக்கும் அனுப்ப வேண்டியது. செய்தியை எல்லாப் பத்திரி கைகளுக்கும் அனுப்பவும்.'

பாதுகாப்புக்கான தக்க ஏற்பாடுகள் செய்யத் தவறிய தற்குமான பொறுப்பு, அன்று இந்திய உள்துறை அமைச்சராக இருந்த சர்தார் வல்லபாய் பட்டேலுக்கே உரியது என்று ஜெய பிரகாஷ் நாராயணன் கூறியதைச் சுட்டிக்காட்டிய 'குடிஅரசு', "காந்தி பலியாக்கப்பட்டதன் காரணமாய், இந்து மக்கள் சமுதாயத்தில் வருணாச்சிரம தர்மமுறை, அதாவது பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன், பஞ்சமன் என்பதான பிரிவு (பிறவி உரிமை) முறை இனி கிடையாது. வருண முறையைக் குறிக்கும் சட்டம், சாஸ்திரம், சம்பிரதாயங்களும் இந்திய சுயராஜ்ஜி யத்தில் இனி அனுஷ்டிக்கப்படக்கூடாது. இவை ஒழியும்படியாக அவசியமான எல்லா ஏற்பாடுகளும் கையாளப்படும் என்று சுயராஜ்ய சர்க்கார் பேரால் ஏற்பாடு செய்வார்களேயானால் இந்த நாட்டைப் பிடித்த எந்தவிதமான கேடும் ஒரே அடியாய் தீர்ந்துவிடும் என்றும், ஆர்.எஸ்.எஸ்., இந்து மகாசபை போன்றவற்றைத் தடைசெய்வது மட்டும் போதாது என்றும் கூறியது ('காந்தியார் முடிவு', குடிஅரசு, 7.2.1948).

காந்தியின் அஸ்தியைக் கரைப்பதற்கு மத்திய அரசாங்கமே செய்த ஏற்பாடுகளைப் பற்றி 'குடிஅரசு' ஏட்டில் வெளிவந்த இன்னொரு தலையங்கம் கூறியது : "(காந்தியார்) மத இயலில், மதத்துக்கு மதம் வேறுபாடில்லை என்றும், மத முடிவுகள் எல்லாம் ஒன்றுதான் என்றும் வற்புறுத்தியவர், கடவுள் இயலில், கடவுள் ஒன்றுதான் என்றும் அந்த ஒன்றைத்தான் பலரும் பலவாறு கூறிப் போனார்கள் என்றும், ஆனால் எல்லா வற்றையும் ஒன்றாகவேதான் நான் மதிக்கிறேன் என்றும் விளக்கிக் கூறி, கடவுள் வழிபாட்டிற்காக அமைந்த கோவில் களை 'விபசார விடுதிகள்' என்று கூறி, அங்குத் தரகனோ, அந்தக் கடவுளுக்குப் பால், பழம், சோறோ வேண்டியதில்லை; திறந்த வெளியே போதும் என்றவர். அதாவது, விக்கிரக ஆராதனை கூடாது, பிரார்த்தனையே போதும் என்று வற்புறுத் தியவர். சமுதாய இயலில், ஒருவரை ஒருவர் சுரண்டுதல் கூடாது; பரம்பரையாக ஒருவர் உறிஞ்சிப் பிழைக்கவும், அதற்காக மற்றொருவர் நைந்து வாழ்க்கை கசந்து வாழவும், அதற்காக ஒரு கூட்டம் ஒடுக்கப்பட்டவர்களாய்-தாழ்த்தப்பட்ட வர்களாய் இருந்து வருவது ஈனம் என்றும், இந்த நாட்டு மக்கள் அனைவரும் ஒரே நாட்டினர் என்றும் வற்புறுத்தியவர். அவர் மறைந்த பதினாறாம் நாளில், அவருடைய சாம் பல்களை எல்லாம் இந்த நாட்டின் 'புண்ணிய' நதிகளில் கரைத்து விடப்பட்ட ஒரு சடங்கையும், அதைப் பக்தி விசுவாசமாகப் பலர் தரிசித்துச் சென்றனர் என்ற விளம்பரச் செய்திகளையும், அதை ஆங்காங்கே உள்ளவர்கள் அவை கொண்டு போகப்பட்டபோதும், கரைத்த போதும் ஏராளமாகக் கண்டு வணங்கிச் சென்றனர் என்ற செய்திகளைப் பார்க்கும்போதும் பெரிதும் வருத்தமடை கின்றோம். காந்தியாரின் படுகொலை விளைவித்த வருத்தத் தைக் காட்டிலும், அவருடைய முடிவு இந்தப்படி சித்திரவதை செய்யப்படுவது-நமக்கு மட்டுமல்ல, பகுத்தறிவுடைய எவருக் கும் அதிக வருத்தத்தையே உண்டுபண்ணும் எனலாம்" ('காந்தியார் முடிவிற்குப் பின்', குடிஅரசு, 14.2.1948).

காந்தியின் மறைவையொட்டி, இந்தியாவின் சில பகுதி களில் நடந்தவற்றைப் போன்ற கலவரங்கள் ஏதும் தமிழகத்தில் நடக்காமல் இருந்ததற்கு முக்கியப் பங்களிப்புச் செய்த, பெரியார் மீதும் திராவிடர் கழகத்தின் மீதும் தேசியப் பத்திரிகைகள் எனக் கூறிக்கொண்ட சில ஏடுகள், தொடர்ந்து 'வகுப்பு துவேஷக்' குற்றச்சாட்டைக் கூறி வந்ததால், காந்தி இறந்த 32 நாள்களுக்குப் பிறகு, திராவிடர் கழகத்தின் 'கருஞ்சட்டைப் படை' (இது ஆர்.எஸ்.எஸ். போல ஆயுதப் பயிற்சியளிக்கும் அமைப்பு அல்ல) சென்னை அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டதும், தமிழகம் முழுவதிலுள்ள திராவிடர் கழக அலுவலகங்களிலும் கழக உறுப்பினர்களின் வீடுகளிலும் காவல் துறையினர் திடீர் சோதனைகளில் ஈடுபட்டதும் வரலாற்று முரண்.

இந்த ஒடுக்குமுறை நடவடிக்கைகள் தொடங்கப்பட்ட தற்குச் சில வாரங்களுக்குப் பின், தூத்துக்குடியில் நடந்த திராவிடர் கழக மாநாட்டில் தலைமையுரை ஆற்றிய பெரியார், முதலில் எடுத்துக்கொண்ட விஷயம் காந்தி கொலைதான். அந்தக் கொலைக்கான காரணத்தைப் பெரியார் விளக்கினார் : 'சூத்திரனுக்கு தபஸ் செய்யும் உரிமை இல்லை என்று கூறி அவனைக் கொல்லும்படி இராமனுக்கு உத்தரவிட்ட அதே சக்திகள் தாம் இப்போது காந்தியைக் கொன்றுவிட்டன. காந்தியார் சம்புகன் இனத்தாராகவும், கொன்றவன் இராமன் இனத்தா னாகவும் இருந்ததுதான் இக்கொலைக்குக் காரணமே ஒழிய - மற்றபடி தனிப்பட்ட மக்கள் மீதோ, தனிப்பட்ட குணங்கள் மீதோ குறை கூறுவது பொருத்த மற்றதாகும்' (குடிஅரசு, 15.5.1948).

காந்தியாருக்கு நினைவுச் சின்னங்கள் அமைக்க வேண்டும் என்று காங்கிரஸ்காரர்கள் முதல் பிரபல பத்திரிகைகள் வரை பலரும் பலவித ஆலோசனைகளைச் சொல்லிக் கொண்டிருந்த போது, பெரியாரும் தம் பங்குக்குச் சில ஆலோசனைகளை அனைத்திந்தியக் காங்கிரஸ் கமிட்டி, ஜவகர்லால் நேரு, ராஜ கோபாலாச்சாரியார், பட்டேல், ராஜேந்திர பிரசாத், ஜெயபிரகாஷ் நாராயணன் ஆகியோருக்கு அனுப்பினார். இந்தியாவுக்கு 'காந்தி தேசம்' அல்லது 'காந்திஸ் தான்' என்று பெயரிடலாம் என்பது அந்த ஆலோசனைகளில் ஒன்று! (குடிஅரசு, 14.2.1948).

நன்றி : "**விகடன் தடம்**", நவம்பர், 2018

# காந்தி சிலையை அகற்றிய பல்கலைக்கழகம்

- இராமியா

ஆப்பிரிக்கா கண்டத்தின் மேற்குப்பகுதியில் அமைந்து உள்ளது காணா எனும் நாடாகும். அந் நாட்டின் தலைநகரான ஆக்ராவில் அந்நாட்டின் மிகப் பெரிய பல்கலைக்கழகமான காணா பல்கலைக்கழகம் உள்ளது. இப்பல்கலைக்கழகம் 1948ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இன்று இப்பல்கலைக் கழகத்தில் சுமார் 40,000 மாணவர்கள் படித்துக் கொண்டு இருக்கிறார்கள். இங்கு 2016ஆம் ஆண்டில் இந்தியா - காணா இருநாடுகளின் நட்புறவுக்கு "அடையாளமாக" அப்போதைய குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி, காந்தியாரின் சிலையைத் திறந்து வைத்தார். அவ்வாறு காந்தியாரின் சிலையைத் திறப்பதை அந்நாட்டின் அறிவுலக மக்கள் விரும்பவில்லை. ஏன்?

காந்தியார் தென் ஆப்பிரிக்காவில் இருந்த பொழுது "இந்தியர்கள் கருப்பின மக்களைவிட மிகவும் உயர்ந்தவர்கள்" என்று கூறியதைச் சுட்டிக்காட்டி, அவர்கள் காந்தி சிலையை நிறுவுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆனால் அந்நாட்டு அரசே அவர்களின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல், இந்தியாவுடன் "நல்லுறவைப்" பேணவேண்டும் என்ற முனைப்பில் காந்தி சிலையைத் திறக்க அனுமதித்து விட்டது.

காணா நாட்டு மக்கள் தங்கள் போராட்டத்தைத் தொடர்ந்தனர். 'உலக நாடுகளுடன் நல்லுறவு' என்ற பெயரில் தங்கள் சுயமரியாதையைக் காவுகொடுக்கக் கூடாது என்று பரப்புரை செய்தனர்.

சிலை திறக்கப்பட்ட சிலவாரங்களிலேயே சிலையின் கண் கண்ணாடிப் பகுதி உடைக்கப்பட்டது. இரண்டு ஆண்டுகள் கழித்து 13.12.2018 அன்று பல்கலைக் கழகத்தினரால் சிலை முற்றிலும் அகற்றப்பட்டது. இதுகுறித்து காணா நாட்டு வெளியுறவுத்துறை இச்சிலை அக்கற்றலுக்கும் அரசுக்கும் தொடர்பு இல்லை என்றும், அதுமுற்றிலும் பல்கலைக்கழகத்தின் உள் விவகாரம் என்றும் அறிவித்து உள்ளது. மேலும் இந்திய நாட்டுடனான நல்லுறவு கெட்டுவிடக்கூடாது என்பதற்காக,வேறு இடத்தில் காந்தி சிலையை நிறுவுவதைப் பற்றி யோசித்துக் கொண்டு இருப்பதாகவும் காணா அரசு கூறி உள்ளது.

காணாவைத் தொடர்ந்து இன்னொரு ஆப்பிரிக்க நாடான மாளவி நாட்டிலும் காந்தி சிலையை நிறுவுவதற்கு எதிரான போராட்டங்கள் வெடித்து உள்ளன.

காந்தியாரின் நிறவெறி உணர்வு பற்றி அவருடைய பேரனும், வரலாற்று ஆசிரியரும், ஆராய்ச்சியாளருமான ராஜ்மோகன் காந்தி கருத்து தெரிவிக்கையில், காந்தியார் கருப்பின மக்கள் மீது பாரபட்ச உணர்வு கொண்டு இருந்தது உண்மைதான் என்று கூறி உள்ளார். ஆனால் தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்களின் உரிமைகளுக்காக காந்தியார் முன்னெடுத்த போராட்டங்கள் தான் கருப்பின மக்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராட ஒரு உந்துவிசையாக இருந்தது என்று அவர் கூறினார்.

காந்தியாரின் நிறச்சமத்துவக் கொள்கை மட்டும் அல்ல; எந்த விதச் சுரண்டலுக்கு எதிரான கொள்கையும் விசித்திரமானதே. கருப்பின மக்களுடனான இனப்பாகுபாட்டுக் கொள்கையை வெளிப்படுத்துவதற்கு முன் வெள்ளை இனமக்களுடன் சமத்துவம் வேண்டும் என்று போராடி இருக்கிறார். அவர் வழக்கறிஞர் தொழிலைச் செய்வதற்காகத் தென் ஆப்பிரிக்காவுக்குச் சென்ற போது டர்பன் நகரில் இருந்து பிரிட்டோரியாவுக்குத் தொடர் வண்டியில் முதல் வகுப்பில் பயணம் செய்தார். அத்தொடர் வண்டி நோட்டால் தலைநகரமான மாரிட்ஸ்பர்க் சேர்ந்த பொழுது, அந்நிலையத்தில் ஏறிய ஒரு பயணி காந்தி வெள்ளையர் அல்ல என்று தெரிந்து கொண்டு அவர் முதல்வகுப்பில் பயணம் செய்வதை ஆட்சேபித்து, அப்பெட்டியில் இருந்து இறங்கி வேறு பெட்டியில் ஏறும்படி கூறி இருக்கிறார். காந்தியாரே அதை மறுத்துத் தன்னிடம் முதல் வகுப்புப் பயணச்சீட்டு உள்ளது என்று கூற, சர்ச்சை வலுத்து, காவல்துறையினர் காந்தியாரை வலுக்கட்டாயமாகக் கீழே இறக்கி, அவருடைய பெட்டி படுக்கைகளை நடைமேடையில் வீசி எறிந்துவிட்டனர். இந்த அவமானத்தைப் பொறுக்க முடியாத காந்தியார் வெள்ளையர்களுக்கும் இந்தியர்களுக்கும் இடையிலான நிறவெறி ஒடுக்குமுறையை வேருடன் ஒழிக்கப் போராடவேண்டும் என்று மனதில் உறுதிபூண்டார். தென் ஆப்பிரிக்காவில் அத்தகைய போராட்டங்களை முன்னெடுக்கவும் செய்தார்.

(இங்கு ஒருசெய்தி நெருடுகிறது. தொடர்வண்டிகளில் இந்தியர்கள் முதல் வகுப்பில் பயணம் செய்ய அனுமதி இல்லை என்றால், பல ஆண்டுகளாக அங்கேயே வாழ்ந்து கொண்டு இருந்த இந்தியரான அவருடைய கட்சிக்காரர் அவருக்கு எப்படி முதல் வகுப்புப் பயணச் சீட்டை வாங்கிக் கொடுத்தார்? அந்நாட்டில் இந்தியர்கள் முதல் வகுப்பில் பயணம் செய்யமுடியாது என்ற விதிமுறை இருந்தால் அப்படி முதல் வகுப்புப் பயணச்சீட்டை வாங்கிக் கொடுத்து இருக்க முடியாதே? இது ஒருபுறம் இருக்கட்டும்.)

தன்னை நிறவெறி காரணமாக முதல் வகுப்புப் பெட்டியில் இருந்து வெளியேற்றிய அவமானத்தைத் தாங்க முடியாத காந்தியார், அந்தத் தனிப்பட்ட மனிதர்கள் திருந்தினாலே அல்லது அந்தத் தனிப்பட்ட மனிதர்களை மாற்றினாலே போதும் என்று நினைக்காமல், நிறவெறி உணர்வை வேரோடு அழிக்க வேண்டும் என்று நினைத்தார். ஆனால் மற்ற விஷயங்களில் அப்படி நினைக்கவில்லை. தொடர்வண்டி நிகழ்வு நடந்த சில காலங்களுக்குப் பிறகு அவர் நேட்டாலில் குடியேறினார்.அங்கு பாலசுந்தரம் என்ற தமிழர் ஒருவர் அவரைக் காணவந்தார். பாலசுந்தரத்தை அவருடைய வெள்ளைக்கார எஜமானர் கடுமையாக அடித்ததில் அவருடைய முன்னம் பற்கள் இரண்டும் பெயர்ந்து விழுந்துவிட்டன. இவ்வாறு கடுமையான சித்திரவதையும் அவமானமும் பட்ட பாலசுந்தரத்திற்கு நீதிமன்றத்தின் மூலம் காந்தியார் "நியாயம்" வாங்கித்தந்தார். அது என்ன தெரியுமா? பாலசுந்தரம் வேறு வெள்ளைக்கார எஜமானரிடம் வேலைக்குப் போக அந்தப் பழைய எஜமானர் ஒப்புக்கொள்ள வேண்டும்.

**நிறவெறி காரணமாகத் தன்னை முதல் வகுப்புப் பெட்டியில் இருந்து வெளியேற்றியபோது அதற்கு மூல காரணமான நிறவெறி உணர்வை வேரோடு அழிக்க வேண்டும் என்று நினைத்த காந்தியார், பாலசுந்தரத்தின் பிரச்சினைக்கு மூலகாரணமான கூலி உழைப்பு முறையை வேரோடு ஒழிக்கவேண்டும் என்று உறுதி பூணவில்லை. உறுதி பூணுவது இருக்கட்டும்; நினைக்கக்கூட இல்லை. அவர் தான் சார்ந்த கழகத்தின் நலனைப் பற்றியும், உரிமைகளைப் பற்றியும்தான் சிந்தித்தாரே ஒழிய ஒட்டு மொத்த உழைக்கும் மக்களின் நலன்களைப் பற்றியும் உரிமைகளைப் பற்றியும் சிந்திக்கவே இல்லை.**

# வள்ளுவ ஞானம்

- பாவலர் வையவன்

அந்தந்தக் காலம் தோறும்
அவரவர் மண்ணிற் கென்று

வந்திங்கு உதித்த நல்ல
வான்புகழ் அறிஞர் தம்முள்

செந்தமிழ் நிலத்தில் தோன்றி
செழுந்தமிழ்க் குறளைச் செய்ய

வந்தநம் வள்ளுவற் கீடு
வையத்தில் எவரு முண்டோ?
பாழ்செயும் மதங்க ளுக்காய்
பலர்பல செய்தார்; துன்பம்

சூழ்கிற நிலையைக் காட்டி
சூழ்ச்சிநூல் பலவும் செய்தார்;

ஊழ்வினை வந்த போதும்
உரமுடன் வாழச் சொல்லும்

வாழ்வியல் நூலை நன்றாய்
வகுத்தவன் வள்ளு வன்தான்!
பாழ்பல வந்தும் இன்னும்
பயின்றிடும் தமிழ்தா னென்றால்

வீழ்ந்திடா மேன்மை கண்டு
வியக்குமிவ் வைய மென்றால்

ஆழ்ந்துநாம் கற்கக் கற்க
அளவிலா தறிவோ மென்றால்

வாழ்ந்தநம் வள்ளு வன்தான்
வகுத்தமுப் பாலால் அன்றோ!
புறம்பல காட்டி நம்மின்
புத்தியை மழுங்கச் செய்து

முறம்முறம் கொட்டி வேளை
மூன்றுக்கும் முழுங்கச் செய்து

இறம்பொறம் இன்றி வாழும்
இல்லற மாந்தர் மீள

அறம்பொருள் இன்பந் தன்னை
அழகுற அவன்தான் சொன்னான்!
அவரவர் அவனை ஆய்ந்து
அவரவர் மதத்தா னென்று

துவர்பட உரைகள் செய்து
துணிந்துநூல் எழுது கின்றார்!

எவரெதை எழுதி னாலும்
என்னதான் உரைசெய் தாலும்

தவறிலா தஞ்சைப் பொம்மை
தனித்தநம் வள்ளு வன்தான்!
எழுதிடும் கோலை கையில்
எடுத்துதான் பிடித்த வாறு

பழுதுடை எழுத்தா ளர்கள்
படங்களைப் போட்டுக் கொண்டு

விழுதெனெ நூல்பல செய்து
விளம்பரம் தேடிக் கொள்வார்!

பழுதிலா ஒரேநூ லிஃதைப்
பாரினுக் கவன்செய் தானே!
பெயருக்கு முன்னே பெற்ற
விருதுகள் எதுவும் இல்லை

பெயருக்கு முனைவர் பட்டம்
பேசித்தான் முடிக்க வில்லை

பெயருக்கே பெருமை யென்றால்
பெரும்பெயர் வள்ளு வன்தான்!
வள்ளுவன் வாழும் மாந்த
வகைக்குநல் எடுத்துக் காட்டு!

வள்ளுவன் மண்ணில் வாழும்
வாழ்க்கையின் பொதுமைத் தேற்றம்!

வள்ளுவன் உலகிற் கெல்லாம்
வழிசொலும் ஆட்சி ஆசான்!

வள்ளுவன் வான்மண் வாழ்த்தி
வணங்கிடச் சுடரும் ஞானம்!

# என் துணைவி நங்கையை இழந்தேன்!

56 வயதில் என் மனைவிக்குப் புற்றுநோய் இருப்பதைப் பரிசோதித்து அறிந்து கொண்டோம். இது பற்றி நான் அய்யா ஆனைமுத்து அவர்களிடம் தெரிவித்தேன். அப்போது நான் ஒசூரில் இருந்தேன். அய்யா அவர்கள் உடனடியாக சென்னைக்கு அழைத்து வரும் படிச் சொன்னார். என் மகன் ஸ்டாலினும், அய்யாவும் என் மனைவியை சென்னை ராசீவ் காந்தி அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள்.

மருத்துவமனையில் திரு. அ. மதிவாணன், அவரின் துணைவியார் இராணி அவர்களின் பேருதவியால் என் மனைவிக்கு உடனடியாக அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. என் மனைவிக்கு நாக்கில் புற்றுநோய், நாக்கை நீளவாக்கில் பாதியாக வெட்டி விட்டார்கள். கதிர்வீச்சு சிகிச்சை கொடுப்பதற்காக மேலும் கீழும் இரண்டிரண்டு கடைவாய்ப் பற்களைப் பிடுங்கிவிட்டார்கள். அதனால் அவரால் உணவு உட்கொள்ள முடியாமல் நீர் வடிவில் தான் எதையும் குடித்து வந்தார்.

மாதம் ஒருமுறை நான் ஓசூருக்குச் சென்று என் மனைவியை அழைத்து வந்து பரிசோதித்துக் கொண்டு செல்வேன். ஒன்றரை ஆண்டுகளாக உணவே உட்கொள்ள முடியாத நிலையில் உடல் இளைத்து நடக்கச் சிரமப்பட்டார். இந்த நிலையில் நான்கு மாதங்களுக்கு முன், நான் அவரை சென்னையில் என்னோடு அறக்கட்டளையில் தங்க வைத்துக் கொண்டேன்.

2018 நவம்பர் மாதம் 15ஆம் தேதி வாக்கில் வாய் வழியாக எதையும் சாப்பிட முடியாமல் போனது. நான் பயந்து போய் என் மகனை வரவழைத்து இருவரும் அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அப்போது அவர்கள் உடம்பில் தெம்பில்லை. வைத்தியம் பின்னால் பார்த்துக் கொள்ளலாம்; உடம்பைத் தேற்றுங்கள் என்று மூக்கில் டியூப் மாட்டிவிட்டார்கள்.

இதன் பின் E.N.T. டெஸ்ட் மற்றும் M.R.I. ஸ்கேன் எடுக்கச் சொன்னார்கள். இந்த இரண்டு பரிசோதனைகளையும் எடுத்து முடிப்பதற்குள், வாந்தி எடுப்பது அதிகமாகி, 2.12.2018 ஞாயிறு காலை 9 மணியளவில் என் மனைவியின் உயிர் பிரிந்துவிட்டது.

என் மனைவியை மருத்துவமனையில் சேர்த்தது முதல் அவள் இறுதிப் பயணம் தொடங்கும்வரை, எதையும் பொருட்படுத்தாமல் இரண்டு முறை மருத்துவமனைக்கு வந்தும், அதன்பின் தொடர்ந்து ஒரு நாளைக்கு காலையிலும் மாலையிலும் இரண்டு முறை தவறாமல் அவள் உடல்நலன் பற்றி விசாரித்துத் தக்க ஆலோசனை வழங்கி, எனக்கும் என் மகனுக்கும் தைரியமூட்டி என்னை வழிநடத்திய அய்யா ஆனைமுத்து அவர்களுக்கு என் குடும்பத்தின் சார்பாக என் மனங்கசிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



மேலும் மருத்துவமனையிலும், அறக்கட்டளையிலும் வந்திருந்து என் மனைவியின் நலனில் அக்கறை செலுத்திய திரு. மதிவாணன்-இராணி அவர்களுக்கும், மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்த மருத்துவர்கள், செவிலியர்கள், உதவியாளர்கள் அனைவருக்கும் நான் எதிர்பாராத ஒரு நெருக்கடியான நேரத்தில், அய்யாவைப் பார்க்க வந்த மருத்துவர் டாக்டர், மகுடமுடி அவர்கள் தன் சொந்தச் செலவில் என் மனைவிக்கு மருத்துவம் பார்த்தார், அவருக்கும் அவர் மகனுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

இரண்டாவது முறையாக அறுவை சிகிச்சை செய்த போது, அவருக்காக குருதிக் கொடை கொடுத்த தோழர்கள் ஆ. முத்தமிழ்ச்செல்வன், முருகவேல் மற்றும் பகுத்தறிவாளன் ஆகியோருக்கும்;

மருத்துவமனைக்கு நேரில் வந்து தக்க ஆலோசனை வழங்கி உதவிகள் செய்த அறக்கட்டளைச் செயலாளர் கலையரசு அவர்களுக்கும் அவர் மூலமாக மறைமுகமாக உதவி செய்த திரு. இராமலிங்கம், I.P.S. (ஓய்வு) மற்றும் மலேசியா அ.கிருட்டிணசாமி அவர்களுக்கும்;

நான் அறக்கட்டளையில் சேர்ந்தது முதல் இன்று வரை எனக்குப் பேராதரவு அளித்துவரும் பொறியாளர் இரா.சிவப்பிரகாசம் அவர் மனைவி செந்தமிழ்க் கொற்றி, மகள் வெற்றிச்செல்வி, அவரின் குடும்பத்தார், சாமி. அறவணன் மற்றும் அ. பெரியசாமி - நாகம்மை ஆகியோருக்கும்;

தன் உடல் நலிவுற்ற நிலையிலும் மருத்துவமனைக்கு வந்து என் மனைவிக்கும் எனக்கும் தைரியமூட்டி, உதவி செய்த கட்சியின் மூத்த தோழர் க.முகிலன், அவர்களுக்கும், தான் வரமுடியாவிட்டாலும் வீட்டிலிருந்தே என் மனைவியின் உடல் நலன் பற்றி விசாரித்து எனக்கு ஆறுதல் அளித்த கவிஞர் தமிழேந்தி மற்றும் சி.நடராசன், மு.செயப்பிரகாசு ஆகியோருக்கும்; என் தம்பி மனைவி மே.மலர் விழி, தங்கைகள் நிலவு,

குமுதம், தமிழரசி, நிலவு மகள் பி.மலர்விழி, பிரபு, சீனிவாசன், சின்னதுரை-பார்வதி ஆகியோருக்கும் நன்றி.

அடிக்கடி மருத்துவமனைக்கு வந்து பார்த்துக் கொண்ட இரா.பச்சமலை ப. வடிவேல், வாலாசா வல்லவன், கலசம் அவர்களுக்கும், ஆனை. பன்னீர்செல்வம், தாம்பரம் சுப்பிரமணி ஆகியோருக்கும்;

மா.பெ.பொ.க. கட்சியின் முதல் தலைமுறைத் தோழர்கள் திரு. கோ. குழந்தைவேலன் - து. தில்லை வனம் ஆகியோர் வாரிசுகளான நானும், தோழர் துரை சித்தார்த்தனும், அவர்களை விடப் பன்மடங்கு அதிகமாக என்மீது அக்கறை செலுத்தும் சித்தார்த்தன் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றி.

இறுதியாக, இறப்பதற்கு சில தினங்களுக்கு முன் என் மனைவி அவரின் மகள் கலையரசி ரமேசு, பேரன்கள் ரவி வர்மன், காவிய வர்மன் ஆகியோரை வரவழைத்துத் தன்னால் இயன்றதைச் செய்து மனம் மகிழ்ந்தார்.

இறப்பதற்கு இரண்டு நாள்களுக்குமுன், தன் மகனை வரவழைத்து இருபது இலட்சம் பெறுமான வீட்டின் பத்திரத்தைக் கொடுத்து வாழ்த்தி மனம் மகிழ்ந்தார்.

2.12.2018 ஞாயிறன்று இறந்த பின், உடனடியாக நம் கட்சித் தோழர்கள் அய்யா ஆனைமுத்து, அ. மதிவாணன், இராணி, துரை. கலையரசு, க. முகிலன், வாலாசா வல்லவன், ப. வடிவேல், நூலகர் மதிய ழகன், அ. பெரியசாமி, சி. பெரியசாமி, தாம்பரம் மா. சுப்பிரமணி, கு.கிருஷ்ணமூர்த்தி, சென்டிரிங் கோவிந்தன், ஆ. முத்தமிழ்ச்செல்வன், முருகவேல், த. புகழேந்தி, ஆனை. பன்னீர்செல்வம், தோழர் இரா. பச்சமலை, பொறியாளர் இரா. சிவப்பிரகாசம்-கொற்றி, அரியலூர் சேகர் அவர் மனைவி மற்றும் அம்பத்தூர் இளநீர் கடை இராசேந்திரன் குடும்பத்தார், நண்பர் செந்தில் குமார், என் தங்கை தேன்மொழி - சண்முகம் அவரின் பிள்ளைகள், அன்பு மகன் தென்றல், மாமா முருகேசன், இறுதி நிகழ்வை நல்ல முறையாக நடத்திக் கொடுத்த என் மைத்துனர் தமிழரசன், தம்பி மேழிச்செல்வன் குடும்பத்தார், என் ஊர் நாட்டாண்மை ச. கருணாநிதி, ஊர்ப் பொது மக்கள் ஆகியோர் இறுதி அஞ்சலி செலுத்தி னார்கள்; அனைவருக்கும் நன்றி.

மிக மிக அமைதியாகவும், பெருமையாகவும் ஆன் றோர்களும் சான்றோர்களும் அறிஞர் பெரு மக்களும் புடைசூழ என் மனைவியின் இறுதிப் பயணத்தை அனுப்பி வைத்தார்கள். இவர்கள் அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**7.12.2018** **- கு. தொல்காப்பியன்**

## வாலி, வனத்தில் வாழ்ந்தவன், தீண்டப்படாதவர்களையும், பிற்படுத்தப்பட்டவரையும் ஒன்றுதிரட்ட முயன்றவன். அவனைத்தான் இராமன் கொன்றான்!

இராசஸ்தானில், 7-12-2018இல் நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தலில், பாரதிய சனதாக் கட்சியின் வெற்றிக் காகப் பரப்புரை செய்தார் - உத்தரப்பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத். அவர் ஆள்வார் மாவட்டத்தில் மலக் கெடாவில் பேசும் போது, இராமாயண வாலி பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டார் :

“வனத்தில் வாழ்ந்த வாலி, ஒரு தீண்டப்படாதவன்; அவன் இந்தியாவில், தெற்கிலிருந்து வடக்கு வரை, மேற்கிலிருந்து கிழக்கு வரை வாழ்ந்த அனைத்து வகுப்பு களையும் ஒன்றுதிரட்ட முயன்றான்” என்று குறிப்பிட்டார்.


உத்திரப்பிரதேச பாரை தொகுதியைச் சார்ந்த பாரதிய சனதாக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர், சாவித்திரி பாய் புலே, 4-12-2018 செவ்வாய் அன்று பேசும் போது, “அனுமான் தீண்டப்படாதவன்; அவன் மனுவை ஏற்றுக் கொண்டவன்; அவன் இராமருக்காக எல்லாம் செய்தான், ஆனால் குரங்கு என்றும், இராட்சசன் என்றும் அவன் அழைக் கப்பட்டான்; அப்போதும் இழிவாக நடத்தப்பட்டான்; இப்போதும் தீண்டப்படாதாராகிய நாம் இழிவாக நடத்தப் படுகிறோம்” என்றார்.

வன அரசனான வாலியை, இராமன் கொன்றான்.

(சாவித்ரி பாய் புலே, 6-12-18 அன்று, பா.ச.க. விலிருந்து விலகினார்.)

செய்தி : “The Hindu”, 5-12-2018

## தமிழறிஞர் ம. நன்னன் மருமகன் கோவிந்தன் மறைந்தார்



யூனியன் வங்கியின் முன்னாள் மூத்த மேலாளரும், பேராசிரியர் மறைந்த ம.நன்னன் மருமகனு மாகிய கோவிந்தன் அவர்கள் 7.10.2018 அன்று மறைந்தார் என்பதை அறிந்து வருந்துகிறோம்.


அவர் “சிந்தனையாளன்” இதழின் ஆதரவாளராக விளங்கினார்.

2018 செப்டம்பரில் தோழர் வே. ஆனைமுத்துவுடன் கைப் பேசியில் உரையாடினார். உடல்நலம் பற்றி உசாவினார்.

அன்னாரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத் தாருக்கும், ம.நன்னன் குடும்பத்தாருக்கும் மா.பெ.பொ.க. சார்பில் ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்குகிறோம்.

**வாழ்க கோவிந்தன் புகழ்!**

**- வே. ஆனைமுத்து**



# "நெல்" செயராமன் மறைவு

## இயற்கை வேளாண் இயக்கத்துக்குப் பேரிழப்பு

"நெல்" செயராமன் தன் 54ஆம் அகவையில் 6-12-18 அன்று மறைந்தார். திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அருகில் கட்டிமேடு என்கிற சிற்றூரில் பிறந்த - ஒன்பதாம் வகுப்பு வரை மட்டுமே படித்த - ஒரு சிறு உழவரான செயராமன் மறைவுக்கு அரசியல் கட்சிகளின் தலைவர்கள், பல்வேறு இயக்கங்களின் தலைவர்கள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர் என்பது எழுச்சி பெற்றுவரும் தமிழகத்தின் ஒரு புதிய காட்சியாகும். உண்மையான எளிய மக்கள் தொண்டனைத் தமிழகம் மதித்துப் போற்றியிருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

செயராமன் தன் தந்தையின் வேளாண்ப் பணிகளுக்கு உதவியாக இருந்து கொண்டே திருத்துறைப்பூண்டியில் ஓர் அச்சகத்தில் பணியாற்றினார். தொடக்கத்தில் நுகர்வோர் பாதுகாப்பு உரிமைகளை நிலைநாட்டும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தார். பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் நுகர்வோர் நீதிமன்றங்களில் 500க்கும் மேற்பட்ட வழக்குகளைத் தொடுத்துள்ளார். நம்மாழ்வாரால் ஈர்க்கப்பட்டு இயற்கை வேளாண்மை இயக்கத்தில் முனைப்புடன் செயல்பட்டார்.

நஞ்சில்லா உணவு முழக்கத்தை முன்வைத்து நம்மாழ்வார் 2003ஆம் ஆண்டு கல்லணையிலிருந்து பூம்புகாருக்கு ஒரு மாத கால நடைப்பயணப் பரப்புரை செய்த போது, செயராமனும் நம்மாழ்வாருடன் சென்றார். அப்பயணத்தின் போது வடுகூர் இராமகிருட்டிணன் என்கிற உழவர், காட்டுயானம் உள்ளிட்ட ஏழு மரபு வழி நெல் விதைகளை நம்மாழ்வாரிடம் அளித்தார். அந்த நெல் விதைகளை மறு உற்பத்தி செய்து உழவர்களிடம் பயிரிடக் கொடுக்குமாறு செயராமனை நம்மாழ்வார் கேட்டுக் கொண்டார். அவ்வாறே அந்த மரபு வழி விதைகளை செயராமன் தன் நிலத்தில் மறு உற்பத்தி செய்தார்.

திருத்துறைப்பூண்டியை அடுத்துள்ள ஆதிரெங்கம் எனும் சிற்றூரில் "நமது நெல்லைக் காப்போம்" இயக்கத்தின் பெயரால் 2006ஆம் ஆண்டு நெல் திருவிழாவை நடத்தினார். தான் மறுஉற்பத்தி செய்த ஏழு மரபு வழி நெல் விதைகளை உழவர்களுக்கு இரண்டு கிலோ மேனி கொடுத்தார். அதைப் பயிரிட்டு அடுத்த ஆண்டு நெல் திருவிழாவுக்கு வரும்போது ஒவ்வொரு உழவரும் நான்கு கிலோ வகை நெல்லைத் திருப்பித்தர வேண்டும். இந்த நெல் மீண்டும் இரண்டு கிலோ மேனிக்கு மற்ற உழவர்களுக்குத் தரப்படும். நெல் திருவிழாவில் முதலாண்டில் 150 உழவர்கள் கலந்து கொண்டனர். அதன்பின் தமிழகத்தின் பல மாவட்டங்களிலிருந்தும், ஒரிசா, ஆந்திரா, மேற்குவங்கம் முதலான பிற மாநிலங்களிலிருந்தும் உழவர்கள் இந்த நெல் திருவிழாவில் பங்கேற்று மரபுவழி நெல் பற்றிய தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கின்றனர். அழிந்துவரும் மரபு நெல் விதைகளை மீட்டெடுக்கும் சீரிய பணியில் செயராமன் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.


2006ஆம் ஆண்டு நடந்த நெல் திருவிழாவில் நம்மாழ்வார் நெல் செயராமன் என்று முதன்முதலாக அழைத்தார். மரபுவழி நெல் விதைகளைத் திரட்டுவதற்காகச் செயராமன் தமிழகம் முழுவதும் ஊர் ஊராகத் தேடி அலைந்தார். காட்டுயானம், கருடன் சம்பா, மாப்பிள்ளை சம்மா, ஒட்டையான், தேங்காய்ப்பூ, கிச்சடி சம்பா, கருப்புக் கவுனி, சிவப்புக் கவுனி, மடு முழுங்கி, அன்னமழகி உள்ளிட்ட 174 வகையான மரபு வழி நெல் விதைகளை உழவர்களிடமிருந்து திரட்டினார். அவற்றைத் தானே பயிரிட்டு நேரடியான அனுபவங்களைப் பெற்றார். நாற்பதாயிரத்துக்கு மேற்பட்ட உழவர்களுக்கு இந்த விதைகளை வழங்கி, இவை அழிந்து போகாமல் தொடர்ந்து பயிரிடப்படுகின்ற ஒப்பரிய பணியைத் தன் வாழ்நாள் குறிக்கோளாகக் கொண்டு ஓயாது உழைத்தார். வேளாண் பல்கலைக்கழகங்களில் ஆய்வுக் கூடங்களில் முடங்கிக் கிடக்கும் மரபுவழி விதை நெல் வகைகள் உழவர்களின் வயல்களில் உயிர்ப்பெறச் செய்த நெல் செயராமன் 54 அகவையிலேயே புற்றுநோயால் இறக்க நேரிட்டது இயற்கை வேளாண்மைக்குப் பேரிழப்பாகும்.

விதை, பூச்சி மருந்து, இரசாயன உரங்கள் என அனைத்தும் பன்னாட்டுப் பெருமுதலாளிகளின் ஆதிக்கத்தில் இருக்கின்றன. இவற்றால் மரபுவழி விதைகள் மறைந்துவிட்டன; நிலம் வளம் குன்றி மடலாகி வருகிறது. நீரும் காற்றும் மாசடைந்து வருகின்றன. மனிதர்களின் உடல்நலத்துக்கும் பல கேடுகள் உண்டாகின்றன. கார்ப்பரேட்களிடமிருந்து வேளாண்மையை விடுவித்து இயற்கை வேளாண்மையை முன்னெடுப்பதே நெல் செயராமன் நினைவைப் போற்றுவதாகும்.

# பட்டேல் சிலையும் இந்துத்துவ அரசியலும்

- க. முகிலன்

“எங்கும் நிறைந்திருப்பர், எல்லாம் வல்லவர், எல்லாம் அறிந்தவர்” என்று சொல்லப்படும் கடவுளுக்கு உருவம் இல்லை என்று உலகின் முதல் இரண்டு பெரிய மதங்களாக இருக்கும் கிறித்துவமும், இசுலாமும் கூறுகின்றன. இவை கடவுள் ஒருவரே என்ற கோட்பாடு கொண்டவை. ஆனால் இந்து மதம் எனப்படும் கலவை மதத்திலோ எண்ணற்ற கடவுள்கள்; ஒவ்வொரு கடவுளுக்கும் பற்பல உருவங்கள் என்ற நிலை இருக்கிறது. உருவ வழிபாடே இந்து மதத்தின் உயிரான கூறாக இருந்து வருகிறது.



2500 ஆண்டுகளுக்கு முன்பு கிரேக்க நாட்டில் பல தெய்வங்களும் அவற்றுக்கான சிலைகளும் இருந்தன. கிரேக்கர்களின் சிலை வடிவை யொட்டியே முதன் முதலில் புத்தருக்குச் சிலைகள் வடிக்கப்பட்டன. அதன் பிறகுதான்-1500 ஆண்டுகளுக்கு முன்புதான் இந்துக் கடவுள்களுக்குச் சிலைகளும் பெரிய கோயில்களும் உருவாக்கப்பட்டன. கல்லில் கடவுள் இருக்கிறார் என்கிற மூடநம்பிக்கை வலுப்பெற்றது. சிலை வழிபாடு என்பது இந்து மதத்தின் முதன்மையான அடையாளமாகிவிட்டது. **சிலை வணக்க மறுப்பாளராக வாழ்ந்த அம்பேத்கருக்கும், கடவுள் சிலையை உடைத்த பெரியாருக்கும்கூட சிலை வைக்கும் அளவுக்குச் சிலை என்பது இந்திய சமூகத்தின் உள்ளார்ந்த அடையாளமாகிவிட்டது.**

இந்தப் பின்னனியில் குசராத்தில் நருமதை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள சர்தார் சரோவர் அணைக்கு அருகில் சர்தா வல்லபாய் பட்டேலுக்கு உலகிலேயே உயரமான சிலையைப் (182 மீட்டர் உயரம்) பிரதமர் நரேந்திர மோடி, பட்டேலின் 143ஆவது பிறந்த நாளான அக்டோபர் 31 அன்று திறந்து வைத்தார். 2014இல் நாடாளுமன்றத் தேர்தலுக்குமுன் பட்டேலுக்கு மாபெரும் சிலை அமைக்கப்படும் என்று மோடி கூறினார். கடந்த நவம்பர் மாதம் இந்துத்துவத்தின் இதயப் பகுதியாகக் கருதப்படும் மத்தியப்பிரதேசம், சத்தீஸ்கர், இராஜஸ்தான் ஆகிய இந்தி மொழி பேசும் மாநிலங்களுக்கும் மற்றும் தெலுங்கானா மிசோரம் ஆகிய மாநிலங்களுக்கும் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் பரப்புரைக்குப் பட்டேல் சிலை திறப்பதைத் திட்டமிட்டுப் பயன்படுத்திக் கொண்டார், நரேந்திர மோடி.

பட்டேல் சிலைத் திறப்பு விழாவில் பேசிய குசராத் மாநில முதலமைச்சர் விஜய் ரூபானி, “சுதந்தரத் திற்குப்பின் 562 சிற்றரசுகளைப் பட்டேல் இந்தியாவுடன் இணைத்து ஒன்றுபட்ட இந்தியாவை உருவாக்கியது போல், பிரதமர் நரேந்திர மோடி இந்திய நாட்டின் ஒற்றுமைக்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்” என்று கூறினார். 2018 நவம்பர் மாதம் முழுவதும் இந்தியாவில் அனைத்து மொழிகளிலும் ஒளிபரப்பாகும் தொலைக் காட்சிகளில், பட்டேல் சிலையும், சிலைத் திறப்பு விழாவில் மோடியின் பேச்சும் நடுவண் அரசின் விளம்பரமாக அடிக்கடி காட்டப்பட்டுக் கொண்டிருந்தன.

உலகில் உள்ள உயரமான சிலைகள் :

| | | |
|---|---|---|
| 1. | குசராத்தில் பட்டேல் சிலை | 182 மீட்டர் |
| 2. | சீனாவில் ஸ்பிரிங் கோயில் புத்தர் சிலை | 153 மீட்டர் |
| 3. | மியான்மரில் லேகுன் செக்கியா புத்தர் சிலை | 116 மீட்டர் |
| 4. | சப்பானில் உஷ்கு டேபட்சூ புத்தர் சிலை | 110 மீட்டர் |
| 5. | அமெரிக்காவில் சுதந்தரதேவி சிலை | 97 மீட்டர் |
| 6. | தாய்லாந்து தி கேரட் புத்தர் சிலை | 91 மீட்டர் |
| 7. | இரஷ்யாவில் ‘தாயகம் அழைக்கிறது’ சிலை | 87 மீட்டர் |

**உலகிலேயே உயரமான சிலையை வைப்பதாக இருந்தால், குசராத்தின் மண்ணின் மைந்தரான - தேசத்தந்தை என்று போற்றப்படுகின்ற - உலகம் முழுவதும் மதிக்கப்படுகின்ற காந்தியாருக்கு அல்லவா வைத்திருக்க வேண்டும்; வல்லபாய் பட்டேலுக்கு உலகின் உயரமான சிலை வைத்ததன் நோக்கம் என்ன?**

1948 சனவரி 30 அன்று ஆர்.எஸ்.எஸ். மற்றும் இந்துமகா சபையில் இருந்த நாதுராம் கோட்சே காந்தியாரைச் சுட்டுக் கொன்றதும் உள்துறை அமைச்சராக இருந்த வல்லபாய் பட்டேல் ஆர்.எஸ்.எஸ். அமைப்பைத்

தடை செய்தார். அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள், ஆர்.எஸ்.எஸ். ஒரு கலாச்சார அமைப்பு என்றும், அது அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடாது என்றும் ஆர்.எஸ்.எஸ். தலைவர் அளித்த உறுதிமொழியை ஏற்று, ஆர்.எஸ்.எஸ். மீது விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கினார் பட்டேல். சுதந்தரப் போராட்டக் காலத்தில் காங்கிரசுக் கட்சியில் நேரு மதச்சார்பற்ற - சோசலிசக் கருத்தோட்டம் கொண்டவராக இருந்தார். பட்டேல் வலதுசாரிச் சிந்தனையாளராக இருந்தார். இதன் அடிப் படையில் பட்டேல், ஆர்.எஸ்.எஸ். அமைப்பிடம் மென் மையான இந்துத்துவப் போக்குடன் நடந்து கொண்டார் என்ற கருத்து நிலவுகிறது. காந்தியார் தன் வாழ்நாள் முழுவதும் இந்து-முசுலீம் ஒற்றுமைக்காகப் போராடினார். எனவேதான் நரேந்திர மோடி ஆட்சி காந்தியைத் தவிர்த்துவிட்டு, வல்லபாய் பட்டேலுக்குக் காவி வண்ணம் பூசி உயர்த்திப் பிடிக்கிறது.

மேலும் இன்றைய அரசியல் சூழலில் காங்கிரசுக் கட்சியை எதிர்ப்பதற்காக நேருவைக் குற்றஞ்சாட்டும் போக்கை பா.ச.க நீண்டகாலமாகப் பின்பற்றி வருகிறது. காஷ்மீர் பண்டிட்டான நேரு 1947இல் காஷ்மீர் சிக்கலைத் தன் பொறுப்பில் எடுத்துக் கொள்ளாமல், பட்டேலிடம் ஒப்படைத்திருந்தால் காஷ்மீரை முழுவது மாக இந்தியாவுடன் இணைத்து அச்சிக்கலை முடித்து வைத்திருப்பார் என்று பா.ச.க.வும் மற்ற சங்பரிவாரங் களும் நீண்டகாலமாகக் கூறிவருகின்றன.

24.11.2018 அன்று மத்தியப்பிரதேசத்தில் மண்ட்சவுர் என்ற இடத்தில் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பேசிய நரேந்திர மோடி, "பல தலைமுறைகளாக உழவர்கள் அனுபவித்து வரும் துன்பங்களுக்குக் காரணம் 55 ஆண்டுகள் காங்கிரசுக் கட்சி இந்தியாவை ஆட்சி செய்ததே ஆகும்; நாட்டின் முதலாவது பிரதமராக வல்லபாய் பட்டேல் பொறுப்பேற்றிருந்தால் இன்று உழவர்கள் துன்பப்படும் நிலை ஏற்பட்டிருக்காது. காங்கிரசு ஆட்சிக் காலத்தின் தவறுகளைச் சரிசெய்ய கடந்த நான்கரை ஆண்டுகளாக முயன்று வருகிறேன். ஆனால் இவற்றை முழுமையாகச் சரிசெய்வதற்குக் காங்கிரசு ஆண்ட காலத்தில் பாதி ஆண்டுகளேனும் எனக்குத் தேவை" என்று சொன்னார். நேரு குடும் பத்தின் தலைமையிலான காங்கிரசை எதிர்ப்பதற்குப் பட்டேலை அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்துவதே பா.ச.க.வின் நோக்கம். இதற்காகத்தான் பட்டேலுக்கு உலகின் உயரமான சிலை அமைக்கப்பட்டுள்ளது.

பட்டேல் சிலை திறக்கப்பட்டதற்கு முன்பாக, பட்டேல் சிலையின் மாதிரியைத் தேரில் வைத்து, பர்தோலி யிருந்து 'ஒற்றுமைப் பயணம்' என்கிற பெயரில் பன்னி ரண்டு நாள்கள் குசராத்தில் ஊர்வலம் நடத்தப்பட்டது. 1918இல் பிரித்தானிய ஆட்சி உழவர்கள் மீது அதிக வரி விதித்ததைக் கண்டித்து, உழவர்களைத் திரட்டி வல்லபாய் பட்டேல் போராட்டம் நடத்திய இடம்தான்



*பட்டேல் சிலையைத் திறந்தபின் பட்டேல் அருங்காட்சியகத்தைப் பார்வையிடும் நரேந்திரமோடி*

பர்தோலி. பட்டேல் சிலை ஊர்வலம் குசராத்தில் 26 நாடாளுமன்றத் தொகுதிகளில் 5000க்கு மேற்பட்ட ஊர்கள் வழியாகச் சென்றது. பட்டேல் சிலை தேரோட்டம் 2019 நாடாளுமன்றத் தேர்தலுக்கான முன்னோட்டமே யாகும்.

உழவர்களுக்காகப் போராடிய - இந்தியாவின் இரும்பு மனிதரான பட்டேலுக்குச் சிலை அமைக்க உழவர்கள் தங்களிடம் பயன்படாமல் இருக்கும் இரும் பாலான உழவுக் கருவிகளை வழங்க வேண்டும் என்று பிரதமர் மோடி வேண்டுகோள் விடுத்திருந்தார். அயோத்தியில் இராமனுக்குக் கோயில் கட்ட எல்லா ஊர்களிலிருந்தும் செங்கல் அனுப்புவது என்ற பெயரால் இந்துத்துவ வெறி உணர்ச்சியை தூண்டியது போல், பட்டேல் சிலைக்காக இரும்பை அனுப்புவதன் மூலம் ஒரே தேசம் என்கிற உணர்ச்சியைத் தூண்டுவது என்பது இதன் நோக்கமாகும். இவ்வாறு 135 டன் இரும்பு அனுப்பப்பட்டது.

ஆனால் இந்த இரும்பைக் கொண்டு பட்டேல் சிலை அமைக்கப்படவில்லை. சிலையின் பீடம் அமைக்க மட்டுமே இது பயன்படுத்தப்பட்டது. நரேந்திர மோடி பிரதமரானதும் முன்வைத்த முழக்கம் "இந்தியாவில் தயாரிப்போம்" (Make in India) என்பதாகும். ஆனால் 182 மீட்டர் சிலையை வடிப்பதற்கான தொழில் நுட்பம் இந்தியாவில் இல்லை என்பதால், இச்சிலை சீனாவில் செய்யப்பட்டது.

**பட்டேல் சிலைக்கு 'ஒற்றுமையின் சிலை' (Statue of Unity) என்று மோடியால் பெயரிடப் பட்டது. ஒரே தேசம், ஒரே மொழி, ஒரே கலாச்சாரம் என்கிற இந்துத்துவப் பாசிசக் கோட்பாட்டை மக்கள் மனதில் பதியச் செய்வதற்காக மோடி ஆட்சி மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளில் ஒன்றுதான் ஒற்றுமைச் சிலை என்பதும் ஆகும்.**

‘ஒற்றுமையின் சிலை’ என்பதை எட்டு மொழிகளில் ஒரு பலகையில் பொறித்து பட்டேல் சிலை வளாகத்தில் வைத்தார்கள். ஒற்றுமையின் சிலை என்பதற்குத் தமிழில் “ஸ்டேட்டுக்கே ஒப்பி யூனிட்டி” என்று எழுதப் பட்டிருந்தது. இதற்குக் கடும் கண்டனம் எழுந்ததும், அதை அகற்றிவிட்டனர்.

பட்டேல் சிலையை அமைத்திட ரூ.2,980 கோடி செலவிடப்பட்டுள்ளது என்று இந்திய அரசு சொல்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்தியா முழுவதும் பேரணிகளையும் போராட்டங்களையும் நடத்தி, தம் இன்னல்களை உழவர்கள் வெளிப்படுத்திக் கொண்டி ருக்கும் நிலையில், உழவர்களுக்காகப் போராடிய பட்டேலுக்கு மூவாயிரம் கோடியில் சிலை வைப்பது, ரோமாபுரி தீப்பற்றி எரிந்துகொண்டிருந்த போது நீரோ மன்னன் ‘பிடில்’ வாசித்துக் கொண்டிருந்தான் என் பதைப் போன்றதல்லவா?

பட்டேல் சிலையை அமைப்பதற்கான நிதி பொதுத் துறை நிறுவனங்கள் மக்களின் கல்வி, மருத்துவம், குடிநீர் முதலான சமூக மேம்பாட்டுக்கு என்று ஒதுக் கப்படும் நிதியிலிருந்தே தரப்பட்டுள்ளது. அதன் விவரம் :

| | |
|---|---|
| இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் | ரூ.900 கோடி |
| ஓ.என்.ஜி.சி. (ONGC) | ரூ.500 கோடி |
| பாரத் டெரோலியம் | ரூ.250 கோடி |
| கேஸ் ஆதாரிட்டி ஆஃப் இந்தியா | ரூ.250 கோடி |
| பவர்கிரிட் | ரூ.125 கோடி |
| குசராத் மினரல் டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் | ரூ.100 கோடி |

இதுதவிர, நடுவண் அரசு 2014-15 நிதிநிலை அறிக்கையில் ரூ.309 கோடியில் சமூக மேம்பாட்டுக்கு ஒதுக்கும் நிதியிலிருந்து ரூ.146 கோடியும் பட்டேல் சிலைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. பெட்ரோல்-டீசல் விலை உயர்வால் உழவர்களும் பொது மக்களும் பெருந்துன்பத் திற்குள்ளாகியிருந்த போது, இவற்றின் விலையைக் குறைக்காமல் பெட்ரோலியப் பொதுத்துறை நிறுவனங்கள் பட்டேல் சிலைக்குக் பல கோடிக்கணக்கில் நிதி கொடுத்துக் கொண்டிருந்தன.

நருமதையை ஒட்டி வாழும் பழங்குடியினரின் பல ஊர்களை அழித்து, அவர்களின் நிலங்களைப் பறித்து பட்டேல் சிலை அமைக்கப்பட்டுள்ளது. பன்னாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வந்து தங்கும் அளவுக்கு ஆடம் பரமான விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தியாவின் முதன்மையான சுற்றுலா இடமாக மாற்றப்பட்டு வருகிறது.

பட்டேல் சிலை என்பது கார்ப்பரேட் இந்துத்துவ ஆதிக்கத்தின் சின்னம். மதச்சார்பற்ற - சனநாயக அமைப்புகளும் கட்சிகளும்-கார்ப்பரேட் இந்துத்துவப் பாசிசத்தின் இத்தகைய போக்குகளை எதிர்த்து முறி யடிக்க வேண்டும்.

## பெயர் பெற்ற புரட்சிகர எழுத்தாளர் புதுவை பிரபஞ்சன் மறைந்தார்!



புதுவை பாரதிதாசனைப் பெற் றெடுத்த மண்; அவருடைய பாடலைப் பாராட்டிய பாரதியாரைப் பாதுகாத்த மண்.

அந்தப் புதுவையில் பிறந்தவர் பெயர் பெற்ற புரட்சிகர எழுத்தாளர் பிரபஞ்சன் அவர்கள்.

அவர் சில மாதங்களாக உடல் நலமின்றி இருந்தார்; தனியார் மருத்துவமனையில் மருத்துவம் பெற்றுக் கொண்டிருந்த போது, மருத்துவம் பயன்படாமல், கடந்த 21.12.2018 வெள்ளி அன்று தம் 73ஆம் அகவையில் மறைவுற்றார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அவர் தமிழகம் நன்கு அறிந்த எழுத்தாளர் ஆவார். அவர் பல பத்தாண்டுகளாகத் தமிழக ஏடுகளில் புரட்சிகரச் சிந்தனை யூட்டும் கட்டுரைகளையும், புதினக் கதைகளையும் எழுதி வந்தார். அவருக்கு சாகித்ய அகாடமி விருது கிடைத்தது. அவருடைய எழுத்தைத் தமிழக இளந்தலைமுறையினர் விரும்பிப் படித்தனர்.

சாவுக்குப் பின்னர் புதுவையிலுள்ள காங்கிரசு அரசு பிரபஞ்சன் அவர்களுக்கு முழு மரியாதை செலுத்தினர்; 21 குண்டுகள் முழங்க 23.12.2018 ஞாயிறு மலை 4.30 மணிக்கு, அவரது உடல் எரியூட்டப்பட்டது. தமிழகத்தின் எழுத்தாளர்கள் - புதுவை எழுத்தாளர்கள் - 96 அகவை கி. ராஜ நாராயணன் உட்படப் பலர், பிரபஞ்சன் அவர்களுக்கு நேரில் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

**வளர்க புதுவை பிரபஞ்சன் புகழ்!**

**- வே. ஆனைமுத்து**

## இரா.அலமேலு அவர்களின் படத்திறப்பு



கடந்த 04.11.2018 அன்று திருவை யாறு “முத்து மகால்” அரங்கில் புனல் வாயில் ச.இராமலிங்கம் அவர்களின் மனைவியும் வழக்கறிஞர் இரா.வெங்க டேசன் அவர்களின் தாயாருமான மறைந்த திருமதி. இரா.அலமேலு அவர்களின் திருவுருவப் படத்திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்வுக்குப் பேராசிரியர் வெ.முத்துகிருட்டிணன் தலைமையேற்றார். துரை.மணிமொழி வரவேற்புரை யாற்றினார். திராவிடர் கழக தஞ்சை மண்டலத் தலைவர் வெ.செயராமன், அம்மையாரின் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்தார். பழ.இராசேந்திரன், புலவர் குஞ்சித பாதம், குடந்தை இமயவன், தங்க.கலியமூர்த்தி ஆகியோர் நினைவேந்தல் உரை நிகழ்த்தினர். நிகழ்வை குடந்தை சா.பேகன் ஒருங்கிணைத்தார்.

# இருபாலருக்கும் அகவை அளவுகோலின்றி சபரிமலை

## (சமயத்தை வருங்காலத்திற்கெல்லாம் மேலும் வளர்ச்சியடையும் திறனற்றதாக வைத்துக் கொள்ள முடியாது)

பவன் கே.வர்மா

மாதவிலக்கு அகவையிலுள்ள பெண்கள் உள்ளிட்ட அனைவரும் பாலின வேறுபாடின்றி கேரள அய்யப்பன் கோவிலுக்குள் சென்று வழிபடலாம் என்று உச்சநீதிமன்ற அய்ந்து நீதிபதி அமர்வு இவ்வாண்டு செப்டம்பர் 9ஆம் நாளன்று பெரும்பான்மைத் தீர்ப்பு வழங்கியுள்ளது. இந்த அமர்வில் மாறுபட்ட எதிர்க்கருத்துடைய ஒரு பெண் நீதிபதி இருந்தார் என்பது ஒரு வேளை நகை முரணாகலாம்.

தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா, மற்ற நீதிபதிகள் ஏ.எம். கான்வில்கர், ஆர்.எம். நாரிமன், டி.ஒய். சந்திரசூட் ஆகியோர் உடற்கூறு வேறுபாடு கருதி எவ்வகையிலும் விதிவிலக்களிப்பது அனைவருக்கும் சமஉரிமை அளிக்கும் அரசமைப்புச் சட்ட விதி 14-யும் எந்தச் சமயத்திற்கும் தடையற்ற உரிமை வழங்கும் விதி 25யும் மீறுவதாகிவிடும் என ஆணையிட்டுள்ளனர். இவ்விரு விதிகளும் அரசமைப்புச் சட்ட அடிப்படை உரிமைகளுமாகும். இந்த அமர்வில் இருந்த நீதிபதி இந்து மல்கோத்திரா மறுப்புரை தந்துள்ளார். இவ்வழிமுறை தருக்கம் அல்லது பகுத்தறிவற்ற தன்மைத்தாயினும் இதுபோன்ற தேர்வுகளில் நீதிமன்றங்கள் முடிவெடுத்திடலாகாது என்பது என் அடிப்படைக் கருத்தாகும்.

இது ஒரு நிலையில் ஏற்புடைய கருத்துத்தான். சமயம் என்பது கடவுள் பற்றுப் பற்றியதாகும். அது நம்பிக்கையை அடிப்படையைக் கொண்டது. இதைப் பகுத்தறிவு ஆய்வுக்குட்படுத்திட இயலாது. ஒவ்வொரு சமயத்திற்கும் சில வழிமுறைகள் இருக்கும். அவற்றை மறுப்பவர்களால் தருக்கம் அல்லது தேவை கருதும் அடிப்படையில் அவை கேள்விக்குள்ளாக்கப்படும். ஆனால் அதற்கு நம்பிக்கையாளர் பதிலிறுக்க வேண்டியதில்லை. ஆனால் இதுபோன்ற மெய்ப்பாட்டிலிருந்து மூன்று கேள்விகள் எழக்கூடும்.

சமயத்தைப் பின்பற்றும் முறை நியாயமில்லாததாக அல்லது விரும்பும்படியாக விலக்குகின்றதாக அல்லது ஏற்கவியலாத கொடுமையானதாக இருப்பது என்பது எப்படி? இரண்டாவதாக சமயத்தின் அனுமதியைப் பெற்ற வழிமுறை எது? பிறரின் நலன்களைப் புறக்கணி த்துத் தன் நலன் காக்கப்படுவதற்காகச் சிலரால் திட்டமிட்டுப் புகுத்தப்பட்ட வழிமுறை எது? மேலும் மூன்றாவதாக சமய மரபுகள் கட்டாயமாக எவ்வித மாற்றத்திற்குள்ளாகாதவாறு தடுப்பு முலாமிட்டுப் புதைப்படிவமாக்கப்பட்டு, வரும் காலத்திற்கெல்லாம் பின்பற்றத்தக்கதானது எனப் பொருள்படுமா?

கடந்த காலங்களிலும் சட்டம் மரபுகளுக்கு முரண்பட்டுள்ளது. ஆங்கிலேயரின் குடியேற்ற ஆட்சிக்காலத்தில் 1829இல் ஜெனரல் வில்லியம் பென்டின்ங்கால், கணவன் மறைவை அடுத்து அவனுடைய சிதையில் அவன் மனைவியும் சிதையூட்டப்படும் கொடும் பழக்கமான 'சதி' ஒழிக்கப்பட்ட போது இந்தக் காட்டுமிராண்டி நடைமுறை மத அங்கீகாரம் பெற்றுள்ளது என வலியுறுத்திய இந்துக் குழுக்கள் அந்த முடிவைக் கடுமையாக எதிர்த்தனர். இது ஒரு சமூகச் சீர்திருத்தம் என்பதால் இந்த மரபு ஒழிக்கப்பட வேண்டுமென இராசாராம் மோகன்ராய் போராடிய போது அது அவருடைய உயிருக்கே ஊறு விளைவிக்கும் அளவுக்கு அவருடைய இந்துச் சகோதரர்களிடம் கடும் கோபத்தை ஏற்படுத்தியது. இது மக்களுக்கு ஏற்புடையதாக இல்லாததால் இது மக்களிடம் எதிர்க்கும் போராட்டத்தைத் தூண்டும் என பென்டின்ங்கின் முதன்மை ஆலோசகராக இருந்த சார்லசு மெட்கால்ப் அஞ்சினார். இருப்பினும் அச்சட்டம் திருத்தப்படவில்லை.

அருவெறுக்கத்தக்கத் தீண்டாமையை ஒழிப்பதற்கு அரசமைப்புச் சட்டம் விதி 17 இயற்றப்பட்ட போதும் சமயம் சார்ந்த தனிப்பட்ட பழக்கவழக்கங்களில் அரசு தலையிடக்கூடாது என வெறுத்த இந்துக் குழுக்கள் எதிர்த்தன. 'இந்து சட்டம்' வரைவு 1955-56இல் அரசமைப்புச் சட்ட அவையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதும், குறிப்பாக இந்துத் திருமணச் சட்டத்தை எதிர்த்து ஊர்வலமும் போராட்டமும் நடத்தப்பட்டன. அவர்கள் இந்துச் சமயப்படி திருமணம் புனிதமானது என்றும், எனவே அது கலைக்க முடியாதது எனக் கருதினர். பெரும்பாலான இந்துக்கள் இவற்றிற்கு எதிரானவர்களாக இருந்தனர் எனத் தெளிவாகத் தெரிவித்தது. எனினும் நேரு அதனை நிறைவேற்றினார்.

மரபின் ஈர்ப்பும் தவிர்க்கவியலாத புதுமையும் ஒன்றுக்கொன்று முரணனானவை. மாற்ற முடியாத சமய வழக்கைப் புனிதம் பெறச் செய்வதை கைக்கொள்ளும் மரபை உருவாக்குவது எது என்பது ஒரு முக்கியமான வினாவாகும். சபரிமலைத் தலைமைத் தெய்வமான அய்யப்பன் மணமாகாதவர் என நம்பப்படுபவர். கதைகளின்படி கொடியவன் மகிசாகப்புரியைத் தோற்கடித்த பின் அவரை மணந்துகொள்ள அவள்முன் வருகிறாள். ஆனால் பக்தர்களைக் காப்பதுதான் தன் ஒரே கடமை எனச் சொல்லித் துறவறம் பூண்டார். அந்த அறிவிப்பு ஒன்றே அவரைத் துதிக்க விழையும் மாத

விலக்கு அகவை பெண்களைத் தடைசெய்வதற்குப் போதுமான அடிப்படையாகிவிடுமா?

இதில் வியப்ப என்னவென்றால், 1991 வரை மாத விலக்கு அகவைப் பெண்களும் அய்யப்பன் கோவிலுக்குள் செல்ல முடியும்; சென்று வந்தனர். திருவிதாங்கூர் மகாராணி 1940இலும் தற்போதைய கன்னட அமைச்சர் செயமாலா 1986இலும் கோவிலுக்குள் சென்றவர்களுள் நன்கு அறியப்பட்டவர்களாவர். ஆனால் கேரள உயர்நீதிமன்றம், நெடுங்காலம் தொட்டு நடப்பில் உள்ள பழக்கவழக்கத்தின்படி இதுபோன்ற தடைகள் இருந்ததாகச் சொல்லி, அதன் அடிப்படையில் 1991இல் மாதவிடாய் அகவைப் பெண்கள் கோவிலுக்குள் நுழையத் தடை விதித்தது. அப்படியெனில் 1991க்குமுன் நுழைவதற்கான தடைமீறல்கள் எப்படி நிகழ்ந்தன?

இத்தடையின் ஆதரவாளர்களான நம்பிக்கையுடையவர்களின் உணர்வுகளுக்கு ஊறு விளைவிக்கும் எண்ணமின்றி சமநிலை நீதிப்படியான நடுநிலை, நேர்மை அடிப்படையில் கோவில் நுழைவுக்கான தடையை நீக்குவதற்கு ஏதுவாக அமையுமென நான் நம்புகிறேன். அரசமைப்புச் சட்ட விதி 14, சட்டத்தின் முன் அனைவரும் சமம் மற்றும் அனைவருக்கும் சமமான சட்டப் பாதுகாப்பு என அறுதியிட்டுக் கூறியுள்ளதை அரசு எவருக்கும் மறுக்கக்கூடாது. அனைவரும் மனச்சான்றுடனான உரிமை மற்றும் சுதந்தரமாக எச்சமயத்தையும் தழுவவும், பின்பற்றுவதற்கான உரிமையையும் சமமாக எவரும் பெற்றுக்கொள்ள உரிமை உண்டு என்று விதி 25 தெளிவாக வரையறுக்கிறது.


விதிகளுக்கு முரணான நடைமுறைக்கு அல்லது சமய நம்பிக்கைக்கு எதிராக இதுபோன்ற அரசமைப்பு விதிகளைப் பயன்படுத்தும் போது எதிர்ப்பு இருக்கும். அனைத்துச் சமயங்களும் அப்படித்தான். அண்மையில் 2018இல் உச்சநீதிமன்றம், பெண்கள் மசூதிக்குள் செல்வதற்கிருந்த தடையை நீக்கியது. இதைத் தருக்கா அறக்கட்டளை, பெண்கள் உள்ளிட்ட எல்லா இசுலாமியர்களும் பொதுவாக எதிர்த்தனர். ஆனால் மசூதியின் புனிதமெனக் கருதப்படும் பகுதிக்குள்ளும் பெண்கள் சுதந்தரமாகச் சென்றனர்.

2019 சனவரி 22இல் சபரிமலை தொடர்பான மறு ஆய்வு வழக்கை உச்சநீதிமன்றக் கூடத்தில் வெளிப்படை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இருக்கிறது. முடிவு எதுவாயினும் இந்தச் சிக்கலுக்கு அமைதியான தீர்வு எட்டப்படும் என நம்பலாம். சமய மரபு விளக்கப்படும் நிலையில் அவரின் 1600 காவிய மனைவிகள் மற்றும் அவரின் களியாட்டக் கோபியர்களுடன் இருக்கும் கிருஷ்ணனைப் பல பக்திப் பாடல்கள், என்றும் திருமணமாகாதவராகக் காட்டுவது எப்படி என்பதை அடிக்குறிப்பாகச் சேர்க்கிறேன்.

நன்றி : Times of India, 8-12-18

தமிழில் : **இரா. பச்சமலை**

## தாம்பரம்
## குபேரா ஜெய்சங்கர் மறைந்தார்



பெரியார் ஈ.வே.ரா சிந்தனைகள் இரண்டாவது முறையாகச் சென்னையில் வெளியிட்டபோது அதற்கான முன் பதிவு செய்ய சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் தாம்பரம் தோழர்கள் உடன் பெரும் பங்காற்றியவர் குபேரா ஜெய்சங்கர். ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோவின் இதயம் கவர்ந்தவராக குபேரா செய்சங்கர் இருந்தார். திராவிட இயக்கங்கள் குறிப்பாக பெரியார் இயக்கங்களுக்குப் பெரும் உதவியாக இருந்தார் கடந்த ஒரு வருடமாக உடல்நலம் குன்றிய நிலையில் சிகிச்சைப் பெற்று வந்தார். சிகிச்சையில் முன்னேற்றம் ஏற்பட்டு வந்த நிலையில் திடீரென 21.12.2018 அன்று மறைந்தார். அவரது அகவை 52.

குபேரா செய்சங்கர் அம்மா முன்னேற்றக்கழகம் மாவட்ட பொறுப்பாளர் இளம்வயதில் சாலை இளந்திரையன் சாலினி இளந்திரையன் அறிவியக்கப் பேரவையில் பணியாற்றினார். தோழர் ஆனைமுத்துவின் மீது அளவற்ற பற்று கொண்டவர். மா.பெ.பொ.க வின் நிகழ்சிகளில் மனதார பங்கேற்றார். பெரியார் நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளைக்கு கட்டடம் கட்ட பெரிய அளவில் நிதி திரட்டி அளித்தார். மறைந்த தோழர் குபேரா செய்சங்கருக்கு அஜிதா என்ற துணைவி, காவியா சுவாதி என இருமகள்களும் உள்ளனர்.

இறுதி நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் டி.கே.எம் சின்னையா தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ். ஆர். ராஜா, பாலவாக்கம் சோமு, தி.மு.க., அம்மா முன்னேற்றக் கழகம் காஞ்சிபுரம் மாவட்டச் செயலாளர் முன்னாள் தாம்பரம் நகராட்சி தலைவர் மா.கரிகாலன். திராவிடர் கழகக் காஞ்சி மாவட்டச் செயலாளர் முத்தையன் திமுக வேலுமணி, ம.தி.மு.க மணிவண்ணன் ராஜா வாசு தேவன். சிபிஐ எம் ஆர். கிருஷ்ணமூர்த்தி, கரிபால்டி. ஜி.வி.கோவிந்தன் ராஜன்மணி மா.பெ.பொ.க வின் ஆனை.பன்னீர்செல்வம் தாம்பரம் சுப்பிரமணி, கஸ்தூரி சுப்பிரமணி, காஞ்சனா ரவி, சூரியன் பாலாஜி, சூரியன் கோகுலன், கு.கிருட்டிணமூர்த்தி, கி.சேதுராசன், வி.இராச கோபால் என ஏராளமான தோழர்கள் பங்கேற்று இறுதி அஞ்சலி செலுத்தினர்.

## சிந்தனையாளர் வளர்ச்சி நிதி

முனைவர். பொறிஞர் ஆ.பாவேந்தர் - மருத்துவர் அன்புச்செல்வி இணையர் “சிந்தனையாளன்” வளர்ச்சி ரூ.5,000/- அளித்தனர்.

# சீனந்தல் அடிகளார் மறைந்தார் அந்தோ!



சீனந்தல் அடிகளார் என்கிற சிவசண்முக ஞானாச்சாரிய சுவமிகள் 26.12.2018 காலை 10.30 மணி அளவில் திருவண்ணாமலையில் தம் இளைய மகன் வீட்டில் தம் 98 ஆம் அகவையில் மறைந்தார் என்கிற செய்தி அறிந்து மிகவும் வருந்துகிறோம்.

இந்தியத் துணைக் கண்டத்தில் விஸ்வகர்மா எனப்படும் கம்மாளர்கள், கன்னட நாட்டு, லிங்காயத்துகள், கொங்கு நாட்டுக் கவுண்டர்கள் ஆகிய உள்சாதியினர் தங்கள் தங்கள் வீட்டு நிகழ்ச்சிகளுக்குப் பார்ப்பனப் புரோகிதரை அழைப்பதில்லை. கம்மாளர்கள் தங்கள் குடும்ப நிகழ்ச்சிகளுக்குப் பார்ப்பானை அழைக்காமல் தங்கள் சாதி கம்மாள உபாத்யாயர் எனப்படும் வாத்தியாரை வைத்து சமஸ்கிருத மொழியில் வேதப்படி நிகழ்ச்சிகளை நடத்திக்கொள்வார்கள்.

சீனந்தல் அடிகளார் 21.2.2005ஆம் நாள் வேலூரில் லோகநாத ஆச்சாரியின் பேத்தியும் ரூபம் ஆர்ட்ஸ் இரத்தினக் குமாரின் மகளுமான சிந்தனைக்கும் நீலகண்ட ஆச்சாரியின் பேரனும் தமிழறிஞர் தமிழவேள் என்கின்ற நீ.தங்கவேலன் மகனுமான மதிவாணனுக்கும் திருமணத்தைத் தமிழில் வே.ஆனைமுத்து ஆகிய என் முன்னிலையில் நடத்திவைத்த பெருமை சீனந்தல் அடிகளாரையே சேரும். இது வரலாற்றுச் சிறப்பு மிக்கது.

24.8.2007ஆம் நாள் சென்னை அம்பத்தூரில் எங்களுடைய பெரியார் ஈ.வெ.ரா.-நாகம்மை கல்வி, ஆராய்ச்சி அறக்கட்டளையின் கட்டடக் கால்கோள் விழவில் சீனந்தல் அடிகளார் பங்கேற்றார்.

13.9.2008ஆம் நாள் சென்னை இராசா அண்ணாமலை மன்றத்தில் டாக்டர் பொற்கோ தலைமையில், வே.ஆனைமுத்து, மருத்துவர் ச. இராமதாசு ஆகியோர் முன்னிலையில் நான் தமிழில் எழுதிய மாமனிதர் கியானி ஜெயில் சிங் எனும் நூலை சீனந்தல் அடிகளார் வெளியிட்டார். 2010ஆம் ஆண்டில் பெரியார் ஈ.வெ.ரா சிந்தனைகள் நூலின் விரிவாக்கம் செய்யப்பட்ட இரண்டாம் பதிப்புக்கு 7.2.2010ஆம் நாள் இரண்டாம் சென்னை அண்ணா சாலை பாவாணர் அரங்கில் முன் பதிவுத்தொகையின் முதலாவது தொகை ரூ.1,30,000/-ஐ சீனந்தல் அடிகளார் வே.ஆனைமுத்துவிடம் அளித்தார். அதனைத் தொடர்ந்து 19.2.2010ஆம் நாள் இரண்டாம் தவணையாக சேப்பாக்கம் சிந்தனையாளன் அலுவலகத்தில் ரூ.1,71,000/-ஐ அடிகளார் வே.ஆனைமுத்துவிடம் அளித்தார். இரண்டு தவணைகளையும் சேர்த்து அளிக்கப்பட்டது ரூ.3,01,000/- இது அந் நூலின் 86 படிகளுக்கு உரியது. 26.2.2012ஆம் நாள் சென்னை சேப்பாக்கத்தில் கோ.ரா.வெற்றியின் கருத்துக் கணிமம் நூல் வெளியீட்டு விழாவில் நானும் சீனந்தல் அடிகளாரும் பங்கேற்றோம். உரையாடலின்போது நான் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு விகிதாசார இடப்பங்கீடு பெறும் வேலையாக அடுத்த நாள் தில்லிக்குப் புறப்படப் போவதை அறிந்து அடிகளார் அந்தப் பணிக்காக தம் சமுதாயத்தினர் சார்பாக மேடையில் உரூபா பத்தாயிரம் நன்கொடையினை என்னிடம் அளித்து ஊக்குவித்தார். 12.6.2016 ஆம் நாள் பண்ருட்டி ரங்கா மகாலில் கியானி ஜெயில் சிங் பற்றி வே.ஆனைமுத்து ஆங்கிலத்தில் எழுதிய நூலினை சீனந்தல் அடிகளார் வெளியிட்டார். இதற்கு இடைப்பட்ட ஓர் ஆண்டில் ஒரு நாள் நாங்கள் எங்கள் கட்சியின் கொள்கை பரப்புரைப் பணியாக திருவண்ணாமலையில் தங்கிய நாளில் வே.ஆனைமுத்து, கலசம் மற்றும் கட்சித் தொண்டர் அடங்கிய குழுவினரை சீனந்தல் அடிகளார் தம் இல்லத்துக்கு அழைத்து உணவளித்து உபசரித்தார். தந்தை பெரியார், குன்றக்குடி அடிகளாரை மதித்து அவருடைய தமிழ் உணர்வை-தமிழின உணர்வைப் போற்றி தமிழ்ச் சமுதாய மேம்பாட்டுக்குப் பயன்படுத்திக் கொண்டது போல மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பிலும் ஒடுக்கப்பட்டோர் பேரவையின் சார்பிலும் நடைபெற்ற எல்லா நிகழ்ச்சிகளுக்கும் சீனந்தல் அடிகளாரின் மனமுவந்த ஒத்துழைப்பை எங்கள் பேரவையின் அனைத்திந்தியப் பொதுச்செயலாளர் கலச. இராமலிங்கம் எனும் கலசம் அவர்களின் ஒருங்கிணைப்புடன் பெற்றோம் என்பதை இந்த நேரத்தில் நன்றியுடன் நினைவுகூர்கிறோம்.

சீனந்தல் அடிகளார் பெரிதும் விரும்பி ஒத்துழைப்பு நல்கிய எல்லா வகுப்புகளுக்குமான விகிதாசார வகுப்புவாரிப் பங்கீடு பெற்றிடவதற்கு தொடர்ந்து பாடுபட உறுதிகொள்வோம்.


**வே.ஆனைமுத்து**
பொதுச் செயலாளர்,
மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி,
அம்பத்தூர், சென்னை-50
புரவலர்- தலைவர்,
(கைப்பேசி : 9444804980)
அனைத்திந்திய பிற்படுத்தப்பட்ட, பட்டியல் வகுப்பு,
பழங்குடியினர், மதச்சிறுபாண்மை பேரவை,
சென்னை-5.

# இவனும் அவனேதான்!

மனிதர்கள் எங்கெல்லாம் கூட்டமாகக் கூடுகின்றார்களோ, அங்கெல்லாம் திருடர்கள் அதிகம் திருடுகின்றனர். திருவிழாக்கள் கூட்டத்திலும், பேருந்து, இரயில் பயணத்தில் நெறித்து கொண்டு ஏறுமிடங்களிலும் திருட்டு அதிகம் நடைபெறுகின்றது. திருட்டில் பணத் திருட்டு, நகைத்திருட்டு, பொருள் திருட்டு, குழந்தைகள் கடத்தல் திருட்டு, அசந்தால் ஆடு, மாடுகள், மோட்டார் சைக்கிள், கார் போன்ற பொருள்களையும் திருடுகின்றனர். பூட்டிய வீடுகளில் கதவை உடைத்தும் திருடுகின்றனர். குடிப்பதற்குப் பணம் கிடைக்கவில்லையென்றால் சொந்த வீட்டிலேயே திருடுவது போன்ற பலவகைகளில் திருட்டுத் தொழில் நடைபெறுகின்றது.

இதுபோன்று வணிகர்களும் கூட்டமாக மக்கள் கூடிவிட்டால் பொருள்களின் விலையை அதிகப்படுத்தி விற்பது அல்லது எடைகுறைவாக விற்பது, தரம் குறைத்து விற்பது, கலப்படம் செய்து விற்பது, விழாக் காலங்களில் தள்ளுபடி என்று கூறிவிட்டு குறிப்பிட்ட பொருள்களில் விலையைக் குறைத்துவிட்டுப் பல பொருள்களின் விலையை அதிகப்படுத்தி விற்பது போன்ற வியாபாரக் கொள்ளையர்களும் நேர்மையற்ற முறையில் வணிகம் செய்கின்றனர், அனைத்து வணிகர்களும் ஒருபொழுதும் வரியை தன் வருவாயில் கட்டுவதில்லை. அனைத்து வரிகளும் நுகர்வோர்கள் தலையிலேயே கட்டி வசூல் செய்கின்றனர். இவர்களைக் கேள்வி கேட்க ஆளில்லாமல் அளவில்லாமல் மக்களைக் கொள்ளையடிக்கின்றனர்.

நம்மை ஆளும் அரசும் இதையேதான் செய்கின்றது. மக்களுக்கு நன்மை செய்வதாகக் கூறி அரசும் கொள்ளை தொழில் செய்கின்றது. உதாரணம்: கிரிவலம் செல்ல திருவண்ணாமலைக்கு சென்னையிலிருந்து பேருந்து கட்டணம் ரூ.150. ஆனால் இந்தப் பயண நெரிசலைப் பயன்படுத்தி பயணி எங்கு ஏறினாலும் இறங்கினாலும் ரூ.175 கட்டணம் என்று கட்டணக் கொள்ளையடிக்கின்றது. பாலில் தண்ணீர் கலந்து விற்று கோடிக்கணக்கில் கொள்ளையடிக்கின்றது. மின்கட்டணத்திலும் வைப்பு நிதியையும் அதிகரித்துவிட்டு கட்டணத்தையும் உயர்த்தியுள்ளது.

இதுபோன்று அப்பாவி மக்களை, கல்விக் கட்டணம், நுழைவுத் தேர்வு கட்டணம், பணி விண்ணப்பக் கட்டணம் என பல இலட்சம் பேரிடம் வாங்கிவிட்டு சில பேரை தேர்வு செய்கின்றது. உண்மையான திருடர்களுக்கும் ஆட்சியாளர்களுக்கும் என்ன வித்தியாசம்? இவனும் அவனே தான்!

**- உழவர் மகன் ப.வ.**

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி - சனவரி-2019

| | | |
|---|---|---|
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 500/- |
| **தமிழேந்தி** | அரக்கோணம் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| **வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **நா. மதனகவி** | வாணியம்பாடி | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **கோ.நக்கீரன்** | சோளிங்கபுரம் | 100/- |
| **க.பிரபாகரன்** | தஞ்சாவூர் | 100/- |
| **இரா.காந்தி** | வடக்கு மாங்குடி | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - சனவரி-2019

| | | | |
|---|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... | 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... | 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **அறிவுக்கடல் ராஜ்குமார்** | சிதம்பரம் | .... | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... | 100/- |


**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம்,** சென்னை-50. ☎ : 9597526990

Printed by **V. ANAIMUTHU** and Published by V. Anaimuthu on behalf of Marxist Periyarist Communist Party, and printed at Periyar Printers & Publishers Place of Printing No.277/2, Chennai-Tiruvallur High Road, Ambattur, Chennai-50. Editor : **V. ANAIMUTHU**